**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : Issued :

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஜனவரி 31, 2012—தொகுதி 18—எண் 1**

**Tuesday, the 31st January 2012—Volume 18—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**31–1–2012**

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


*ஆளுநரும் அமைச்சரவையும்* v-x

Governor and Council of Ministers xi-xv

*பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்* xvii-xx

*பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)* xxi-xxxi

**1. இரங்கற்குறிப்புகள்—**

*முன்னாள் உறுப்பினர்கள் மறைவு* 1-2

**2. வினாக்கள்–விடைகள்—**

*உடுக்குறியிட்ட வினாக்கள்* 3-41

**3. அறிவிப்புகள்—**

*(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்* 41

*(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் திறத்தல்* 64

**4. அறிக்கைகள் அளித்தல்—**

*அவை உரிமைக் குழு* 42

**5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, அளித்தல்—**

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 42-51

பக்கங்கள்

**6. அரசினர் தீர்மானம்—**

| | |
|---|---|
| திரு. டி.ஆர்.பி. ராஜா மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 10 சட்டமன்ற நாட்களுக்கு அவை நடவடிக்கைகளிலிருந்து அவரை நீக்கி வைத்தல் | 51-52 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 51-52 |

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—**

| | |
|---|---|
| *திருமதி ஆர். ராஜலட்சுமி | 53-64 |
| டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 53 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 65-69, 72-81 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 69-72, 74, 76-77,78-79 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 72-73, 91-92, 125-126, 128-130, 140-141 |
| *திரு. ஜெ. அன்பழகன் | 81-86, 88-92, 96-97, 99-100 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 82-83, 100-101, 102, 133, 138-139 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 83-86, 95-96, 101-102, 146,157 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 87, 93-94, 99, 100, 130-131, 138 |





பக்கங்கள்

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—**தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 87-90,92-93, 131-132,164 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 94, 95, 118-120 |
| *மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா | 97 |
| *மாண்புமிகு திரு. வி. மூர்த்தி | 97-98, 120-122 |
| *திரு. ஜே.சி.டி. பிரபாகர் | 103-115 |
| செல்வி கே. பாலபாரதி | 116-118, 120, 122-123, 125-134 |
| *மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் | 123-125 |
| மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி | 127-128 |
| திரு. சு. குணசேகரன் | 134-136, 139-146,155 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 136 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 137,161-162 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 142 |
| திரு. ச. பழனிச்சாமி | 147-153 |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 153-158 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 155 |
| மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா | 158-159 |
| திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் | 159-165 |

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 165-166

## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை

**2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள்

**3. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

**4. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

**5. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**6. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**7. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு



**10. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**11. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**12. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**13. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**16. ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் மற்றும் சத்துணவுத் திட்டம்

**17. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**18. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

கால்நடை பராமரிப்பு

**19. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**20. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

கைத்தறி மற்றும் துணிநூல்

**21. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு



**24. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**25. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**26. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**27. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

**28. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

தகவல் தொழில்நுட்பம்

**29. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்

**30. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

**31. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**32. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

**33. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Revenue** .. **The Hon. Thiru K.A. Sengottaiyan:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

**4. Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**5. Minister for Municipal Administration & Rural Development** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

6. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently abled and Social Reforms

8. **Minister for Higher Education** .. **The Hon. Thiru P. Palaniappan:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology

9. **Minister for Commercial Taxes & Registration, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Commercial Taxes & Registration and Stamp Act, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

10. **Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Damodaran:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development

11. **Minister for Co-operation..** .. **The Hon. Thiru Sellur K. Raju:**

Co-operation, Statistics and Ex-Servicemen Welfare



12. **Minister for Forests** .. **The Hon. Thiru K.T. Patchaimal:**

Forests and Cinchona

13. **Minister for Highways & Minor Ports** .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**

Highways & Minor Ports

14. **Minister for Food** .. **The Hon. Thiru R. Kamaraj:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru V. Moorthy:**

Milk and Dairy Development

16. **Minister for Rural Industries and Nutritious Noon Meal** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Rural Industries including Cottage Industries and Small Industries and Nutritious Noon Meal

17. **Minister for Public Works** .. **The Hon. Thiru K.V. Ramalingam:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works

18. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru T.K.M. Chinnayya:**

Animal Husbandry

19. **Minister for Industries** .. **The Hon. Thiru P. Thangamani:**

Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

20. **Minister for Handlooms & Textiles** .. **The Hon. Dr. S. Sundararaj:**

Handlooms & Textiles

21. **Minister for Khadi and Village Industries** .. **The Hon. Thiru P. Sendur Pandian:**

Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan

22. **Minister for Tourism** .. **The Hon. Tmt. S. Gokula Indira:**

Tourism, Tourism Development Corporation

23. **Minister for Environment** .. **The Hon. Thiru B.V. Ramanaa:**

Environment and Pollution Control

24. **Minister for Adi Dravidar & Tribal Welfare** .. **The Hon. Thiru N. Subramanian:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

25. **Minister for Transport** .. **The Hon. Thiru V. Senthil Balaji:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.A. Jayapal:**

Fisheries and Fisheries Development Corporation

27. **Minister for School Education and Sports and Youth Welfare** .. **The Hon. Thiru N.R. Sivapathi:**

School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture

28. **Minister for Information Technology** .. **The Hon. Thiru N. Subramanian:**

Information Technology



29. **Minister for Information and Special Programme Implementation** .. **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**

Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto

30. **Minister for Labour** .. **The Hon. Thiru S.T. Chellapandian:**

Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment

31. **Minister for Health** .. **The Hon. Dr. V.S. Vijay:**

Health, Medical Education and Family Welfare

32. **Minister for Backward Classes and Minorities Welfare** .. **The Hon. Thiru A. Mohammedjan:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf

33. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru M.S.M. Anandan:**

Hindu Religious and Charitable Endowments

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. எல். வெங்கடேசன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

# 31—1—2012 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ம. பன்னீர் செல்வம், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ல. பத்மாவதி, பி.எஸ்சி., எஸ்.ஓ.ஜி.இ. | .. | குழு அலுவலர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | | |
|---|---|---|
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திரு. வே. ரவிசங்கர், பி.எஸ்சி., எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. சக்திவேலு, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி அ. ராஜலெட்சுமி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. இரா. விஜயகுமார், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. தேவபிரான், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. சுரேஷ் குமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | தலைமை நிருபர் |
| திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)

| பெயர்களும் | | தொகுதிகளும் |
|---|---|---|
| 1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. | .. | கலசப்பாக்கம் |
| 2. அசோக், திரு. எம்.கே. | .. | வேளச்சேரி |
| 3. அண்ணாதுரை, திரு. இரா. | .. | மதுரை தெற்கு |
| 4. அப்துல் ரஹீம், திரு. எஸ். | .. | ஆவடி |
| 5. அரங்கநாதன், திரு. ஆ.க. | .. | கீழ்பெண்ணாத்தூர் |
| 6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. | .. | திருத்தணி |
| 7. அருண் பாண்டியன், திரு. செ. | .. | பேராவூரணி |
| 8. அருள்செல்வன், திரு. ஆர். | .. | மயிலாடுதுறை |
| 9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. | .. | சேலம் வடக்கு |
| 10. அழகுவேலு, திருமதி க. | .. | கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 13. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 14. அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்— திருவல்லிக்கேணி |
| 15. அஸ்லம் பாஷா, திரு. அ. | .. | ஆம்பூர் |
| 16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 17. ஆறுமுகம், திரு. எம். | .. | வால்பாறை (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். | .. | திருப்பூர் வடக்கு |
| 19. இந்திராகாந்தி, திருமதி த. | .. | துறையூர் (செ.வ.) |

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
31. கனிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
48. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
49. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
50. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
51. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
52. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
53. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
54. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
56. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
57. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
58. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
59. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
60. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
62. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
63. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
64. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு
65. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
67. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
68. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
69. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
70. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
71. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
72. சாமி, திரு. ஆர். .. மேலூர்
73. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
74. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
75. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
76. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
77. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
78. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
79. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
80. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
81. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
82. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
83. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
84. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
85. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
86. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
87. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)
88. சுரேஷ்குமார், திரு. டி .. செங்கம் (செ.வ.)



89. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
90. செங்கோட்டையன், திரு. கே.ஏ... கோபிசெட்டிப்பாளையம்
91. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
92. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
93. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
94. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
95. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
96. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
97. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
98. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
99. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
100. செழியன், திரு. கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
101. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
102. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
103. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
104. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
105. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
106. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
107. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
108. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடானை
109. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
110. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு
111. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)

112. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)

113. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)

114. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி

115. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)

116. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்

117. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்

118. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

119. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)

120. தினகரன், திரு. க. .. சூலூர்

121. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்

122. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு

123. துரைமுருகன், திரு. .. காட்பாடி

124. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

125. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்

126. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்

127. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்

128. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

129. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)

130. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்

131. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)

132. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்

133. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



134. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி

135. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)

136. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி

137. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு

138. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்

139. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்

140. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி

141. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்

142. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி

143. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்

144. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்

145. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி

146. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

147. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்

148. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்

149. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்

150. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்

151. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி

152. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்

153. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்

154. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்

155. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்

156. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

157. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்
158. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
162. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)
163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை
164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)
165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
166. போஸ், திரு. ஓ.கே. .. மதுரை வடக்கு
167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)
168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்
169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு
170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு
171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்
172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்
173. மனோரஞ்சிதம், திருமதி. .. ஊத்தங்கரை (செ.வ.)
174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)
175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்
176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி
177. முத்துக்குமரன், திரு. எஸ்.பி. .. புதுக்கோட்டை



178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்
179. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
180. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்
181. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
182. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு
183. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி
184. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை
185. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்
186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்
189. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்
190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்
191. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்
192. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)
193. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)
194. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்
195. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி
196. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி
197. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்
198. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்
199. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

206. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

218. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். .. பழனி

219. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

221. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்



222. வைகைச்செல்வன், டாக்டர் .. அருப்புக்கோட்டை

223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

224. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

226. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

227. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

228. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

229. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

230. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

232. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

233. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

234. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் .. நியமனம்

235. (வெற்றிடம்) .. சங்கரன்கோவில் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ. நவநீதகிருஷ்ணன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 17

## 2012 ஜனவரி 31, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னும் செருக்கு"*

பிறருக்கு உதவி செய்தல் என்னும் மிக உயர்ந்த பண்பு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு வெற்றி அடைபவரிடமே நிலைத்து நிற்கும்.

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. டி.என். வடிவேல் அவர்கள் 24–12–2011 அன்றும், திரு. வி.இரா. கிருஷ்ணசாமி அவர்கள் 30–12–2011 அன்றும், திரு. செ. தாமோதரன் அவர்கள் 8–1–2012 அன்றும், திரு. ஆ.மு. இராமசாமி அவர்கள் 12–1–2012 அன்றும், திரு. வி. வேதய்யன் அவர்கள் 17–1–2012 அன்றும், திரு. பி.எஸ். மணியன் அவர்கள் 23–1–2012 அன்றும் மற்றும் திரு. கோ. மோகனதாசன் அவர்கள் 24–1–2012 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.என். வடிவேல் அவர்கள் 1965 முதல் 1967 வரை தருமபுரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்.

திரு. வி. இரா. கிருஷ்ணசாமி அவர்கள் 1985 முதல் 1988 வரை அணைக்கட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்.

திரு. செ. தாமோதரன் அவர்கள் 2001 முதல் 2006 வரை விருதுநகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்.

திரு. ஆ. மு. இராமசாமி அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் இரண்டு முறை ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

திரு. வி. வேதய்யன் அவர்கள் 1957 முதல் 1962 வரை திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்.

திரு. பி.எஸ். மணியன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் இரண்டு முறை சோழவந்தான் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.

திரு. கோ. மோகனதாசன் அவர்கள் 1996 முதல் 2001 வரை பூம்புகார் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)





## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**1—**

### சிறுசேமிப்பு

***5110—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்குப் பயன்தரும் சிறுசேமிப்புத் துறை மூலமாகத் திரட்டப்படும் சிறுசேமிப்புத் தொகையைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் அஞ்சலகங்களில் செயல்படும் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாகத் திரட்டப்படும் தொகையைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகச் சிறுசேமிப்புத் துறையிலே ஈட்டப்படக்கூடிய வருவாயை மத்திய அரசு, மாநில அரசுக்கே மானியமாக வழங்குகிறது. 2005–2006 ஆம் நிதியாண்டில் 5,594.13 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஆனால், அதற்குப் பிறகு சிறுசேமிப்புத் துறைமூலமான வருமானம் குறைந்து கொண்டே வருகிறது. 2010–2011 ஆம் நிதியாண்டில்

ரூ. 516.32 கோடியாக வருவாய் குறைந்துவிட்டது. இதற்கான காரணம் கிசான் விகாஸ் பத்திரம், National Savings Schemes, R.D. போன்றவற்றிற்கு Post Office–இல் இருந்துகொண்டே கவுன்டரில் வரக்கூடிய வாடிக்கையாளர்களிடம் பணம் வசூலிக்கிறார்கள். ஏஜென்ட் வெளியே சென்று பணம் வசூலித்தால் நிச்சயமாக வருமானம் கூடும். Online System–ஐத் தெரிந்துகொண்டால் அதன்மூலமாக நல்ல வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவிப்பதோடு, நல்ல விழிப்புணர்வையும் ஏற்படுத்தி Schools, Colleges, தொழில் நிறுவனங்களிலுள்ள Employees, வியாபாரிகள் மற்றும் வணிகர்கள் மத்தியிலே Agent–களை நியமித்தால் நிச்சயமாக நல்ல வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை வைக்கிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வட்டி விகிதம், அஞ்சலக சேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வட்டியைவிட அதிகமாக இருந்ததால் சிறுசேமிப்பு திட்டங்களின்மீது பொதுமக்களிடம் ஆர்வம் குறைந்திருந்தது. மேலும், 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து சிறுசேமிப்பிற்கான இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை. கடந்த ஆண்டுகளில் சிறு சேமிப்பிற்கான விளம்பரங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் விளம்பரங்கள் வழங்கப்படவில்லை. அதனால் மக்களிடையே விழிப்புணர்வு குறைந்திருந்தது. மேலும், மத்திய அரசு, முகவர்களுக்கான தரகுத் தொகையை, 1–12–2011–இலிருந்து குறைத்துள்ளது. ஆனாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு முகவர்களுக்கான ஊக்கத் தொகையை 31–3–2012 வரை குறைக்காமல் முன்பிருந்த அளவிலேயே வழங்க உத்தரவிட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதும் கீழ்க்கண்டவாறு முகவர்கள்



உள்ளனர். நிலைப்படுத்தப்பட்ட முகவர் அமைப்புத் திட்டம், கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8–ஆவது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கு 8,790 முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மகளிர் முகவர் திட்டத்தின்கீழ் தொடர் வைப்புத் திட்டம், அஞ்சலக தொடர் வைப்பு சேமிப்புத் திட்டத்திற்கு 21,699 முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ், பொது வருங்கால வைப்பு நிதிக்கு 626 முகவர்கள் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆக, பல்வேறு அஞ்சலக சேமிப்புத் திட்டங்களுக்காக 31,115 முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். முகவர்கள் திரட்டும் முதலீடுக்காக அவரவர்களுக்குக் கீழ்காணும் விதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1–12–2011 முதல் தரகுத் தொகை வீதங்களை மாற்றியமைத்துள்ளது. நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டத்தின்மூலமாக மத்திய அரசு 30–11–2011–க்கு முன்பாக ஒரு சதவிகிதம் தரகுத் தொகையை வழங்கிக்கொண்டிருந்தது. ஆனால், 1–11–2011 முதல் 0.5 சதவிகிதமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, அந்த ஊக்கத் தொகையைத் தொடர்ந்து 0.5 சதவிகிதமாக வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டத்தின்கீழ் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்திற்கு ஒரு சதவிகிதம் முகவர் நிதியை மத்திய அரசு வழங்கிக் கொண்டிருந்தது. அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்தின்கீழ் 0.5 சதவிகிதம் தரகுத் தொகையை வழங்கிக் கொண்டிருந்த மத்திய அரசு இப்போது அதையும் நிறுத்தி வைத்திருக்கின்றது. ஆனால், சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஒன்றிய அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் சம்பளப் பட்டியல், சேமிப்புத்

[2012 ஜனவரி 31

திட்டக் குழுத் தலைவர்கள் ஆகியோருக்குச் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையில் வெகுமதிகள் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய கேள்வி* online*–ஐ அறிமுகப்படுத்தினால் நிச்சயமாக அதிக அளவிலே நம்முடைய சேமிப்பு அதிகமாகும் என்பதுதான். ஆகவே, அதற்கான பதிலைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புமூலம் சேமித்து வைக்கிற திட்டத்திற்கு நேரடியாக 31,115 முகவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் நேரடியாக ஆங்காங்கே சென்று சிறுசேமிப்புத் திட்டத்தினுடைய பலன்களை எடுத்துச் சொல்லி சிறுசேமிப்புத் திட்டத்திற்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்கின்ற வகையில், முகவர்கள் அங்கே சென்று சிறுசேமிப்பு நிதியைப் பெறுகின்றார்கள். நேரடியாகவே சென்று அவர்கள் பெறுகின்ற சூழ்நிலையிலும்கூட, வட்டி விகிதம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தச் சரிவு ஏற்பட்டிருந்தது. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சொன்ன கருத்து, அரசின் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 ஜனவரி 31]

**2—**

## துணை மின் நிலையம்

***4161—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உசிலம்பட்டி தொகுதியில் விக்கிரமங்கலம், வாலாந்தூர், கல்யாணிப்பட்டி, எழுமலை, சாட்டூர் ஆகிய பகுதிகளுக்குப் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) உசிலம்பட்டி தொகுதி, வாலாந்தூர் பகுதியில், 110/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று அமைக்க, 12–ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.*

*(ஆ) உசிலம்பட்டி தொகுதி, எழுமலை, கல்யாணிப்பட்டி, விக்கிரமங்கலம், சாட்டூர் ஆகிய பகுதிகளுக்குப் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க அவசியம் தற்போது இல்லை. மேலும், பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு விக்கிரமங்கலம் மற்றும் சாட்டூர் பகுதிகளில் தற்போது இயங்கிவரும் மின் மாற்றிகளின் திறனை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

**திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியில், குறிப்பாக கிணறுகளை*

[2012 ஜனவரி 31

நம்பியும், bore–களை நம்பியும் விவசாயம் நடந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் விக்கிரமங்கலம், வாலாந்தூர்–குறிப்பாக வாலாந்தூரில் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்ட மின்சாரம் வரும் என்று சொல்கின்றார்கள். கடந்த ஐந்தாண்டுக் காலமாக தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோன்று, கல்யாணிப்பட்டி பகுதியில், பூ விவசாயம் செய்கிறார்கள். அந்தப் பகுதிக்கும் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதேபோன்று, எழுமலை, சாட்டூர் பகுதிகளிலும் துணை மின் நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் காலக்கட்டத்தில், நடைமுறையில் சாத்தியம் இல்லை என்கிறார்கள். ஆனால், விவசாய மக்கள் அதையே நம்பி இருக்கிறார்கள். அதனால் அரசு கவனம் செலுத்தி, அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது வாலாந்தூர் பகுதியில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க பன்னிரண்டாவது திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தைத் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுபோன்ற திட்டம் வருவதாக கடந்த ஐந்தாண்டுக் காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; ஆனால், இன்னும் வரவில்லை என்று சொல்கிறார்கள். கடந்த 5 ஆண்டுக் காலம் என்பது வேறு; இப்பொழுது இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலம் என்பது வேறு. கடந்த 5 ஆண்டுக் காலமாகத் தாமதப்படுத்தப்பட்டு வந்த அந்தப் பணி, இப்போது விரைவாகச் செயல்பட்டுவரும் அம்மாவின் அரசு, விரைந்து செயல்பட்டு அந்தத் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிலம் கையகப்படுத்தும் பணிகளில்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு,



2012 ஜனவரி 31]

தங்களுடைய மேலான ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, விக்கிரமங்கலம் பகுதியில் ஏற்கெனவே இயங்கிவருகின்ற 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்தில் இப்போது 1 x 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி இயங்கிக்கொண்டிருக்கிறது. பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, தற்பொழுது புதியதாக துணை மின்நிலையம் அமைக்கவில்லை என்றாலும்கூட, இப்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் துணை மின் நிலையத்தின் தரத்தினை உயர்த்தி 1 X 8 எம்.வி.ஏ. ஆக உயர்த்திட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, கல்யாணிப்பட்டி பகுதியில், மொண்டிக்குண்டு பகுதியில் இயங்கி வருகின்ற 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையத்திலிருந்து இப்பொழுது மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இங்கே அதற்கும் புதிய துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே இயங்கி வருகின்ற துணை மின் நிலையத்திலே 2 x 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் இயங்கிவருகின்றன. இப்பொழுது அங்கே 9.716 எம்.வி.ஏ. திறன்கொண்ட அளவே போதுமானது. ஆகவே, தேவைக்கு அதிகமாக அங்கே மின் வசதி இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்திலே புதியதாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, எழுமலை பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைக்கக் கேட்டிருக்கின்றீர்கள். எழுமலையில் ஏற்கெனவே 110/11 கி.வோ. மின் திறன் கொண்ட துணை மின் நிலையத்தில் 2 x 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. இதன் அதிகபட்சத் தேவையே 12.78 எம்.வி.ஏ. மின் திறன்தான். ஆகவே, இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குத் தேவையான அளவிற்குப் போதுமான மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது என்பதையும், இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிரச்சினை இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்பு அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

[2012 ஜனவரி 31

*முற்பகல் 10–15*

இப்பொழுது சாட்டூர் பகுதிக்கு 33/11 கிலோவோட் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இங்கே ஏற்கெனவே 1 X 10 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றி இயங்கி வருகிறது. இதிலே மின் திறனை அதிகரிப்பதற்காக கூடுதலாக 2 X 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியாக தரம் உயர்த்துவதற்கு இப்பொழுது நிருவாக அனுமதி வழங்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெறுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள நான்கு இடங்களில், இரண்டு இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், இரண்டு இடங்களிலே ஏற்கெனவே இயங்கி வருகின்ற துணை மின் நிலையங்களின் தரத்தை உயர்த்துவதற்கும் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தை அளித்திருக்கின்றார்கள். Please sit down. இதற்குமேல் என்ன கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். மொண்டிக்குண்டு பகுதியில் ஏற்கெனவே துணை மின் நிலையம் இருக்கிறது; அதனால் கல்யாணிப்பட்டி பகுதிக்குக் கொடுக்க இயலாது என்கிறார். கடந்த 15, 20 நாட்களாக அந்த மொண்டிக்குண்டு பகுதியில் உள்ள புதுக்கோட்டையில் டிரான்ஸ்ஃபார்மர் பழுதாகி, குடிதண்ணீர் இல்லை என்று நேற்று நான் செயற்பொறியாளரிடம் பேசி, புதிய டிரான்ஸ்ஃபார்மரைக் கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். அங்கேயே மின் பற்றாக்குறை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் கல்யாணிப்பட்டிக்கு கண்டிப்பாகத் தேவை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்யாணிப்பட்டிக்கும், மொண்டிக்குண்டுவுக்கும் பக்கத்து ஊர்க்காரன்தான் நான். அதனால் தெரியும். 2 கிலோ மீட்டர் தூரம்தான். ஏற்கெனவே 2 கிலோ மீட்டர் தூரத்தில் அங்கே ஒரு துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அதிலிருந்து போதுமான அளவிற்கு அங்கே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல பழுதடைந்த மின்மாற்றிகளை உடனுக்குடன் மாற்றி அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய நெஞ்சமெல்லாம் நிறைந்த எங்கள் தலைவர் கேப்டன் அவர்களுக்கு வணக்கம். எனது மயிலாடுதுறை தொகுதிக்கு உட்பட்ட நீடூர் பகுதியில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க இடம் வாங்கப்பட்டுவிட்டது. திட்ட மதிப்பீடும் செய்யப்பட்டு அனுப்பப்பட்டதாகத் தெரிய வருகிறது. அதைப்போல, மணக்குடி பகுதியில் 33/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க இடம் வாங்கப்பட்டு, திட்ட மதிப்பீடும் அனுப்பப்பட்டதாகத் தெரிய வருகிறது. அங்கே உடனே பணி தொடங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு) மூலக் கேள்வி கேட்டவர்களுக்குத்தான் துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புத் தரப்படும்.

[2012 ஜனவரி 31

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் மின்னழுத்தம், மின் திருட்டு, மின் கசிவைத் தடுத்து சீரான மின் விநியோகத்தை அனைத்துப் பகுதி மக்களுக்கும் தருவதற்குக் கூடுதலாக . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மூலக் கேள்வி sub station அமைப்பது சம்பந்தமானது. Energy theft–க்குத் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடு) துணை மின் நிலையத்திற்கும், மின் திருட்டிற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதற்காகக் கூடுதலாக துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பொழுது தமிழ்நாட்டில் எத்தனை துணை மின் நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன? இப்பொழுது இருக்கிற நிபந்தனைகளைத் தளர்த்தி, கூடுதலாக மின் நிலையங்களை அமைப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதாவது உண்டா என்பதைத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டைப் பற்றிச் சொன்னார்கள். மின் திருட்டைப் போக்குவதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனேயே அதைத் தடுத்து நிறுத்துவதற்காக இராணுவத்திலிருந்து பணி ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, தனியாக ஒரு குழுவை அமைத்து ஆங்காங்கே மின் திருட்டைக் கண்டுபிடிக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பொழுது அந்தக் குழு இயங்கி, ஏறத்தாழ 56 கோடி ரூபாய் அளவிற்கு மின் திருட்டைக் கண்டுபிடித்து இருக்கிறது. மிக விரைவாக அக்குழு செயல்பட்டு வருகிறது. ஆகவே, மின் திருட்டைக் குறைப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு கடுமையான முயற்சிகளைத் தீவிரமாக எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஜனவரி 31]

புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு 12–ஆவது திட்டக் காலத்திலே, திட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு, எந்தெந்த இடங்களில் தேவைப்படுகிறதோ அந்தந்த இடங்களில் எல்லாம் அமைப்பதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர், பெரம்பூர், மாதவரம் ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் பயன்தரத்தக்க வகையிலே sub station அமைக்கப்பட வேண்டுமென்று மகாகவி பாரதி நகரிலே அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்தும், ஆண்டுக் கணக்கில் நிலுவையில் இருக்கிறது. கடுமையான voltage drop–ஆல் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மின்மாற்றிகள் மாற்றுவதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டு எல்லாம் முடிந்தும், பீங்கான் இல்லை; அல்லது ஒரு சின்ன பொருள் இல்லையென்று மாதக் கணக்கில் காத்திருக்கிறார்கள். மாணவர்களின் படிப்பும் மற்றவையும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, இவற்றை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாக அம்மாவினுடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஜனவரி 31

3—

## சாலைகள் சீரமைப்பு

*5070—**செல்வி கே. பாலபாரதி:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவுற்ற பகுதியில் சாலைகளைச் சீரமைக்கும் பணியை விரைவில் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) திண்டுக்கல் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நிறைவுற்ற சாலைகளைச் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலைப் பணிகளை விரைந்து முடித்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல்லில் 2008 ஆம் ஆண்டு இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி தொடங்கப்பட்டது. பணியின் ஒரு பகுதி என்பது 28 வார்டுகளில் நிறைவு பெற்றிருக்கிறது. அடுத்த பகுதியில் தொடங்கக்கூடிய சூழ்நிலையில், முதல் பகுதியில் சாலைகள் அமைப்பதற்கு நிதி என்பது தேவைப்படுகிறது. இதுவரை இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் முடிவுற்ற பகுதிகளில் மீண்டும் சாலைகள் அமைப்பதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகராட்சி 181.73 கிலோ மீட்டர் சாலைகளை உள்ளடக்கிய ஒரு நகராட்சி. இதில் முதல் கட்டப் பணியாக குழாய்கள் அமைக்கின்ற பணி 97.49 கிலோ மீட்டர் நீளத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் 66 கிலோ மீட்டர் தூரம் குழாய்கள் பதிக்கப்பட்டுவிட்டன. இதில் 13.5 கிலோ மீட்டர் தூரத்தில் சாலைகள் செப்பனிடப்பட்டு, சீர் செய்யப்பட்டுவிட்டன. 19.6 கிலோ மீட்டர் தூரத்தில் 10.13 கோடி ரூபாய் செலவு செய்து இப்போது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், நேற்று 30–1–2012 அன்று 20.00 கிலோ மீட்டர் தூரத்திற்கு 8.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 12.90 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை, பிற்படுத்தப்பட்ட பகுதி மானிய நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு செப்பனிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரத்தோடு இணைந்து இன்னொரு பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். திண்டுக்கல் என்பது மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கிறது. பழைய பேருந்து நிலையத்திலேதான் பேருந்து நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மிகவும் நெருக்கடியான இடம். போக்குவரத்திற்கு மிக பாதிப்பாக இருக்கிறது. பல சிறிய மாவட்டங்களிலெல்லாம் புறநகர்ப் பேருந்து நிலையங்கள் நவீன வசதிகளோடு உருவாக்கப்பட்டுள்ள இக்காலக்கட்டத்தில், திண்டுக்கல் மாவட்டத்தின் தலைநகரத்திற்குள் புறநகர்ப் பேருந்துகள் வந்து செல்லக்கூடிய வகையில் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் யோசித்து, அதை நிறைவேற்ற முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[2012 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திலே இந்தத் துணை வினாவை வைத்திருக்கிறார். ஆனால், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தனியாகவே வந்து என்னைச் சந்தித்து, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே உடனடியாக எங்களுக்கு ஒரு பேருந்து நிலையத்தைக் கொடுக்க வேண்டும் என்று பலமுறை என்னை வற்புறுத்தியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், திண்டுக்கல் நகரம் 2,07,500 மக்கள்தொகை கொண்ட ஒரு நகரம். வியாபாரத் தலம் உள்ள நகரம். மதுரைக்கு அடுத்தபடியாக பெரிய நகரமாகவும் இருக்கிறது. மேலும், பல்வேறு பகுதிகளிலிருந்தும் பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. நெரிசலான பகுதியாக இருக்கின்ற இதுபோன்ற நகரங்களில், வெளிப்புறங்களில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் விழுந்திருக்கிறது. அதனடிப்படையில்தான், நகர்ப்புற உள் கட்டமைப்புகளுக்காக இந்த நிதியாண்டில் புதியதாக ஒரு முயற்சியை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதற்காக 1,250 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.*

*முற்பகல் 10–25*

*சென்னை மாநகராட்சிக்கு 500 கோடி ரூபாயும் மற்ற நகராட்சி, பேரூராட்சிகளுக்கு 750 கோடி ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். திண்டுக்கல் நகராட்சியைப் பொறுத்தவரையில் புதிய பேருந்து நிலையம் உருவாவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உடனடியாக அங்கு புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளை முதலிலே தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*இராமநாதபுரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு, சென்ற ஆட்சியிலே மெதுவாக நடந்து, இப்பொழுது மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி மலர்ந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் எல்லாப் பணிகளும் முடிவடைந்துவிட்ட நிலையில், இறுதியாக சுத்திகரிப்பு ஆலைக்குத் தேவையான உபகரணங்கள் ஒப்பந்தக்காரரால் இதுவரை கொடுக்கப்படாததன் காரணமாக அந்தப் பணிகள் முடிவடையாமல் இருக்கின்றன. அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கும், அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுவதற்கும் இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திட்டம், இராமநாதபுரம் நகரத்தில் கடந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் கொண்டுவரப்பட்ட திட்டம். இதுபோன்று ஆரம்பக் கட்டத்திலேயே அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருந்தால், தாங்கள் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்தபொழுதே அதன் தொடக்க விழாவிலும் கலந்துகொண்டு அந்த நிகழ்ச்சியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இறுதிக் கட்டத்தில் வந்ததால் நிறைவேற்ற இயலவில்லை. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி வந்திருக்கிறது. விரைவாக அந்தப் பணி முடிக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் பணி தொடங்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2012 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் நகராட்சியைப் பொறுத்தவரை கேட்கப்பட்ட கேள்வியைப் போன்றதுதான் இது. சென்ற நிதிநிலை அறிக்கையில் நாகர்கோவில் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை இந்த அரசு அறிவித்திருந்தது. அந்த அடிப்படையில், அதன் பணிகள் எந்த அளவிலே உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று, அருகிலுள்ள எனது தொகுதியிலுள்ள குழித்துறை நகராட்சிக்கும் இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக எல்லா நகராட்சிகளுக்கு மட்டுமல்ல; எல்லா பேரூராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த இரண்டு கோரிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதி, தேனி நகராட்சியில் கடந்த ஆறு மாத காலமாக பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பணிகள் நடந்த பகுதிகளில் சாலைகள் போடப்பட்டு, மேடு பள்ளங்கள் உடனுக்குடன் நிரப்பப்படும் என்று சொன்னார்கள். ஆறு மாத காலத்தில் அந்தப் பணிகள்



2012 ஜனவரி 31]

நிறைவு செய்யப்படாததால் ஊரெல்லாம் பெரிய அளவுக்குப் பயணிக்க முடியாத நிலை இருக்கிறது. அதைக் கடந்த முறை சொன்னதுபோல, பணிகள் முடிந்த பகுதிகளில் மூன்று மாதம், நான்கு மாதம் இடைவெளியான உடனேயே அந்தப் பாதைகளைப் போட்டால் மக்கள் நடமாடுவதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தேனி நகராட்சியில், கடந்த ஆட்சியில் அந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. கடந்த ஆட்சியில், முழுமையாக பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு உடனடியாக சாலை அமைப்பதற்கு உரிய நிதியாதாரங்களை அவர்கள் உருவாக்கிக் கொடுக்கவில்லை. அந்தத் திட்டத்தோடு நிறுத்திவிட்டார்கள். இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு சாலை வசதிகளை மேம்படுத்துவதற்காகத் தனியாக நிதியை உருவாக்கிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் இப்பொழுது திண்டுக்கல் நகராட்சியில்கூட part by part ஆக, கிட்டத்தட்ட 13.5 கிலோ மீட்டர் முடிக்கப்பட்டிருக்கிறது. அடுத்தது 19.6 கிலோ மீட்டருக்கு 10.13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 20 கிலோ மீட்டருக்கு நேற்று 8.8 கோடி ரூபாய்க்கு பணி உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. நகராட்சி உள்கட்டமைப்புத் திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோமே, அதன் அடிப்படையிலே அந்தப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அதைத் தொடர்ந்து தேனி நகராட்சியினுடைய சாலைகளும் செப்பனிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போடுகின்ற திட்டங்களில் எல்லாம் சாலைகள் மேம்படுத்துவதற்காக safety நிதி ஆதாரங்களை உருவாக்கி திட்டங்கள் முறைப்படுத்தப்படுகின்றன. கடந்த ஆட்சிக் காலத்திலே அதை விட்டுவிட்ட காரணத்தால்தான் இவ்வளவு சிரமங்கள் வருகின்றன. அந்தச் சிரமங்களை உடனடியாகச்

சீர்செய்து அந்தந்த நகராட்சிகளில் மக்கள் மகிழ்ச்சியாகச் செல்வதற்கு சாலைகள் செப்பனிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதாளச் சாக்கடைத் திட்டம், பாதாளம் மாதிரி நீண்டு கொண்டே போகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகராட்சியில், புதுக்கோட்டை ஊராட்சி என்கிற பகுதி இப்போது புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்டதோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் அந்தப் பகுதிக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு, புதுக்கோட்டை நகராட்சியிலே இப்போது விரிவுபடுத்தப்பட்ட பகுதியில் கூடுதலாக ஒரு புறநகர்ப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் நிலுவையிலே இருக்கிறது. அதற்குத் தேவைப்படுகிற இடமும் எங்களிடத்திலே தயார் நிலையிலே இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அவற்றை நிறைவேற்றித் தருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புதுக்கோட்டை உறுப்பினர் அவர்கள் நிறைய கேள்விகளைக் கேட்கிறார். கேள்விகளைக் கேட்டு, அதற்குரிய விடை கிடைத்த பிறகு, நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி கூறுவார் என்று சொன்னால், நன்றி கூறவே மாட்டேன் என்கிறார். (சிரிப்பு)





புதுக்கோட்டை நகராட்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.10.00 கோடி இப்போது கொடுத்து, அங்கே சாலைகள் மிக அழகாகச் செப்பனிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நன்றி சொல்வார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், நன்றி சொல்லவில்லை. அடுத்த கோரிக்கையை மட்டும் வைத்துக்கொண்டிருக்கிறார். நன்றி சொல்லவில்லை என்று சொன்னாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் அந்தத் திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றுவார்கள். புதிய பேருந்து நிலையம் அமைக்க வாய்ப்பு இருப்பின், அந்தப் பேருந்து நிலையமும் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி கேட்க அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே தினசரி சாக்கடைப் பிரச்சினை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஆய்வு செய்தார்கள். தினசரி எழும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதுகுறித்து மாநகராட்சியிலே கேட்டால் நிதி இல்லையென்று சொல்கிறார்கள். தயவுசெய்து அதைத் தீர்ப்பதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லதொரு பதிலைச் சொல்வார்கள் என்று நம்புகிறேன். நல்ல பதில்களை அவைக்குச் சொல்லிக்கொண்டு வருகிறார். நடவடிக்கை எடுப்பதுகுறித்து தயவுசெய்து உறுதியான பதிலைச் சொல்லுங்கள். காலையில் எழுந்தால் மதுரை மக்கள் தினசரி சாக்கடைப் பிரச்சினையைப் பற்றித்தான் எனக்கு தொலைபேசிமூலம் தெரிவித்து, அதைத் தீர்த்துக்கொண்டு இருக்கிறேன். மதுரையிலே சாலைகள் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. தாங்கள் ஏற்கெனவே வந்து ஆய்வு செய்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** அங்கே மோசமான சூழ்நிலை இருக்கிறது. அதனால் நல்ல பதிலைச் சொல்லுங்கள்.

[2012 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதிக்குட்பட்டதோடு மட்டும் அல்லாமல் மதுரை மாநகராட்சியினுடைய சூழ்நிலையையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் பல்வேறு பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அந்தப் பணிகள் முழுவதும் கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட பணிகள். அந்தப் பணிகளை எடுத்த ஒப்பந்ததாரர்களுக்கு, கடந்தகால ஆட்சியில் உரிய நிதி ஆதாரங்களை உருவாக்கிக் கொடுக்காத காரணத்தால்தான் அந்த ஒப்பந்ததாரர்கள் அந்தப் பணிகளைப் பாதியில் நிறுத்திவிட்டுச் சென்று விட்டார்கள். அவர்களை மீண்டும் அழைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அந்தப் பணிகள் இப்போது மீண்டும் துவக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித் துவக்கப்பட்ட பணிகளை ஆய்வு செய்கின்றபோது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட வந்தார்கள். மாநகராட்சியைப் பற்றி ஆய்வு செய்கின்றபோது அந்தத் துறை அதிகாரிகளால் பதில் சொல்ல முடியவில்லை. காரணம், பதில் சொல்கின்றபோது பழைய ஆட்சியினுடைய நிலைமையை எடுத்துச்சொல்ல வேண்டிய ஒரு நிலைமை இருந்தது. அதை விடுத்து இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுத்து அதற்கு நிதியை TUFIDCO மூலமாகவும் மற்ற நிதி ஆதாரங்கள் மூலமாகவும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட சாலைகளை மேம்படுத்துவதற்காக, உள் கட்டமைப்புக்கு ரூ.18.5 கோடியை மதுரை மாநகராட்சிக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒதுக்கியிருக்கிறது. விரைவாக மதுரை மாநகராட்சியினுடைய எல்லா உள் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகராட்சி அண்மையில்



2012 ஜனவரி 31]

அறிவிக்கப்பட்ட புதிய மாநகராட்சி. கடந்த ஆட்சியின்போது பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருவதற்காக தோண்டப்பட்ட இடங்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவுறாத நிலையில், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட எல்லையில் சாதாரண இரு சக்கர வாகனங்கள்கூட செல்லமுடியாத அளவிற்கு மிக மோசமான நிலை இருக்கிறது. அந்தப் பணியை விரைந்து முடிப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகராட்சியினுடைய பணிகளை விரைந்து முடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சிதிலமடைந்த சாலைகளை மேம்படுத்துவதற்காக இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.750 கோடி நிதியை ஒதுக்கியிருக்கிறார்களே, அந்த நிதியிலிருந்து 13.75 கோடி ரூபாயை தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஒதுக்கி, அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஏற்கெனவே அந்தக் கால்வாய்த் தண்ணீர் நிறைய இடங்களில் தேங்கியுள்ளதால் பிரச்சினை இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் இப்போது ரூ.6 கோடி ஒதுக்கி அந்தக் கால்வாயைச் சீர்செய்து மழைக் காலங்களில் சகதியில்லாத ஒரு நல்ல மாநகராட்சியாக தூத்துக்குடி மாநகராட்சியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் பணிகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே உள்ளாட்சித் துறையின்மூலம் புதுக்கோட்டை

நகராட்சிக்கு ரூ.10 கோடியும், புதுக்கோட்டையிலுள்ள அத்தனை ஒன்றியங்களுக்கும் சேர்த்து ரூ.46 கோடியும், புதுக்கோட்டையிலுள்ள 8 பேரூராட்சிகளுக்கும் சுமார் ரூ. 20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சம் எனவும் அள்ளிக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாவட்ட மக்கள் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

### கல்லூரி

*5570—**திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் தொகுதியில் அறிவியல்–கலைக் கல்லூரிக்கு அரசினால் இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மலர்ந்து இரண்டே மாதங்களில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கிவைத்துப் புதிய வரலாற்றைப் படைத்தார்கள். அவற்றில் ஒன்றினைத்தான் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சட்டமன்றத் தொகுதியான ஸ்ரீரங்கத்திலும் தொடங்கப்பட்டது. ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்திலுள்ள தமிழ்நாடு





வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான பட்டா எண் 851, புல எண்கள் 497/2, 498/1 மற்றும் 498/2 ஆகியவற்றில் 19.13 ஏக்கர் நிலம் ஸ்ரீரங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடம் திருச்சிராப்பள்ளியிலிருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருச்சி–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அதாவது, N.H.–45 இல் அமைந்துள்ளது. தமிழக அரசின் உயர் கல்வித் துறைக்கு இந்த நிலத்தினை மாற்றம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மேலாண்மைக் கூட்டத்தில் அதாவது, 160 ஆவது Board of Management கூட்டத்தில் இசைவளிக்கப்பட்டு, அந்த நிலத்திற்கான நில மதிப்புத் தொகையினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கவேண்டுமென்று வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் முடிவுசெய்து, அரசின் வேளாண்மைத் துறைக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதன்மீது வேளாண்மைத் துறை தடையின்மைச் சான்றும், அதாவது கட்டடம் கட்டிக்கொள்ளலாம் என்ற தடையின்மைச் சான்றும் அளித்துள்ளது. கூடிய விரைவில் நிலம் கையகப்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளை எல்லாம் மிக விரைவாக, அரசாணைகளாக வெளியிடப்பட்டுள்ளதைக் கண்டு எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் திரு. சரத்குமார் அவர்கள் சார்பாகவும், எங்களது சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது என்ற இனிப்பான செய்தியை தெரிவித்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் செல்லத் தொகுதியான ஸ்ரீரங்கம் தொகுதி மக்களின் சார்பாகவும், எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலப் பரிமாற்றப் பணிகள் மற்றும்

[2012 ஜனவரி 31

கட்டுமானப் பணிகள் எப்போது முடியும் என்றும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கல்லூரி தற்காலிகமாக ஸ்ரீரங்கம் வட்டம், இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இயங்கி வருகிறது. அங்கே 203 மாணவ, மாணவியர் படித்து வருகிறார்கள். 13 ஆசிரியர் பணியிடங்களும், 17 ஆசிரியரல்லா பணியிடங்களும் ஆக, மொத்தம் 30 பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கே இளங்கலை ஆங்கிலம், இளங்கலை கணினி அறிவியல், இளங்கலை வணிகவியல் மற்றும் இளங்கலை கணிதம் போன்ற பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கட்டடம் எப்போது கட்டப்படும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். கூடிய விரைவில் நிலம் கல்வித் துறைக்கு வந்த பின்பு, ரூ.4 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடராச் செலவினமாக மரத் தளவாடங்கள் வாங்க ரூ.5 இலட்சமும், புத்தகம் மற்றும் பருவ நாளிதழ்கள் வாங்க ரூ.5 இலட்சமும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்க ரூ.5 இலட்சமும், கணிப்பொறிகள் (computers) மற்றும் சார்நிலை உபகரணங்கள் வாங்க ரூ.8.95 இலட்சமும், ஆக மொத்தம் 23.95 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பணிகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம், கட்டடம் கட்டுவதற்கு மட்டுமல்ல; இதுபோன்ற பணிகளைச் செய்வதற்கும் உத்தரவு வழங்கப்பட்டு, நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவில் நிலம் உயர் கல்வித் துறைக்கு வந்தவுடன் முறைப்படி டெண்டர் விடப்பட்டு, விரைவில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.



2012 ஜனவரி 31]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவையில் நின்று என் தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கேட்பதற்குக் காரணமாக இருந்த, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர், முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், துணை முதல்வர் டாக்டர் தளபதி அவர்களுக்கும், தேர்தலில் பணியாற்றி என் வெற்றி வாய்ப்புக்குத் துணை புரிந்த அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற திருவிடைமருதூர் தொகுதியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'முன்னாள் துணை முதல்வர்' என்று சொல்லுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதியில் கலைக் கல்லூரி கட்டித் தரும் எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, தங்கள் தொகுதியில் கலைக் கல்லூரி கட்டித் தரப்படுமா என்று கேட்டார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் 5 ஆண்டுக் கால ஆட்சியில், தொடங்கப்பட்ட கலைக் கல்லூரிகள் பத்துதான். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தவுடனே, வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில், பதவியேற்ற மூன்றே மாதத்திற்குள்ளாக 11 கலைக் கல்லூரிகளை வழங்கிப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் தலி) அதனடிப்படையிலே, உயர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வேகமாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, எந்தெந்தப் பகுதிக்குக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கைகள் வருகின்றனவோ, அந்தந்தப் பகுதிகளில் எல்லாம் புதிய கலைக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஜனவரி 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் ஏற்கெனவே உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். மூலக் கேள்வி கேட்டவருக்குத்தான் துணைக் கேள்வி கேட்க அனுமதி கொடுக்க வேண்டும். அவர் துணைக் கேள்விதான் கேட்டார். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஆண்டிப்பட்டியில், மதுரை–காமராசர் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அந்தக் கலைக் கல்லூரியில் 3,000 ஏழை மாணவ, மாணவிகள் படித்து வருகிறார்கள். அங்கே இதுவரையில் ஆசிரியர்கள் தற்காலிகப் பணியிடங்களில்தான் பணியமர்த்தப்பட்டு வருகிறார்கள். அப்போது கட்டடத்திற்கென ஒதுக்கிய நிதியைத் தவிர—கடந்த ஆட்சியிலே வேண்டுமென்றே அந்தக் கலைக் கல்லூரியைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், அந்தக் கல்லூரி வளர்ச்சிக்கென எந்த நிதியையும் ஒதுக்கவில்லை. இப்போது வந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மீண்டும் அந்தக் கலைக் கல்லூரி மேன்மை பெறுகின்றவகையில் அங்கே பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட அந்தக் கலைக் கல்லூரிக்குப் போதுமான வசதிகளை இடையிலே வந்த அரசு செய்யத் தவறி விட்டது என்கிற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், எங்கெங்கு கட்டடம் கட்டப்படாமல் இருக்கின்றதோ, அங்கெல்லாம் கட்டடம் கட்டித் தந்திடவும், எங்கெங்கு ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் உடனடியாக ஆசிரியர்களை நியமித்திடவும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, அந்தக் கலைக் கல்லூரிக்கு முன்னுரிமை வழங்கி, அந்தக் குறைகளைப் போக்கிட, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு தீவிரமாகச் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**5—**

## இயற்கை வேளாண்மை

***6767—திரு. என்.வி. காமராஜ்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காவிரி டெல்டா பகுதிகளில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*காவிரி டெல்டா பகுதி உட்பட, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில், அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

*முற்பகல் 10–45*

**திரு. என்.வி. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, விவசாயிகளின் துயர் துடைக்க பல்வேறு சலுகைகளை அறிவித்த, உழவர்களின்*

[2012 ஜனவரி 31

உற்பத்திப் பொருட்களுக்கு விலையேற்றதை அறிவித்த, விலையில்லா அரிசி வழங்கிய தாயே!

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப, விவசாயிகளின் உண்மை நிலையை உணர்ந்து, ஆட்சி செய்யும் உத்தமத் தலைவியே! விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற உழவர் பெருமக்கள் நிறைந்த காவிரி டெல்டா பகுதியில் இயற்கை வேளாண்மை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கமும், உதவியும், மானியமும் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், காவிரி டெல்டா பகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாய வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலமாகக் கதிரடிக்கும் இயந்திரங்கள், டிராக்டர்கள், புல்டோசர்கள் ஆகியவை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தற்போது இருக்கக்கூடிய டிராக்டர்கள் மிகவும் பழுதடைந்து இருக்கின்ற காரணத்தினால், அவற்றை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று அதிகமாக நெல் விளையக்கூடிய பகுதிகளில், கதிரடிக்கும் இயந்திரங்கள் பொறியியல் துறையில் மிகவும் குறைவான அளவில் இருக்கின்றன. எனவே, தஞ்சை மாவட்ட விவசாயிகளுடைய நலன் கருதி, அதிக அளவிலே டிராக்டர்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள், புல்டோசர்கள் போன்றவற்றைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்தப் பகுதி மக்கள் பயன்பெற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். இது இயற்கை வேளாண்மை பற்றிய வினாவாகும்.



2012 ஜனவரி 31]

அடுத்து, வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

**பாசன வசதி**

***2726—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதியிலுள்ள படேதலா கால்வாய்க்கு மார்க்கண்டேயன் ஆற்றிலிருந்து தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை. கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் மாரச்சந்திரம் கிராமத்தில் மார்க்கண்டேய நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாரச்சந்திரம் அணைக்கட்டிலிருந்து ஆற்று நீர் செல்லும் பொருட்டு 17.90 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டு, தண்ணீர் ஏரிக்கு வருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் பகுதியில் அமைந்துள்ளது படேதலா கால்வாய் பகுதியாகும். அது நூற்றுக்கு மேற்பட்ட காய்ந்துபோன ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்குகின்ற திட்டமாகும். கடந்த 2005 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வேப்பனஹள்ளி தொகுதியில் அமைந்துள்ள மார்க்கண்டேயன் ஆற்று நீரைத் திருப்பி, கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள பெரிய ஏரிக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து

படேதலா கால்வாய்மூலம் காய்ந்துபோன ஏரிகளுக்கு வழங்குகிற திட்டமாகும். 2005 இல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், 2006 இல் தலைவர் கலைஞர் ஆட்சியில், மேற்படி திட்டத்திற்காக மீண்டும் கூடுதலாக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, சுமார் 95 சதவிகித பணிகள் அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், கேள்விக்கு வாருங்கள். இவ்வளவு பேப்பர்களை வைத்துக்கொண்டு நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவது போல் பேசக் கூடாது. கேள்விக்கு வாருங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படேதலா கால்வாயில் எப்போது தண்ணீர் விடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் கேள்வி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிய அளவு தண்ணீர் இருக்கும்பொழுது, தண்ணீர் திறந்துவிடப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படேதலா கால்வாய் தண்ணீர்மூலம் பர்கூர் பகுதியிலுள்ள, வெண்ணம்பள்ளி, சுண்டம்பட்டி, மருவேபள்ளி, ஆஞ்சூர், நக்கல்பட்டி, மோடிகுப்பம், அச்சமங்கலம், ஜகதேவி, சக்கிலிநத்தம், ஆம்பள்ளி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகளிலுள்ள ஏரிகளுக்கு நீர் கிடைக்கும். மார்க்கண்டேயன் நதியில் தண்ணீர் இல்லாமல், கடந்த பத்து ஆண்டுகளாக வறண்டு போயுள்ளதால், இத்திட்டம் பயனற்றுப் போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, கிருஷ்ணகிரி தொகுதி எண்ணெகொல் அருகில் ஓடும் தென்பண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, குருமர்பள்ளி, புளியஞ்சேரி, பீமாண்டபள்ளி, குத்தப்பள்ளி, குப்பச்சிபாறை வழியாக கால்வாய் வெட்டி, மாரசந்திரம் அருகே உள்ள மார்க்கண்டேயன் நதி தடுப்பணைக்கு தண்ணீர் விடுவதன்மூலமாக படேதலா கால்வாய் திட்டம் பயன்பெறும். கடந்த 2009 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதற்கான ஆய்வுப் பணிகள் எல்லாம் நடைபெற்றுள்ளன. ஆகவே, மேற்படி திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொல்வதுபோல் கடகடவென்று வாசித்தார்கள். அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. அந்த வார்த்தை என்ன unparliamentary word–ஆ? நீங்கள் சொல்லுங்கள். Unparliamentary word என்றால் நான் எடுத்துவிடுகிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பவர் ஒரு இழிவான செயலைச் செய்பவர் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது unparliamentary word அல்ல. அதை ஏன் unparliamentary word என்று சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசும்போது உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 ஜனவரி 31

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** போல கடகடவென்று பேசினார் என்றுதான் சொன்னாரே தவிர, கொச்சைப்படுத்துகின்ற வார்த்தை அதில் ஒன்றும் வரவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அதுகுறித்து ஐயப்பாடு தெரிவித்திருக்கின்றார். அவருடைய மனம் புண்படும்படியாக இருந்தால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கத்தை அளித்துள்ளார்கள். அவருடைய விளக்கத்தை ஏற்று அந்த ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

அடுத்து வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

## சுற்றுலாத் தலம்

**463—திரு. ப. மோகன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்கு ஏற்கெனவே ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம் ரூ.38.45 இலட்சம் மதிப்பீட்டில் கரியாலூர் ஏரி மேம்பாட்டுப் பணிகள், ரூ.5.55 இலட்சம் மதிப்பீட்டில் பெரியாறு அருவிப் பகுதி மேம்பாட்டுப் பணிகள், ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் தாழ்வெள்ளி மலையில் சுற்றுச்சூழல் மற்றும் கருத்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 ஜனவரி 31]

விளக்க மைய மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை ஏற்கெனவே முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப்பகுதி, சுற்றுலா வளர்ச்சியில் மேம்பாடு அடைய வேண்டும் என்கின்ற ஒரு நல்ல நோக்கத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1984 இல் கோடை விழாவை கல்வராயன் மலையில் துவக்கினார்கள். அதற்குப் பின்னால் இடையிலே நிறுத்தப்பட்டு மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்னால் அங்கே கோடை விழா தொடங்கப்பட்டது. அந்தக் கல்வராயன் மலைப் பகுதி சுற்றுலாத் தலமாக உயர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் வைக்கப்பட்டு, கோமுகி அணையைச் சுற்றிப் பூங்காவை அமைப்பதுடன், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்மூலம் சுற்றுலாத் துறையின் மூலம் மேம்பாடு அடையச் செய்வதற்காக, நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலே, சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலையில் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, கல்வராயன் மலைப் பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதம் 20, 21 ஆம் தேதிகளில் சுற்றுலாத் துறை மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மிக நல்ல முறையில் அங்கே விழா கொண்டாடப்பட்டது. அதைப்

போலவே, கடந்த 3–11–2011 ஆம் தேதி அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கல்வராயன் மலைப் பகுதியிலுள்ள ஏற்கெனவே பராமரிக்கப்படாத நிலையிலுள்ள பூங்காவைச் சீரமைத்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் அங்கே வைக்கப்படவேண்டும் என்றும், விளக்குகள் அங்கே அமைக்கப்பட வேண்டும் என்றும், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அங்கே அமைக்கப்படவேண்டும் என்றும், புதியதாக Boat வசதி அங்கே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்து, ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று இங்கே சுற்றுலாத் துறைக்கு கருத்துரு அனுப்பியுள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆசியோடு அது ஆய்வு செய்யப்பட்டு நிச்சயமாக அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் வந்து மகிழ்வுறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்படும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு, அதைச் செய்வதற்கான முன்முயற்சி எடுப்பதற்காக அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

## தரம் உயர்த்துதல்

***5709—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், டி.டி. மோட்டூர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், டி.டி. மோட்டூரில் செயல்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு, ஆதிதிராவிடர் மாணவர்களின் மீது, கல்வி வளர்ச்சியின் மீது அதிக அக்கறை கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தவுடன் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட, அரசு அரசாணை (நிலை) எண் 99, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 31–10–2011 இல் ஆணை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், டி.டி. மோட்டூரில் செயல்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தியமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். தரம் உயர்த்தப்பட்ட டி.டி. மோட்டூரில் உள்ள மேல் நிலைப்பள்ளிக்குக் கணித ஆசிரியரும், விஞ்ஞான ஆசிரியரும் அமர்த்தப்படவில்லை. மேலும் Lab வசதியும் இல்லை. 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட டி.டி. மோட்டூர் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியில், பள்ளிகளுக்கிடையே நடக்கும் பெரும்பான்மையான விளையாட்டுப் போட்டிகள் அந்தப் பள்ளித்

[2012 ஜனவரி 31

*திடலில் நடக்கின்றன. எனவே, போதிய இட வசதியுள்ள அந்தப் பள்ளியில் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. லிங்கமுத்து, கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். நீங்கள் மற்ற கேள்விகளுக்குச் சென்றால், அவற்றிற்குரிய பதில்கள் அமைச்சரிடம் இருக்க வேண்டும் அல்லவா?* Please sit down.

**திரு. கு. லிங்கமுத்து:** *நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**9—**

### கட்டட வசதி

****6232—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கவுண்டம்பாளையம் தொகுதி, விளாங்குறிச்சி கிராமம், சேரன்மாநகர், போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, போக்குவரத்துக் கழகங்களின் வருவாயினை உயர்த்தவும், தரமான சேவைகள் வழங்கவும் ஆணையிட்டு, அதன்படி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், கோயம்புத்தூர், கவுண்டம்பாளையம் தொகுதி, விளாங்குறிச்சி கிராமம், சேரன்மாநகரில் அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் அடுக்குமாடி வணிக வளாகத்துடன் கூடிய பணிமனை வளாகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.*



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அ.இ.அ.தி.மு.கழகத்தினுடைய பொதுச் செயலாளர், கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, நான் இந்த முதல் கேள்வியை கேட்க அனுமதித்ததுடன், அந்தக் கேள்வியிலும் சரியான பதிலைச் சொல்லி, எங்களுடைய தொகுதி மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியைச் சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

*வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**10—**

### மீன் பதனிடும் நிலையம்

****3236—திரு. சி.எச். சேகர்:**

*மாண்புமிகு மீன் வளத் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்மிடிப்பூண்டி தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கும்மிடிப்பூண்டி தொகுதியில் மீன் பதனிடும் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.*

[2012 ஜனவரி 31

அவ்வாறு கருத்துரு பெறப்படும்போது, இப்பகுதியில் இந்நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மாவின் அரசினால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முதல் கேள்வி, மீனவ மக்களின் வாழ்வாதாரம் உயரும் என்கிற கேள்வியாக வந்திருப்பதால் எனக்கு மிகவும் சந்தோஷம் அளிக்கிறது. கும்மிடிப்பூண்டி தொகுதிக்குட்பட்ட ஆரம்பாக்கம், சுண்ணாம்புகுளம், மெதிப்பொலியம் ஆகிய மீனவ ஊராட்சிகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 10,000 மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் இறால் மற்றும் நண்டு இங்கேதான் அதிகமாகக் கிடைக்கிறது. ஆகையால், இங்கு மீன் பதனிடும் நிலையம் அமைத்தால் இவர்களின் வாழ்வாதாரம் உயரும்; அந்நியச் செலாவணி பெருகும்; அரசுக்கு வருவாயும் பெருகும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் ஏழு மீனவ கிராமங்கள் அமைந்துள்ளன. இக்கிராமங்களில் சுமார் 1,200 மீனவக் குடும்பங்கள் உள்ளன. இந்த மீனவக் குடும்பங்களில் உள்ள மீனவர்கள் அனைவரும் பழவேற்காடு ஏரியில் மட்டுமே முழு நேர மீன்பிடிப்பு செய்து வருகிறார்கள். இக்கிராமங்களில் மொத்தம் சுமார் 520 மரப் படகுகளும், சுமார் 100 கண்ணாடி இழைப் படகுகளும் உள்ளன. இங்கு பிடிக்கப்படும் மீன்களில் பெரும்பாலானவை இறால் வகை மீன்கள் மட்டுமே. பெரு இரக மீன்கள் பிடிபட வாய்ப்பில்லை. இக்கிராமங்கள் அனைத்தும் சேர்ந்து நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக ஒரு டன்னுக்குக் குறைவான இறால் மீன்கள் மட்டுமே பிடிக்கப்படுவதாலும், மாவட்டத்திற்கு அருகே சென்னைப் பெருநகர் அமைந்துள்ளதாலும் பிடிக்கப்படும் மீன்கள் அனைத்தும் அன்றே விற்பனை செய்யப்படுகின்றன.



2012 ஜனவரி 31]

இதனால் பிடிபடும் மீன்களைப் பதப்படுத்தி விற்பனை செய்யவேண்டிய கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு பெறப்படும்போது, இப்பகுதியில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அரசினால் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)—ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

(1) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

(2) திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

(3) திரு. கே.பி. அன்பழகன்

(4) திரு. ஆர். சின்னசாமி

(5) திரு. எல். வெங்கடேசன்

(6) திரு. சு. குணசேகரன்

## 4. அறிக்கைகள் அளித்தல்

### அவை உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2011–2012, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னல்படும் ஏழைகளின் துயர் நீக்கி, ஒடுக்கப்பட்டோர் உயர்வுபெற கை கொடுத்து, தடைகள் எது வரினும் தகர்த்துத் துகளாக்கி, தமிழகத்தை முன்னெடுத்துச் செல்லும், (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிகரில்லா தனிப் பெரும் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்திடவும், (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தமிழகம் இழந்துவிட்ட பெருமைகளை மீட்டெடுக்கவும், (மேசையைத் தட்டும் ஒலி) சீர்மிகு திட்டங்கள் பல தந்து, சிறப்பாக அவற்றை நிறைவேற்றி, கூர்ந்த அறிவுத் திறத்தால், தேர்ந்த நிர்வாகத் திறனால், இந்திய நாடே உற்று நோக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிச் சக்கரத்தைத் திறம்பட சுழற்றி இந்திய நாட்டிற்கே முன்னுதாரணமாகத் திகழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.







*முற்பகல் 11–05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன்வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 8,760.28 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் 1,602.91 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான 7,157.37 கோடி ரூபாய் மூலதன மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டம் சட்டமன்றப் பேரவையில் கடந்த ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்பு ஒப்புதலளிக்கப்பட்ட புதுப் பணிகள், புதுத் துணைப் பணிகள் குறித்த செலவினங்களுக்கு சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும், இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசால் மேற்கொள்ளப்பட்டன. இம்மதிப்பீடுகளில் உள்ள கூடுதல் செலவினங்கள், மாநில வரி வருவாயின் வளர்ச்சியின் மூலமாகவும் வருவாய் செலவினங்களை முறையாகக் கண்காணிப்பதன் மூலமாகவும் ஈடு செய்யப்படும்.

வடகிழக்குப் பருவ மழையின்போது சேதமடைந்த சாலைகளைத் தற்காலிகமாக மறுசீரமைப்பு செய்வதற்கு 150 கோடி ரூபாயும், 'தானே' புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உடனடியாக மீட்புப் பணிகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், குடிநீர், மின்சார வசதிகளை மறுசீரமைக்கவும், 850 கோடி ரூபாயும் மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான நிதி, 'மானியக் கோரிக்கை எண் 51, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், நிலுவையில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்காகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வாயிலாக அதன் உப நிறுவனமான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் முதலீடு செய்வதற்கு 3,500 கோடி ரூபாயை பங்கு மூலதனமாகவும், 2,955 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 14, எரிசக்தித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க, 400 தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள், 50 சதவீதம் மானியத்தில், இயந்திரங்கள் மற்றும் கருவிகளைக் கொள்முதல் செய்வதற்காக 80 கோடி ரூபாயை, மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதித்து (மேசையைத் தட்டும் ஒலி) அதில் முதல் தவணையாக 40 கோடி ரூபாய், 'மானியக் கோரிக்கை எண் 5, வேளாண்மைத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறையைப் புதிதாக உருவாக்கவும், உணவுப் பாதுகாப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் அமைக்கவும் தேவைப்படும் 86.02 கோடி ரூபாயை, மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு தலைப்பின்கீழும் தலா 1,000 ரூபாய், 'மானியக் கோரிக்கை எண் 19, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை' என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் உணவு தானிய சேமிப்புத் திறனை அதிகப்படுத்த 1,118 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கிடங்குகள் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 105.47 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்துணை மதிப்பீடுகளில் முதற்கட்டமாக 5.27 கோடி ரூபாய் 'மானியக் கோரிக்கை எண் 12, கூட்டுறவுத் துறை' என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.



முற்பகல் 11–10

228 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 18 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கூட்டுறவுக் கடன் புத்துயிர் அளிக்கும் திட்டத்தின் (short term co–operative credit structure) கீழ் மாநில அரசின் பங்கு மானியமாக 82.54 கோடி ரூபாய், மாண்புமிகு அம்மாவின் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவுத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகையை வழங்கிட, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த இணையங்களுக்கு வட்டியில்லா வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மாவின் அரசால் 66.20 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 8–பால் வளத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் கீழுள்ள 385 நடமாடும் மருத்துவப் பிரிவுகளை (mobile medical units) நடமாடும் மருத்துவமனைகளாகத் (Mobile Hospitals) தரம் உயர்த்துவதற்கு ரூ. 29.36 கோடியும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கருவுற்ற மகளிருக்கு வழங்கப்பட்டுவரும் நிதியுதவியை 6,000/– ரூபாயிலிருந்து 12,000/– ரூபாயாக உயர்த்தியதால் (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படும் கூடுதல் செலவினத்திற்காக ரூ. 64.27 கோடியும் மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக, துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு தலைப்பின்கீழும் தலா 1,000/– ரூபாய் 'மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை' என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற்ற தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு வழிவகை முன்பணமாக 116.11 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 228 பேரூராட்சிகளில் சுமார் 615 கிலோமீட்டர் நீளத்திற்கு 442 சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளுக்காக 51.31 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை, 'மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் டீசல் மற்றும் ஊதிய செலவினங்களுக்காக வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மாவின் அரசு 248.45 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான நிதி, 'மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

## 2011–2012 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 மாநிலச் சட்டமன்றம் | 5 | – | – |
| 3 நீதி நிருவாகம் | 2,21,04 | – | – |
| 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 32,00,26 | 7,79,00 | – |
| 5 வேளாண்மைத் துறை | 80,46,82 | 3 | – |
| 6 கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 14,81,34 | 2,00,01 | – |
| 7 மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 13,47,04 | 1 | – |
| 8 பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | – | – | 66,20,00 |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 4,12,55 | 1,42,93 | – |
| 10 வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1,04,20 | – | – |
| 11 முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1,08,80 | – | – |
| 12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 110,03,27 | 5,27,35 | – |
| 13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 2,50,01 | 1,96,81 | – |
| 14 எரிசக்தித் துறை | – | 3,500,00,00 | 2,955,16,00 |
| 15 சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1 | – | 2,55,00 |
| 16 நிதித் துறை | 8,85,40 | – | 22,00,00 |

| | | | |
|---|---|---|---|
| 17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | – | – | 69,00 |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 21,16,72 | 2,00,02 | – |
| 20 உயர் கல்வித் துறை | 20,50,65 | 3 | – |
| 21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 1 | 5,50,07 | – |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 14,48,51 | 2 | – |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,13,57 | 1 | – |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5,28,69 | 3 | – |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 8,00,02 | 1 | – |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 40,00,02 | – | 116,11,00 |
| 27 தொழில் துறை | – | – | 35,00,00 |



| | | | |
|---|---|---|---|
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 4,04,86 | – | – |
| 29 சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 19,93 | 7,47,51 | – |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | – | 1,10,00 | – |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 1 | – | 3,00,00 |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 1,17,14 | 3 | – |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 1 | 118,55,52 | 41,96,00 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 2,00,28 | – | – |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 78 | 1 | – |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,90,01 | – | – |
| 38 பொதுத் துறை | 13,92,38 | – | – |

| | | | |
|---|---|---|---|
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 2 | 20,20 | – |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 1,86,01 | 2,57,58 | – |
| 41 வருவாய்த் துறை | 4,65,80 | 1 | – |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 9 | 4 | – |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 1,26,60 | – | – |
| 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 16,34,55 | – | – |
| 45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 51,64 | – | – |
| 46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,26,19 | – | – |
| 47 இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 60,00,51 | – | – |
| 48 போக்குவரத்துத் துறை | 86,50,00 | – | 248,45,65 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,03,63 | – | – |
| 50 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 10,26,89 | – | – |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1,004,63,97 | – | – |



| | | | |
|---|---|---|---|
| 52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 2,01,43 | – | – |
| 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,00,02 | 9,49,46 | – |
| **பெருமொத்தம்** | 1,597,81,73 | 3,665,36,69 | 3,491,12,65 |

## 6. அரசினர் தீர்மானம்

### திரு. டி.ஆர்.பி. ராஜா மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக 10 சட்டமன்ற நாட்களுக்கு அவை நடவடிக்கைகளிலிருந்து அவரை நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)—ன்கீழ் இன்றே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

Actual ஆக உரிமைக் குழுவிற்கு இந்த matter refer செய்யப்பட்டது. உரிமைக் குழுவில் உங்கள் கட்சி சார்பாக திரு. கம்பம் இராமகிருஷ்ணன் உறுப்பினராக உள்ளார். அவர்,

அவருடைய கருத்தைக் குழுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். இதை இப்பேரவையில் விவாதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் சேர்த்துத்தான் அவை உரிமைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) குழுவில், உங்கள் கட்சியின் சார்பாக இருக்கும் உறுப்பினர், குழுவில் represent செய்திருக்கிறார். இங்கே, இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)–ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது.”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

இன்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், இன்றிலிருந்து இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலும், அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலும் தொடர்ந்து 10 நாட்கள் வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறார். இக்காலத்தில் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது. (குறுக்கீடுகள்)





## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழிதல். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

***திருமதி ஆர். ராஜலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2012 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவர்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தீர்மானத்தை வழிமொழிதல், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அனுதினமும் வணங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். இன்று 9 உறுப்பினர்கள் விவாதத்தில் பேசவுள்ளார்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

**திருமதி ஆர். ராஜலட்சுமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

@ .... 167 ..... முதல் 201 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்."

ஆம்! எங்கள் முதல்வர் உயிர்த்தே இத்தீந்தமிழ் உலகம்! (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணின் பயனாம் இன்னிசையும், பாலின் பயனாம் இன்சுவையும், கண்ணின் பயனாம் பெருகொளியும், கருத்தின் பயனாம் அம்மா எனும் மூன்றெழுத்தும், (மேசையைத் தட்டும் ஒலி) விண்ணின் பயனாம் பொழிமழையும், வேதப் பயனாம் நம் தலைவியுமாய், எம் பிறவிப் பயனாய் விளங்கி நிற்கும் திருமகளே, அம்மா!

"தாயுரை கொண்டுதாதை உதவிய தரணிதன்னை
தீவினை என்னநீத்து சிந்தனை முகத்தில்தேக்கி
போயினை என்றபோழ்து புகழினோய் தன்மைகண்டால்
ஆயிரம் இராமர்நின்கேழ் ஆவரோ ...."

என்கின்ற வரிகளுக்கேற்ப, இராமனின் மகுடம் காத்த பரதன்போல, புரட்சித் தலைவர் அவர்கள் உங்களிடம் பெற்ற செவ்வரம் காக்க வேண்டி, சிந்தை அகலாது, கண் துஞ்சாது, கடமை என்ற ஒன்றையே கடமாய்ப் பூண்டு

"போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்,
போற்றுதலும், தூற்றுதலும் போகட்டும் கண்ணனுக்கே"

என்கின்ற கீதையின் சாரத்தை ஏற்று, தமிழினத்தைக் கண்ணின் மணிபோல் காத்துவரும் திருவுருவே, அம்மா! நீர் என்றுமே வெற்றித் திருமகள்! (மேசையைத் தட்டும் ஒலி) ஆயின், நீர் நடந்து வந்த பாதை மலர்ப் படுகை அல்ல! நெருஞ்சிப் பாதையிலே நடந்து, நெருப்பாற்றிலே நீந்தி, தமிழகத்தைக் காத்து நின்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எமக்குத் தந்த தங்கத் தாரகை நீர் ஒருவர்தானம்மா! அம்மா இன்று நீங்கள் அமர்ந்திருக்கும் அரியாசனம் உங்களுக்கு எளிதில் கிட்டிவிடவில்லை அம்மா! எத்தனை தியாகங்கள்! எத்தனை துரோகங்கள்! எத்தனை சவால்கள், எத்தனை சஞ்சலங்கள்! அம்மா நீங்கள் மட்டும் எண்ணியிருந்தால் சுகபோக வாழ்வு வாழ்ந்திருக்கலாம்! ஆடை அணிகலன்களிலே களித்திருக்கலாம். ஆனால், அளித்த வாக்கினைக் காக்க வேண்டி, துறவிபோல





உடுத்தி, தெய்வம்போல தமிழரைக் காத்து வருகின்றீர் நீர்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, உம் பணியை முடிப்பதற்குள் நீங்கள் பட்ட இன்னல்கள்தான் எத்தனை, எத்தனை? எத்தர்கள் ஏசினார்கள்! பித்தர்கள் பேசினார்கள்! எத்தனை நாள் இவர் பொறுப்பார் என்று எத்தனையோ முறை எக்களித்தார்கள்! எத்தர்களின் ஏச்சுக்கும், பித்தர்களின் பேச்சுக்கும் ஓடி ஒளிய நீர் என்ன சாதாரண மனுஷியா! இரும்புத் திடம் கொண்ட இமயம் அல்லவா நீர்! (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

"தேடிச் சோறுநிதந் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி, –கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் . . ."

ஒரு வேடிக்கை மனிதரா நீர்? நீங்கள் எப்படிப்பட்ட மனிதரம்மா! நீங்கள் இரண்டுபட்ட இயக்கத்தை ஒன்றாக்கியவர்; உடைந்துவிட்ட இதயங்களை நன்றாக்கியவர்; முடங்கிவிட்ட இலையைக்கூட துளிர்க்கச் செய்தவர். தளர்ந்துவிட்ட மனங்களை எல்லாம் கிளர்க்கச் செய்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) இணைந்துவிட்ட இயக்கத்தை ஆளச் செய்தவர்; ஆட்சிக்கும், தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செய்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றுக்கொண்ட பொறுப்புக்கு நியாயம் செய்தவர், நாட்டிலேயே முதன்மை என்ற மாயம் செய்தவர். தமிழகத்தின் மக்களை தலை நிமிரச் செய்தவர்; உம்மை அம்மா என்று தமிழினமே அழைக்கச் செய்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆயின் அம்மா! அத்தனை சாதனைகளையும் பொறுக்காத பொய்யர்கள் உம்மேல் வழக்கு மேல் வழக்குப் போட்டார்கள், உம்மை வாளாவிருக்க சதி செய்தார்கள். அத்தனையும் ஏற்றுக் கொண்டீர்; அனுதினமும் உடல் வருத்தம் கொண்டீர். கோடானு கோடி தொண்டர்கள் உண்டென்றாலும் உம் பழி தீர்க்கச் சபதம் கொண்டிருந்தாலும், கடைசியிலே கடமையைச் சுமப்பதென்னவோ

[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2012 ஜனவரி 31

தனி ஒருவராய் நீங்கள் ஒருவர் தானம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பணிச் சுமையை சுமந்தது போதாதென்று, மனச் சுமையும் சேர்ந்து உம்மை வாட்டியதே! அத்தனையும் உடைத்து வந்தீர்; புத்துயிராய்ப் பிறந்து வந்தீர். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனையும் உடைத்து வந்தீர்; புத்துயிராய்ப் பிறந்து வந்தீர். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் பேசும் இம்மாநிலத்திலே முப்பொழுதிலுமே எனதாட்சிதான் என்று எடுத்துக் காட்டினீர். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து வந்த அனைத்து தேர்தல்களையும் வென்றும் காட்டினீர். அம்மா! நீர் தமிழகத்தை ஆள்கின்றீர்! இல்லை! இல்லை! தமிழர் அகத்தையே ஆள்கின்றீர். உம்மை ஈன்றெடுத்த தாய்க்கு நீர் ஒரே மகள். ஆனால், இன்றோ பல கோடி தமிழருக்கு நீர் ஒரே தாய். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! உம்மை தாயாக்கி வைத்த தமிழகத்திற்கு யாதுமாகி நிற்கின்றீர் நீர்! ஆம். யாதுமாகி நிற்கின்றீர்; எங்கும் நிறைந்து நிற்கின்றீர்! விண்ணாகி நிற்பதோடு வேதமுமாய் நிற்கின்றீர்! உம்மை "நம்பினோர் கெடுவதில்லை, இது நான்குமறை தீர்ப்பு" (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற சொல்லுக்கு அடி நாதமாகி நிற்கின்றீர். "அறிவானும் நானே, அறிவிப்பானும் நானே, அறிவிக்கின்ற மெய்ப்பொருளும் நானே, விரிசுடர், பார், ஆகாயம், எப்பொருளும் நானே" என்ற பரம்பொருளின் தத்துவமாகி நிற்கின்றீர் நீர். அம்மா! பதவி என்பதே பணம் அளிக்கும் ஒரு கருவி என்று எண்ணும் கயவர்களின் மத்தியிலே, பதவி என்பது மக்கள் துயர் துடைக்கும் ஒரு வாய்ப்பு (மேசையைத் தட்டும் ஒலி) என்று எடுத்துக்காட்டியதே நீங்கள்தான் அம்மா!

முதல்வர் என்ற சொல்லுக்கு முழு அர்த்தம் வந்ததென்னவோ, மூன்றாம் முறையாயும் நீர் முடிசூடிய பின்னர்தானே? (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் முறையாய் முதல்வரானீர்; முழு மூச்சாய் மாற்றம் தந்தீர்; மாற்றம் தந்த குடிகளுக்கு ஏற்றம் தந்தீர்; வாக்குறுதிகளை நிறைவேற்றியும் தந்தீர்; பதவி ஏற்ற கையோடு பணிச் சுமையை ஏந்தி நின்று, பதராய் மாறி இருந்த தமிழகத்தை, கதிராய் அறுவடை செய்ய வேண்டி, (மேசையைத் தட்டும் ஒலி) சத்தான திட்டம் அனைத்தும் முத்தாக வழங்கி உள்ளீர். ஏத்தம் இறைக்கின்ற விவசாயி, அவனை காக்கும் கரங்கள் எங்க தாயி. (மேசையைத் தட்டும் ஒலி) "பத்திலே ஒரு பங்கே மத்தியிலே தந்தாலும் பதைக்காதே; முத்தாக அத்தனையும் நான் தருவேன், உம் பயிர் காக்க; (மேசையைத் தட்டும் ஒலி) உம் உயிர் காக்க"



2012 ஜனவரி 31] [திருமதி ஆர். ராஜலட்சுமி]

எனக் கடலூரின் இடர் காத்த கடம்பூண்ட காவல் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்களின் திறத்தாலே "தானே" புயல் தந்த இடர், தானே அகன்று விடுமம்மா!

அம்மா, நீங்கள் உவந்தளித்த திட்டங்களிலே இந்த எளியவளைக் கவர்ந்திழுத்த திட்டம் என்னவோ, கறவை மாடுகள், அருமை ஆடுகள் வழங்கும் திட்டம்தான் அம்மா! ஒரே கல்லிலே இரண்டு மாங்காய் என்பார்கள். ஆனால், நீங்கள் அளித்ததோ ஒரே திட்டத்திலே 8 நலன்கள். பால் வளம், தோல் வளம், வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, உர உற்பத்தி, பசுமை எரி சக்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, எதிர்கால நலன் காப்பு என்று ஒரு திட்டத்தில் எட்டு பயன் வழங்க தமிழ் இனத்தின் சாணக்கியர் உம் ஒருவரால்தான் முடியும் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, நைந்து போன நொய்யல் ஆற்றுக் கழிவு நீர்ப் பிரச்சினைக்கு, முடி சூடிய கையோடு முற்றுப் புள்ளி வைத்த நீங்கள், மீண்டும் அத்தீமை தலைத் தூக்கா வண்ணம் நிவாரணம் வழங்கி, மாசு காக்க உறுதி பூண்ட அம்மாந்தர்தம் மனத்திற்கு மகிழ்வை தந்துள்ளீர். அம்மா! காவிரித் தாயின் கருணைக்குக்கூட தடை இட்டபோது, கலங்காது தமிழகத்தைக் காக்க உங்கள் இன்னுயிரையும் பணயம் வைத்த நீங்கள், இன்று முல்லைப் பெரியாறை முடக்கத் துடித்து, தமிழகத்தில் பயிர் வாடினால் தங்களின் உயிர்கூட வாடிவிடுமே என்ற அடிப்படையைக்கூட புரிந்துகொள்ளாத அண்டை மாநிலத்தின் மடமைக்கும் சேர்ந்து சிந்தித்து, நல்ல முடிவுதான் எடுப்பீர்கள். இது நாடறிந்த உண்மை. உணர்ச்சி வேகத்திலே உண்மையை உணராதோர், இனி வருங்காலங்களிலே உங்கள் கூர்மதியை உணர்வர். இது உறுதி அம்மா. கடைமடை தேசமாய், கடைக்கோடி சவலையாய்ப் போய்விட்ட தமிழகத்தின் தன்னிலையை, அரசியல் ஒன்றை மட்டுமே செய்யும் அண்டை மாநிலங்களும் உணரவில்லை. அரசியலைக்கூட அழகாய் செய்யாத மைய அரசும் உணர்த்தவில்லை.

*முற்பகல் 11–25*

தூங்குபவனை எழுப்பலாம். தூங்குவதுபோல் நடிப்பவனை எழுப்பவே முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உறங்குகின்ற அண்டை அரசுகளும், தாலாட்டும் நடுவண் அரசும் இறுதியில்

எய்தப்போவது என்னவோ, தோல்விதான் அம்மா! ஏனெனில்,

“ஆற்றுதல் என்பதொன்று அலந்தார்க்கு உதவுதல்,
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை,
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்,
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையர்சொல் நோன்றல்,
செறிவெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்,
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்”

என்ற கலித்தொகைக்குப் பொருள் சேர்த்த புகழ்ப் பெண் பாவை நீங்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உம்மை எதிர்ப்போரும்கூட உணரும் நாள் விரைவிலேயே வருகிறது அம்மா!

அம்மா! நாங்கள் தாய் என்றால் அறிந்ததென்னவோ உங்களைத்தான். இன்றோ தமிழ்நாடு கிராமப்புற மேம்பாட்டுத் திட்டமே ‘தாய்’ என்று ஆனது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை குடியிருக்கும் சின்னஞ் சிறு உலகம் அவனது கிராமம். அதுவே அவன் கண்ட ஈடில்லா சொர்க்கம். அச்சொத்தைப் பாதுகாக்க நம் தாய் ஈந்திட்ட இணையில்லா திட்டமே ‘தாய்’. அதிலே சோலைகள் உண்டு; சாலைகள் உண்டு; பசுமை வீடுகளோடு வாழ நல் மனையும் உண்டு; பாதுகாப்பிற்கெனவே மருத்துவமனையும் உண்டு; அங்கு ஏழைகளுக்கு நல்ல வாழ்வுரிமை உண்டு; எம் தாய்க்கு என்றென்றும் அவர்தம் நன்றியும் உண்டு.

அம்மா, நாட்டு மாந்தரெல்லாம் தம்போல் நரர்கள் என்று கருதார், கொடியோர். அவர்தம் ஆட்சியிலே நரகமாயிற்று நகர நிருவாகமே. போனது போகட்டும், புதுவாழ்வு பிறக்கட்டும் என நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம் தந்து நகரத்தாரைக் காத்திட்ட நற்றமிழ் முதல்வர் நீங்கள் ஒருவர் தானம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, தை, தை என்று குதித்தாலுமே, தை புத்தாண்டின் முதலாகுமா? கோமாளிகளின் கிறுக்கமே எனக் கொண்டாலும், கறந்த பால்தான் மடி புகுமா? (மேசையைத் தட்டும் ஒலி) கூத்தாடி போட்டுடைத்த ஆண்டுக் கணக்கைக்கூட நேர் செய்ய, அம்மா



நீர்தானே ஆணையிட்டீர்? கோபாலபுரத்தின் கணக்கை முடித்த கையோடு, மாதக் கணக்கையும் முடித்து வைத்தீரே! (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் மனக் குறையைத் தீர்த்து வைத்து, சித்திரையை முதலாக்கினீர்; நித்திரையை எமதாக்கினீர். அம்மா, மின்சாரம் இல்லாவிடில் சம்சாரமே சாய்ந்து போகும் தறுவாயில், புதிய மின் திட்டங்கள்மூலம் 4,700 மெகா வாட் கூடுதல் மின் உற்பத்தியை உறுதி செய்து, மக்கள் மனவெளியிலே ஒளி பரவச் செய்திருக்கிறீர்கள்.

அம்மா!

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.”

அம்மா அவர்கள், கல்வியின் வலிமையை உணர்ந்தவர், கற்றுணர்ந்தவர். யாம் பெற்ற கல்வி, பெறுக இவ்வையகம் என வாழ்ந்து வாழ்பவர். அவர் ஆட்சியிலேயன்றி மாணாக்கர் அறிவுப் பயன் பெறுவது எக்கால்? ஆம், அம்மா, மாணவர் கல்விக்காக மடிக் கணினி தருகிறார். உலகத் தரம் வாய்ந்த உயர் கல்விக்கும் வகை செய்கின்றார். குரங்குக் கையிலே சிக்கிய பூமாலையாய் சிதறிய பல்கலைகளைக் கோர்த்தெடுத்து, ஒருங்கிணைந்த பல்கலையாய் பாங்காய் தருகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) படிக்கின்ற பிள்ளைகளோ, பூங்காவில் கிள்ளைகளாய், பாரதத்தின் பெருமைகளாய், புரட்சித் தலைவர் கனவு கண்டது போல, தங்கங்களாய், தானைத் தலைவர்களாய் பீடு நடை போடுதற்கு, இன்றே ராஜ பாட்டை போடுகிறார். Amma, your mind alone knows the secrets of life. Your hands alone will rise to uplift the oppressed. Your heart alone is a sea boundless and measureless. Your soul alone unfolds like a lotus of countless petals.

அம்மா, நாடி வரும் நோய்க்கு செல்வந்தன் யார் என்று தெரியுமா? வறியவன் இவன் என்றே கூறி அகலுமா? நோயைக் காட்டிலும், நோய்க்கான முதலைக் கேட்டே மாண்டவர் உண்டு.

[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2012 ஜனவரி 31

அதனால் ஏழை நோயாளியின் கண்ணீர் துடைக்க, விளக்கோடு வரும் எங்கள் வேதநாயகி, தன் பெயரில் அல்ல, தன்னுடைய பெயரில் அல்ல, தமிழனுக்குத் தந்திருக்கிறார், ஒரு அற்புதமான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) தாயே, அது தமிழரினமே காலங்காலமாய் உம்மிடம் கட்டுண்டு கிடக்க, நீர் தந்த மகத்தானதொரு நுட்பம்.

முற்பகல் 11–30

அம்மா, ஆளுநர் வாயிலாய் நீங்கள் தந்த உரை என்பதை வேதத்தின் மறை என்றே கூறலாம். இறையென்று குடிகள் தொழும், மன்னவன் செய்த முறை என்றும் கூறலாம். கனியிலே சுவையைப் போல, காற்றிலே இயக்கம் போல, கண்ணிலே ஒளியைப் போல, கற்கண்டின் இனிமை போல, ஞானமா மகுடத்தின் நடுமணி போல, உலகெலாம் தானாய் ஒளிர்பவர் நீர்! தமிழிலே தேனாய் கலந்தவர் நீர்! தமிழரின் வாழ்வோடு பிணைந்தவர் நீர்! தமிழருக்கு வாரி வாரி வழங்கவே பிறந்தவர் நீர்! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, அன்பு என்ற பண்புக்கு உருவமில்லை என்பர். ஆனால், அப்பண்பின் உருவமே தாங்கள்தாம் அம்மா! ZEN தத்துவத்திலே முத்தொன்று உண்டு, “when the disciple is ready the leader appears” என்று. எம்மை உம் கடைக்கோடித் தொண்டராய் கொண்டு அரவணைத்தீர் அம்மா! உங்கள் இதயமே எமக்குத் தாய் வீடானது! உங்கள் வாய்மொழியே எமக்குத் தாய் மொழியானது! உங்கள் வாசமே எமக்கு ஸ்வாசமானது! உங்கள் ஒளிமுகமே எமக்குத் திருவிளக்கானது! உங்கள் திருப்பெயரே எமக்கு வேதமானது! உங்கள் புன்னகையே எமக்கு மந்திரமானது! உங்கள் திருவுருவே எமக்கு தெய்வமானது! உங்கள் காலடியே எமக்கு சொர்க்கமானது! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அம்மா, You are a true leader because, your reason and your passion are the rudder and sails of your soul; Your reasoning will not let you honour one man over the other because you are a great levellor; not to forget a great ruler too;

அம்மா, ஒருவர் அழகாய் இருக்கலாம்! அறிவால் சிறக்கலாம்! திறனால் ஜொலிக்கலாம்! ஆளுமையிலே ஜெயிக்கலாம்!



2012 ஜனவரி 31] [திருமதி ஆர். ராஜலட்சுமி]

ஆனால், அத்துணையும் சேர்த்து செய்த புத்தழகுப் பெட்டகம் அம்மா நீங்கள்! தோன்றும்போதே புகழுடன் தோன்றிய உங்களைச் செதுக்கும்போது மட்டும், பிரம்மன் அதிக அக்கறையோடே படைத்திட்டான் போலும்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அம்மா, நீங்கள் அறியாதது என்பது ஒன்றுதானோ? அது அகம்பாவம் என்பதுதானோ? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

ஆம் தாயே, ஆகாயத்தையே வில்லாக்கி, அடியார் கையில் தந்துவிட்டு அடக்கமாய் இருக்கிறீர், அடுத்த சாதனை முடிக்கிறீர். நீங்கள் பிறப்பால் பெற்ற அத்துணை குணங்களும், வளர்ப்பால் பெற்ற அத்தனை நலன்களும், உழைப்பால் பெற்ற அத்துணை செல்வங்களும், அறிவால் பெற்ற அத்தனை உயர்வுகளும் உங்கள் சுயத்தை பறிக்கவில்லை என்பதே ஒரு புதிரானது! ஒவ்வொரு நாளும் புதிதாய்ப் பிறக்கிறீர்! புதிதாய்ப் பிறந்த மலராய் மணக்கிறீர்! மணப்பதுகூட அறியாமல் சிரிக்கிறீர்! இயற்கையிலேயே இயல்பாய் இருக்கிறீர்!

அம்மா, தமிழகத்தின் அரியணைக்குப் பெருமை ஏனம்மா? நீர் அதில் அமர்வதால்தானே! (மேசையைத் தட்டும் ஒலி) மகத்திற்கே பெருமை ஏனம்மா? நீர் அதில் பிறந்ததால்தானே! (மேசையைத் தட்டும் ஒலி) போயஸ் தோட்டத்திற்கே பெருமை ஏனம்மா? நீர் அங்கு உறைவதால்தானே! (மேசையைத் தட்டும் ஒலி) எம் பிறவிக்கே பயன் ஏனம்மா? நீர்வாழும் காலத்தில் நாங்கள் வாழ்வதால்தானே! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அம்மா, நான் முப்பெரும் தேவியரைக் கண்டதில்லை; மும்மூர்த்திகளை தரிசித்ததில்லை; மூவேந்தர் யாரையுமே கண்டதில்லை; ஆனால், உம் ஆளுமையிலே மும்மூர்த்திகளைப் பார்க்கிறேன்! புதுமைகளைப் படைப்பதில் உம்மை பிரம்மனாய்ப் பார்க்கிறேன்! தமிழினம் காப்பதிலே கண்ணனாய்ப் பார்க்கிறேன்! தீமைகளை அழிப்பதிலே முக்கண்ணனாய்ப் பார்க்கிறேன்! பகுத்தறியும் கூர்மையிலே உம்மை பெரியாராய்ப் பார்க்கிறேன்! பொங்கிவரும் பேரன்பில் புரட்சித் தலைவரையே பார்க்கிறேன்! (மேசையைத் தட்டும் ஒலி) எல்லை இல்லா அறிவிலே பேரறிஞர் அண்ணாவாய்ப் பார்க்கிறேன்! இல்லை எனாது அளிக்கும் கொடையிலே கர்ணனாய்ப் பார்க்கிறேன்! அழகு ததும்பும் முகத்திலே ஆர்ட்டிமிஸ்யாவைப் பார்க்கிறேன்! கசிந்துருகும்

[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2012 ஜனவரி 31

*தியாகத்திலே* JOAN of Arc*–ஐப் பார்க்கிறேன்! மெய்சிலிர்க்கும் பக்தியிலே உம்மை நான் ஆண்டாளாய் பார்க்கிறேன்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பனிபோன்ற பரிவிலே மதர் தெரசாவாய் பார்க்கிறேன்! பார் வியக்கும் புலமையிலே ஒளவைப் பிராட்டியாய் பார்க்கிறேன்! வியக்க வைக்கும் வீரத்திலோ ஜான்சி ராணியைப் பார்க்கிறேன்! (மேசையைத் தட்டும் ஒலி) இவை அத்தனையோடும் சேர்த்து, இவை அத்தனையோடும் சேர்த்து, அரசியல் ராஜ தந்திரத்திலே உங்களையே நான் பார்க்கிறேன் அம்மா! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*அம்மா,*

*"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து*
*முந்தி யிருப்பச் செயல்"*

*என்ற மறைக்கேற்ப தாயுமானவராகிய நீங்கள் என்னையும்கூட ஓர் ஆளாக்கி இன்று ஆளுநர் உரையை முன்மொழியும் ஒப்பற்ற வாய்ப்பினை அளித்துள்ளீர்.*

*உங்கள் பொங்கிப் பெருகும் கருணைக்கீடாய் நான் என்ன தர முடியும்? என்னைத் தருவேன்! என் அன்பைத் தருவேன்! என் நன்றியைத் தருவேன்! உமக்குத் தருவதற்குதான் என்னிடம் யாதுள? ஏவுகூர் வாளியால் எய்து – நாய் அடியனேன் ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளினீர். மூவர் நீர்! முதல்வர் நீர்! முற்றும் நீர்! மற்றும் நீர்! தாயும் நீர்! தருமம் நீர்! உயிரும் நீர்! உறவும் நீர்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*முற்பகல் 11–35*

*உமக்கு ஒத்த உரிமையாளா, ஊடற்கினியாளா, குற்றமிலா குணத்தாளா, கற்றறிந்தோர் பேணும் தகையாளா உமக்குத் தருவதற்கு நான் நடந்துகொள்வேன் என்பதைத் தவிர உமக்குத் தருவதற்கு என்னிடம்தான் யாதுள? உம் புகழெனின் உயிரும் கொடுக்குவேன், உமக்குப் பழியெனின் உலகுடன் பெறினும் கொளேன்.*

*அம்மா! சந்தனமும், செண்பகமும், தேமாவும், தீம்பலவும், ஆசினியும், அசோகமும், கோங்கும், வேங்கையும், குரவமும் விரிந்து, நாகமும், திலகமும், நறவும், நந்தியும், மாதவியும், மல்லிகையும்,*



2012 ஜனவரி 31] [திருமதி ஆர். ராஜலட்சுமி]

*மௌவலோடு மணங்கமழ்ந்து, பாதிரியும், பாலைஞாழலும், பைங்கொன்றையோடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும், புன்னாகமும், முறுக்கோடு முறைசிறந்து, வண்டிரைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் தவழ்ந்துலவும் தண்ணனும் பொழிலின் நடுவே, விசும்பு துடைத்து, பசும்பொன் புரத்த, வண்டு துவைப்பத் தண்தேன் துளிர்க்கும் நறுமலர் அத்தனையும் ஒருசேரக் கண்டாலும் உம் ஒரு கடைக்கோடிப் புன்னகைக்கு அவை ஈடாக மாட்டா அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)*

*அம்மா,*

*"தாதுகு சோலைதோறும் சண்பகக் காடுதோறும்*
*போதவிழ் பொய்கைதோறும் புதுமணல் தடங்கள்தோறும்*
*மாதவி வேலிப்பூக வனந்தொறும் வயல்கள்தோறும்*
*ஓதிய உடம்புதோறும் உயிரென உலாயதன்றே"*

*என சரயுவின் வெள்ளம் உயிர் எப்படி உடம்புக்குள் புகுந்திருக்கின்றதோ அதுபோல நீங்கள் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறீர்; நினைவுகளில் நெகிழ்ந்திருக்கிறீர்; (மேசையைத் தட்டும் ஒலி) நினைவுகளில் நெகிழ்ந்திருக்கிறீர்; கனவுகளில் கரைந்திருக்கிறீர்; கருத்துகளில் செறிந்திருக்கிறீர்.*

*அம்மா, சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை ஏழை எளிய கடைக்கோடி தொண்டர்களில் ஒருவளாய், வீதியிலே நின்று, தேவதையாய் வரும் உம்மைப் பார்த்தாலே பரவசம் என்றிருந்த என்னைக்கூட (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவு உயர்த்துவீர்கள் என நான் எண்ணிக்கூட இருக்கவில்லை. அதிலும் என் வாழ்விலே நான் பெற்ற ஒரு பெரும் பேறாய், வரலாற்றுப் பதிவாய், உங்கள் சென்னைப் பிரச்சாரத்தையே மயிலாப்பூரிலே துவக்கி, எனக்காக ஒரு முறையல்ல அம்மா, இரு முறை பிரச்சாரம் செய்து, மயிலாப்பூரிலேயே உங்கள் பிரச்சாரத்தை முடித்து வைத்தீர்கள். இதனை நான் என் உயிர் உள்ளளவும் மறக்கமாட்டேன் அம்மா!*

*ஆயிரம் கரங்கள் நீட்டி, அணைக்கின்ற தாயே! என்னை ஆட்கொண்டு அருள்செய்யும் அரசியல் ஞானியே, அம்மா, என,*

[திருமதி ஆர். ராஜலட்சுமி] [2012 ஜனவரி 31

"தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் அழுங்குழவி"

எனைத் தேற்றி அரவணைத்த அன்னையே உம் கருணைக்கீடாய் எதைச் செய்து சமன் செய்வேன்? நின்னையே சரணென்று நினைக்கிறேன்; நின்னையே சரணென்று நினைக்கிறேன், நின்னல்லால் வேறொரு தலைவியை ஒரு கணமும் நினைந்திலேன். இந்நித்திலத்தில் என் வாழ்வு இக்கணமே முடிந்திடினும், நித்திலத்தில் என் வாழ்வு இக்கணமே முடிந்திடினும், நின் அருளை நினைத்தேதான் அப்பொழுதே நான் முடிவேன்! உம் அருளை நினைத்தேதான் அப்பொழுதும் நான் முடிவேன்!

அம்மா, கடவுளாய் நீங்கள் கோலோச்சும் இக்கோட்டையிலே சான்றோர் நிறைந்த சபைதனிலே மீண்டும் ஒரு வாய்ப்பாக ஆளுநர் உரையை முன்மொழியப் பணித்தமைக்கு ஆயிரம் கோடி மலர்களை உம் தாள்களிலே பணிகிறேன் அம்மா! நன்றிகள் பல கோடி. வணக்கம் அம்மா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் திறத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நாளை (1–2–2012) புதன்கிழமை காலை 9–30 மணிக்கு சென்னை அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு 'C' பிளாக்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சட்டமன்ற பெண் உறுப்பினர்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்துவைக்க இருக்கிறார்கள். எனவே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள்.



2012 ஜனவரி 31]

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் சார்பில் எனது கருத்துகளை முன்வைக்கும் வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுகிறேன்.

எடுத்ததற்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்து, எல்லா நேரத்திலும் வெளிநடப்புச் செய்து கொண்டிருப்பது, ஓர் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாகாது. எதை எதை எதிர்க்க வேண்டுமோ அதை எதிர்க்க வேண்டும்; எதை எதை வரவேற்க வேண்டுமோ அதை வரவேற்க வேண்டும்.

*முற்பகல் 11–40*

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்றார் திருவள்ளுவர். செய்ய வேண்டியவற்றை செய்யத் தவறினால், அதை எடுத்துச் சொல்லவும், செய்கின்ற காரியத்தில் குறைபாடு இருந்தால் அதைச் சுட்டிக்காட்டவும் கடமைப்பட்டு இருப்பதுதான் ஓர் எதிர்க்கட்சியினுடைய இலக்கணமாகும். தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் அத்தகைய ஒரு எதிர்க்கட்சியாக செயல்படுமே தவிர, *(மேசையைத் தட்டும் ஒலி)* எல்லா நேரத்திலும் எல்லாவற்றையும் எக்காரணத்தைக் கொண்டாவது எதிர்க்க வேண்டும் என்பதை ஒரே குறிக்கோளாகக் கொண்டு செயல்படாது.

ஆளுநர் உரையில் நிறைகளும் உள்ளன; குறைகளும் உள்ளன. நிறைகளை இங்கே சுட்டிக்காட்டிப் பேசுவதற்கு ஆளுந்தரப்பில் நிறைய பேர் இருக்கின்றீர்கள். ஆகவே, நிறைகளையே நாங்கள் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டுமென்று நிச்சயமாக ஆளுங்கட்சியினர் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அவற்றைத் திரும்பத் திரும்ப நாங்களும் சொல்வதனாலே உங்களுக்கும் ஒருவேளை காது புளித்துப் போகும். எங்களுக்கும் நேரம் கிடைக்காமல் போய்விடும். ஆகையினாலே சிலவற்றை, இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்வது எங்களது கடமை என்று கருதுகிறேன். குறைகளை எடுத்துச் சொல்வதனாலே அது குற்றங்களாக ஆகிவிடாது. குறைகள் வேறு; குற்றங்கள் வேறு.

ஒரு அரசு என்கின்றபோது, பல இலட்சக்கணக்கான அரசு அலுவலர்களைக் கொண்டு இயங்குகின்ற மாபெரும் நிறுவனமாகும். ஆகவே, எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும்,

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 ஜனவரி 31

எல்லா அலுவலர்களும் நேர்மையாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்வார்கள் என்று யாராலும் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற குறைகளை எதிர்தரப்பிலே இருக்கிற நாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றபோது அந்தக் குறைகளைச் சரி செய்யவும், நிருவாகத்தைச் சிறப்பாக நடத்தவும், மக்களுடைய ஆதரவைத் தொடரவும் வழிவகுக்கும் என்கின்ற காரணத்தாலேதான் எங்கள் தரப்பிலே சில குறைகள் சுட்டிக்காட்டப்படுகின்றனவே தவிர, வேறு காரணத்தினாலே அல்ல. குறிப்பாக, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தைப் பொறுத்தவரை, இந்த ஆளுநர் உரையில் பல திட்டங்கள் வரவேற்கக்கூடிய திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அதேநேரத்தில், சிலவற்றைச் சரிசெய்ய வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

குறிப்பாக, இயற்கையின் சோதனை என்பது சற்றும் எதிர்பார்க்காமல் நடக்கிறது. இன்று பனிக் காலம், குளிர் காலம். ஆனால், நாம் எதிர்பார்த்தோமா நேற்று இரவு திடீரென்று மழை பெய்யும் என்று? ஆகவே, இயற்கை தன்னுடைய கால நிலையை மாற்றிக்கொண்டு இருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஜப்பான் நாட்டிலே பூகம்பம், தாய்லாந்து நாட்டிலே வெள்ளம், அமெரிக்க நாட்டிலே சூறாவளி, நம்முடைய நாட்டிலேகூட, நம்முடைய தலைமுறையிலேதான் பார்க்கிறோம் சுனாமி. இந்தத் 'தானே' புயல்கூட அப்படித்தான். முதலிலே இதைப்பற்றி அறிவிப்பு வந்தபோது எல்லோரும் என்ன நினைத்தார்கள்? எப்போதும் வருகிற புயல்போல்தான் இதுவும் வரும் என்றுதான் எல்லோரும் எண்ணிக்கொண்டு இருந்தார்கள். ஆனால், இந்தத் 'தானே' புயல் என்பது இதுவரையிலே நாம் கண்டிராத, நம்முடைய அறிவுக்கு எட்டியவரையிலே புலப்படாத, மிகப்பெரிய சூறாவளியாக வந்து, கணக்கில் அடங்காத சேதத்தை விளைவித்திருக்கிறது என்று கருதுகிறபோது, இயற்கை இன்றைக்கு பல்வேறு சூழல்களை, ஒருவேளை காலநிலை மாற்றத்தின் காரணமாக, இப்படி வருகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆகவே, இயற்கைப் பேரிடர்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால், அவற்றினால் ஏற்படும் விளைவுகளை நாம் நினைத்தால் நிச்சயமாகத் தவிர்க்க முடியும். அரசினுடைய கொள்கைகள் மூலமும், திட்டங்கள் மூலமும்,



2012 ஜனவரி 31] [திரு. ச. இராமச்சந்திரன்]

அரசினுடைய நடவடிக்கைகள் மூலமும், அல்லல்பட்டு உழன்று வாடுகின்ற மக்களினுடைய வாட்டத்தைப் போக்கிட நிச்சயமாக நடவடிக்கை எடுக்க முடியும்.

'தானே' புயலைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்கின்ற திட்டத்தை நான் வரவேற்கின்றேன். ஆனால், அதுமட்டும் போதாது. இதைப்பற்றி எண்ணிப் பார்க்கின்றபோது, இதிலே மூன்று கட்டங்களாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கருதுகிறேன். ஒன்று, உடனடித் தேவை; இன்னொன்று குறுகிய காலத் திட்டம்; அடுத்து நீண்ட காலத் திட்டம். அதாவது ஆங்கிலத்திலே சொல்வார்கள். 'Fire extinction, fire proof and fire prevention' என்று சொல்வார்கள்.

*முற்பகல் 11–45*

இந்தத் 'தானே' புயலினாலே, குறிப்பாக கடலூர், விழுப்புரம், நாகை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. முதலிலே அங்கே புயல் ஏற்பட்டவுடனே, 2, 3 நாட்கள் ஒன்றுமே நடைபெறவில்லை. ஏனென்றால், எதிர்பாராத அளவிற்கு சாலைகளிலே மரங்கள் விழுந்துவிட்டன. மின்சாரம் நின்றுவிட்டது. போக்குவரத்து இல்லை. தொலைத் தொடர்பு வசதி இல்லை. பல்வேறு வகையிலே மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இருந்த வீடுகளே காணாமல் போய்விட்டன. தெருவிலே நிற்கின்ற அளவிற்கு நிலைமைகள் ஏற்பட்டுவிட்டன. இத்தகைய ஒரு திடீர் சூழ்நிலை ஏற்பட்டபோது, அவர்களுக்கு இன்றியமையாதத் தேவையாக இருந்தது குடி தண்ணீர். குடி தண்ணீர், நீர் மூழ்கி மோட்டார் மூலம்தான் எடுக்க வேண்டும். நீர் மூழ்கி மோட்டாருக்கு மின்சாரம் தேவை. மின்சாரம் இல்லை. ஆகவே, மின்சாரம் இல்லாத காரணத்தாலே அவர்கள் சமையல் செய்வதற்கும் வழியில்லை, குடிப்பதற்கும் தண்ணீர் இல்லை. அந்த நிலைமையில் அவர்கள் இருந்த நேரத்தில், அவர்களைப் பல தலைவர்கள், அரசியல் தலைவர்கள் சென்று பார்த்தார்கள். நிவாரணம் அளித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சென்றார். அரசியல் கட்சித் தலைவர்கள் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரவர்களால் இயன்ற உதவியைத் தந்தார்கள். அரசியல் தலைவர்கள் சுற்றுப்பயணம் செய்வதன் நோக்கமே, வீழ்ந்துவிட்ட

மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகத்தான். நாம் போன உடனேயே அவர்கள் எழுந்துவிடப் போவதில்லை. ஆனாலும் அது ஒரு நம்பிக்கையை உருவாக்கும் என்கின்ற காரணத்தினாலேதான். சுனாமிகூட என்ன செய்தது? அது வந்த நேரத்திலே அன்றைய தினமே அழித்துவிட்டுச் சென்றுவிட்டது. ஆனால், இன்றைக்கு இந்தத் 'தானே' புயலினால் பாதிக்கப்பட்டவர்களுடைய நிலைமை, தினந்தோறும் செத்து செத்துப் பிழைக்கின்ற நிலைமை.

இது தொடர்ந்து சேதத்தை விளைவித்துவிட்டு, கையிலே இருந்ததைப் பறித்துக்கொண்டு பட்டினி போட்டுவிட்டுச் சென்றுவிட்டதைப்போல, இந்தத் 'தானே' புயல் இதுவரையிலே இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே வந்திருக்கின்றது. அதனுடைய விளைவாக முதலிலே அங்கே நிவாரணம் என்று சொல்கிறபோது, அவர்களுக்கு உணவுப் பொட்டலம், அதேநேரத்திலே குடி தண்ணீர். சாதாரணமாக இதுபோன்ற நிலைமைகள் வருகின்றபொழுது நாம் ஹெலிகாப்டரில் போய் சுற்றிப் பார்த்தால் அவர்களுக்கு ஒரு ஆறுதல். 'தலைவர்கள் வந்து பார்த்தார்கள், நாம் படுகின்ற கஷ்டங்கள் அவர்களுக்குத் தெரிகின்றன. ஆகையினாலே, நிச்சயமாக நமக்கு நன்மைகள் கிடைக்கும்' என்ற அவர்களுடைய ஆறுதலுக்காக அத்தகைய சுற்றுப்பயணம் மேற்கொள்வது உண்டு.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, 1980-களிலே என்று நினைக்கிறேன். சென்னையிலே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டபொழுது, அன்றைய தினம் பாரதப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அவர்கள், இன்னும் சொல்லப்போனால், அன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் எதிர் அணியிலே இருந்தார்கள். எதிர் அணியிலே இருந்தாலுங்கூட, அவர்கள் அன்றைய தினம் இங்கே வந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்து, ரூ.10 கோடியை நிவாரணமாக அறிவித்துவிட்டுச் சென்றார்கள். ஆனால், இந்தத் தடவை இவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டும்கூட, டெல்லியிலே இருந்து பிரதமரோ அல்லது முக்கியமான மந்திரிகளோ வந்து பார்த்து ஒன்றும் செய்யவில்லை.

புதுச்சேரிக்கு வந்த உள் துறை அமைச்சர் அவர்கள் போகிற வழியிலே, அந்த வழியாகப் போனாரே தவிர, மத்திய அரசு போதுமான அக்கறை காட்டியதா என்றால், நிச்சயமாக இல்லை.





ஏனென்றால் முழுக்க, முழுக்க இந்தச் சேதத்தின் அளவைப் பார்க்கிறபொழுது அவர்கள் பெரும் பங்கு வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆகையினாலே, உடனடித் தேவையாகத் தேவைப்படுவது நிவாரண நிதி. நிவாரண நிதி போதுமான அளவிற்கு இல்லை. ஏனென்றால் அங்கே இருக்கின்றவர்கள் குடும்பத்தை நடத்துவதற்கோ அல்லது பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கோ அல்லது மருத்துவச் செலவிற்கோ அல்லது வாழ்க்கைச் செலவிற்கோ நிவாரணத் தொகை போதுமான அளவில் இல்லை. போதுமான நிதியும் ஒதுக்கப்படவில்லை. அது உரிய நேரத்திலும் வந்து சேரவில்லை. அதன் விளைவாக ஆங்காங்கே இருக்கின்ற மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதையும், சாலை மறியல் நடத்தி வருவதையும் நாம் பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'தானே' புயலால் ஏற்பட்ட சேதங்களைப்பற்றி இங்கே குறிப்பிடும்போது, 'தானே' இது வரலாறு காணாத அளவில் ஏற்பட்ட சேதம் என்பதை குறிப்பிட்டார். யாருமே இதுவரை கண்டிராத அளவிற்கு 35,000-க்கும் மேற்பட்ட electric pole-கள் சூறாவளிக் காற்றில் வீசி அடிக்கப்பட்டன. மாவட்டம் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சாலைகளில் நூற்றுக்கணக்கான மரங்கள் விழுந்து கிடந்தன. எல்லாமே சீரழிக்கப்பட்டுவிட்டன. இயல்பான வாழ்க்கையை நடத்துவதற்கு என்னென்ன கட்டமைப்புகள் தேவையோ, என்னென்ன கட்டமைப்புகள் அரசால் அங்கே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தனவோ, எல்லாமே சீர்குலைந்துவிட்டன. ஆனால், 2, 3 நாட்கள் வரை எந்தப் பணியுமே நடைபெறவில்லை என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது தவறு. அதை ஆணித்தரமாக மறுக்கிறேன்.

முற்பகல் 11-50

சாலைகளில் விழுந்து கிடந்த மரங்களையெல்லாம் போர்க்கால அடிப்படையில் 24 மணி நேரத்திற்குள் அகற்றிவிட்டோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மரங்களை அகற்றாமல்,

வண்டி, வாகனங்கள் எப்படிச் செல்ல முடியும்? குடிநீரை எப்படிக் கொண்டுபோய்க் கொடுக்க முடியும்? சாப்பாட்டுப் பொட்டலங்களை எப்படிக் கொண்டுபோய்க் கொடுக்க முடியும்? ஆகவே, அதைத் தலையாயப் பணியாக மேற்கொண்டு, 24 மணி நேரத்திற்குள் சாலைகளில் விழுந்து கிடந்த மரங்களை அகற்றிவிட்டோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

மாவட்ட நிருவாகமும் தன்னால் இயன்ற பணிகளை உடனடியாக மேற்கொண்டது. தகவல் தொடர்பே இல்லை, துண்டிக்கப்பட்டு விட்டது என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவரே கூறுகிறார். ஆகவே, உடனடியாக இயன்ற இடங்களில் எல்லாம் உணவுப் பொட்டலங்களும், குடிநீரும் விநியோகிக்கப்பட்டன. படிப்படியாக நிவாரணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்கள், வீடுகளை இழந்த மக்களெல்லாம் பொது இடங்களில், பள்ளிக்கூடங்களில் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு உணவும் வழங்கப்படவில்லை; எந்த நிதியுதவியும் செய்யப்படவில்லை என்று சொல்வதெல்லாம் தவறு. புள்ளிவிவரங்கள் இருந்தால், புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு பேச வேண்டும். இல்லையென்றால், பொத்தாம்பொதுவாக எதுவுமே நடைபெறவில்லை என்று சொல்வது மிகவும் எளிதான ஒரு காரியம்; உண்மையாக அப்படி இல்லை.

அண்டை மாநிலமாக உள்ள புதுச்சேரியில்கூட, அங்குள்ள அமைச்சர்கள்கூட, அங்குள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள்கூட தமிழ்நாட்டில் நடைபெற்ற பணிகளைப் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகையாளர்கள் சந்திப்பிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். புதுச்சேரி முன்னாள் முதல்வர்கூடப் பாராட்டியிருக்கிறார். தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற பணிகளைப்போல், நிவாரணப் பணிகளைப்போல் இதுவரை எங்குமே நடைபெறவில்லை என்றும் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, கடலூர் மாவட்டத்திலும், விழுப்புரம் மாவட்டத்திலும், நாகை மாவட்டத்திலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்க்கின்றபோது, சாதாரணமாக எந்த அரசாக இருந்தாலும், மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மீண்டும் கொண்டு வருவதற்குக் குறைந்தபட்சம் 6 மாதங்கள், 7 மாதங்கள் பிடித்திருக்கும். ஆனால், ஒரே மாதத்திற்குள் அதைச் செய்து முடித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சார சப்ளை, மின்சார விநியோகம் ஒட்டுமொத்தமாக அங்கே சீரழிக்கப்பட்டுவிட்டது. இதுவரை தமிழ்நாட்டில் எங்குமே இதுபோன்ற சேதத்தை நாங்கள் பார்த்ததில்லை; யாருமே பார்த்ததில்லை. அங்குள்ள மக்களே மீண்டும் மின்சார சப்ளையை அங்கே ஏற்படுத்திக் கொடுப்பதற்குக் குறைந்தபட்சம் 4 மாதங்கள் பிடிக்கும் என்று நினைத்தார்கள். ஆனால், ஒரு மாத காலத்திற்குள்ளேயே மீண்டும் அங்கே மின்சாரத்தைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) போர்க்கால அடிப்படையில் அண்டை மாவட்டங்களிலிருந்து எல்லாம் மின்சார வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களை அங்கே கொண்டுவந்து, நம்மிடம் நிதி இல்லை என்றாலும், எப்படியோ திரட்டி, 300 கோடி ரூபாய் அளவிற்கு மின்சார வாரியத்திற்குக் கொடுத்து, அண்டை மாநிலங்களிலிருந்தெல்லாம் Electric poles–ஐ வரவழைத்து, தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் நாங்கள் அங்கே நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, பொங்கல் வருவதற்குள் domestic electric supply வழங்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் எடுத்து, இதுவரை உலக சாதனையாக நாங்கள் நிகழ்த்திக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) பொங்கல் வருவதற்குள் அனைத்து வீடுகளுக்கும் அங்கே மின்சாரம் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வேளாண் பம்ப்செட்டுகளுக்கு இந்த மாதம் 30 ஆம் தேதிக்குள் அங்கே மின் சப்ளை வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, அதுவும் செய்யப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)





இதுபோல் செயல்பட்ட ஒரு மாநில அரசை, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரால் சுட்டிக்காட்ட முடியுமா என்று நான் சவால் விடுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மத்திய அரசு எந்த உதவியும் செய்யவில்லை; பாராமுகமாக இருந்தது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே ஒப்புக்கொள்கிறார். அப்படியிருக்கும்போது, மாநில அரசு தன்னிடம் இருக்கின்ற நிதியை வைத்துக்கொண்டு, தன்னிடம் இருக்கின்ற ஆட்களை வைத்துக்கொண்டு, தன்னிடம் இருக்கின்ற

நிதியாதாரங்களை வைத்துக்கொண்டு, இந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கிறோம் என்று சொன்னால், யாராக இருந்தாலும், மனம் திறந்து, மனமுவந்து நம்மைப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். ஏற்பட்டிருக்கிற சேதம் வரலாறு காணாத சேதம். ஆனால், பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் என்னவெல்லாம் செய்திருக்கிறோம், எந்த அளவிற்குச் செய்திருக்கிறோம் என்பதைப் புள்ளிவிவரங்களுடன் 4 ஆம் தேதி என்னுடைய பதிலுரையில் நான் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–55

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லவில்லை. ஆற்றிய பணி போதுமான அளவுக்கு அங்கு இல்லை. அதனுடைய விளைவாக இன்னும்கூட சில இடங்களிலே—இன்றையதினம்கூட தொலைக்காட்சியில் காலையில் பார்த்திருக்க முடியும்—பல இடங்களிலே அந்த நிவாரணத் தொகை கிடைக்கவில்லை; எங்களுக்கு நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே வந்து முறையிட்டிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம். அந்தக் குறைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக இந்தக் கருத்தை எடுத்துச்சொன்னேனே தவிர, வேறல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் யார் தெரியுமா? நல்ல மெத்தை வீடு வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள், அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு தீய நோக்கத்தோடு செயல்படுபவர்கள்தான், ஒரு சிறு கும்பலை வைத்துக்கொண்டு





இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கென்று ஒருசில தொலைக்காட்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதற்காகவே சிலர் வீடியோ கேமராக்களை எடுத்துக்கொண்டு, மைக்குகளை வைத்துக்கொண்டு அலைந்து கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தொலைக்காட்சியிலே பார்த்தால்கூட, 5 பேர், 10 பேர் அல்லது 20 பேர்தான் நிற்பார்கள். ஒட்டுமொத்தமாக ஒரு கூட்டம் இருக்கிறதா என்று சொன்னால், கிடையாது.

ஏற்கெனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அடுத்த 48 மணி நேரத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னையிலே ஓடுகிற அனைத்துத் தண்ணீர் லாரிகளையும் கடலூருக்கு அனுப்பி உடனடியாகத் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோன்று, மின்சாரம் தடைபட்ட காரணத்தினால், ஊரகப் பகுதிகளில் 666 ஜெனரேட்டர்கள், உடனடியாக தமிழ்நாட்டிலே எங்கெல்லாம் ஜெனரேட்டர் இருக்கின்றதோ, அத்தனையையும் உடனடியாக வரவழைத்து, அந்தந்த ஊர்களில் ஓவர்–டேங்க் எங்கெங்கு இருக்கிறதோ, அங்குப் பொருத்தி, மின்சாரம் வழங்கி, உடனடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீர் ஏற்றி, புயல் பாதிப்புக்கு முன்பாக எப்படி சீராகத் தண்ணீர் வழங்கப்பட்டதோ, அதேபோன்று அடுத்த 48 மணி நேரத்தில் ஐந்து நகராட்சிகளுக்கும், 15 பேரூராட்சிகளுக்கும், அத்தனை ஊராட்சிகளுக்கும் தண்ணீர் கொடுத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெனரேட்டர்கள் தரப்பட்டன. நான் இல்லையென்று சொல்லவில்லை. பல இடங்களிலே வாடகைக்கு அந்த ஜெனரேட்டர்களை எடுத்துப் பயன்படுத்தினோம், அது வேறு விவகாரம். ஆனால், நான் சொன்னது, it was not enough. அந்த நேரத்திலே நீங்கள் எவ்வளவுதான் செய்திருந்தாலும்கூட, போதுமான அளவிற்கு முன் தயாரிப்பு இல்லாத காரணத்தினால்,

மக்கள் பாதிப்புக்கு ஆளானார்கள் என்பதைத்தான் நான் சொன்னேனே தவிர, வேறல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தது போதவில்லை என்று சொல்வது மிகவும் எளிதான ஒன்று. ஏழ்மை அதிகம் இருக்கின்ற ஒரு நாட்டில் எவ்வளவு செய்தாலும் போதாதுதான். மத்திய அரசு எவ்வளவு செய்தாலும் போதாது; மாநில அரசு எவ்வளவு செய்தாலும் போதாது. ஆனால், இருக்கின்ற நிதியாதாரங்களை வைத்து, நம்மால் முடிந்ததைச் செய்கிறோம். கடலூர் மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், என்னால் ஒன்றை ஆணித்தரமாகச் சொல்ல முடியும். குடிசை வீடுகள் அதாவது முழுமையாகவோ, பகுதியாகவோ சேதமடைந்த குடிசை வீடுகள் அத்தனைக்கும் தர வேண்டிய நிவாரணத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கான்கிரீட் வீடுகள் வைத்திருப்பவர்கள்கூட நிதி வழங்குவதைப் பார்த்து அவர்களும் உதவி வேண்டும் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அத்தகைய கான்கிரீட் வீடுகள் வைத்திருப்பவர்கள் தங்களுக்கு நிதியுதவி கிடைக்கவில்லை என்று புகார் செய்கிறார்கள் என்பது உண்மை. ஓட்டு வீடு வைத்திருப்பவர்களுக்குக்கூட நிதியுதவி, நிவாரண உதவி வழங்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, குறுகிய காலத் திட்டம் என்கின்ற அடிப்படையிலேயும், நீண்ட காலத் திட்டம் என்கின்ற அடிப்படையிலேயும், ஒரு கருத்தை எடுத்துத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். நிவாரணங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்பொழுதுதான் மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் மாற்றியிருக்கிறார்கள்; அவர்களை வைத்து, இன்னும் எங்கேயாவது குறைபாடுகள் இருக்குமேயானால் அவற்றை அவர்கள் சரி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.





என்னைப் பொறுத்தவரையிலே, அந்தப் பணிகளை நீண்ட காலம் செய்ய வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே, அதற்கென ஒரு இயக்குநரகம் – Director of Relief and Rehabilitation – என்ற ஒரு அமைப்பை உருவாக்குவதைப் பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பலர் வாழ்வுரிமையை இழந்திருக்கின்றார்கள். குறிப்பாக, மீனவர்களானாலும், சிறு சிறு கடைகள் வைத்திருப்பவர்களானாலும், சிறு சிறு தொழில் நடத்துகின்றவர்களானாலும், பல பேர் livelihood issues – அவர்களுக்கு வேண்டியது என்ன என்று பார்த்து, கடன் உதவி அல்லது மற்ற வகையான உதவிகள் ஏதேனும் செய்ய வேண்டியிருக்குமேயானால், அவற்றையும் பரிசீலித்து, ஆராய்ந்து அதற்காக அரசினுடைய பல்வேறு திட்டங்களை, வங்கிகள் அல்லது வணிக நிறுவனங்கள் அல்லது நிதி நிறுவனங்கள் இவற்றின்மூலம் எத்தகைய உதவிகளையும் வழங்கி, மீண்டும் அவர்களுடைய வாழ்வைச் சிறக்கச் செய்வதற்கு, எவ்வாறு அதனைப் பயன்படுத்த முடியுமோ அந்த வகைகளில் வாய்ப்புகளை ஒன்று திரட்டிச் செய்வதற்கு, அத்தகைய ஒரு அமைப்பு பயன்படுமா என்பதையும் அரசு சிந்திக்க வேண்டும்.

*நண்பகல் 12–00*

அதேபோல், பயிர்களை இழந்தவர்களுக்கு–crop damages– பலவகையான திட்டங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் எல்லாம் உரிய முறையில் சென்று சேர்வதற்கு நிச்சயமாக அத்தகைய இயக்குநரகம் இருக்குமேயானால், அவற்றை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்குப் பயன்படும். அதேபோல், பாதிக்கப்பட்ட மக்களும் எந்தத் துறையை அணுக வேண்டும், எந்த அதிகாரியைப் பார்க்க வேண்டும் என்று பார்க்கிறபோது அவர்கள் எளிதாக வந்து பார்ப்பதற்கும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இலங்கையிலே மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டு, அகதிகள் எல்லாம் இங்கே வந்த போது, இதைப்போல துறை ஒன்றை நாம் ஏற்படுத்தி, அது முதலமைச்சருடைய நேரடி நிருவாகத்தில், பொதுத் துறையின் கீழேயே அப்பொழுது வைக்கப்பட்டிருந்தது. ஆகவே, அதைப்பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 ஜனவரி 31

நீண்டகால திட்டம் என்று பார்க்கின்றபோது, இப்போது நெல், கரும்பு, வாழை ஆகிய பயிர்களைச் செப்பனிடுவது என்பது வேறு. நிறைய மரங்கள் விழுந்துவிட்டன. முந்திரி, பலா, மா மரம், புளிய மரம் மற்றும் சவுக்கு இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகின்றவர்கள், அவையெல்லாம் மிகுந்த சேதத்திற்குள்ளானதால், அவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல், திகைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்திருப்பார்கள். அவர்களால் தொடர்ந்து அங்கு படிக்க வைக்க இயலாமல் இருக்கிறார்கள். அண்மையில் நான் சென்று பார்த்தபோது, சில இடங்களில் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களையே இப்பொழுது இரத்து செய்துவிட்டார்கள். இது சற்றும் எதிர்பாராத ஒரு நிலைமையாகும்.

மீண்டும் மரங்களை வைத்து வளர்ப்பதற்குக் குறைந்தது பத்து ஆண்டுகள் ஆகும். ஒரு ஏக்கர் முந்திரியைப் பயிரிட்டால், சுமார் ரூ.40,000/– அதில் வருமானம் கிடைக்கும். பத்து ஏக்கர் என்றால், ஆண்டிற்கு சுமார் நான்கு இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும். இப்பொழுது அவை எல்லாம் தரைமட்டமாகிவிட்டன. அவற்றை அப்புறப்படுத்துவதற்குக்கூட கையில் காசில்லாமல் தவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே, அதற்கென ஒரு திட்டம் தயாரித்து, நீண்டகாலக் கடனாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த அத்தனை ஆலோசனைகளையும் ஏற்கெனவே நாங்கள் பேசி, விவாதித்து, முடிவு எடுத்துவிட்டோம். விழுந்த மரங்களை அப்புறப்படுத்துவது, முந்திரி, பலா, தென்னை மரங்களை மீண்டும் நடுவது, பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு தகுந்த நஷ்ட ஈடு வழங்குவது, அவர்களுக்கு வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுப்பது, எல்லாவற்றையும் என்னுடைய தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, எல்லாவற்றுக்கும் முடிவுகளையும் எடுத்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் இங்கே எதிர்பார்க்க முடியாத அளவிற்கு நிவாரண உதவிகளை வழங்க உள்ளோம். இதில் நடந்த ஒரே ஒரு தவறு என்னவென்று இப்போது தோன்றுகிறது என்றால்,



2012 ஜனவரி 31] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

இந்த ஆய்வுக் கூட்டம் நடந்த அன்றே அந்த முடிவுகளை நான் அறிவித்து இருக்க வேண்டும். ஆனால் அன்று நிறுத்தி வைத்து, சட்டசபை கூட்டத் தொடர் நடைபெறப்போகிறது, இறுதி நாளன்று என்னுடைய பதிலுரை இருக்கும், அந்த பதிலுரையில் இந்த அறிவிப்புகளையெல்லாம் செய்யலாம் என்று நிறுத்தி வைத்தேன் பாருங்கள்; அதுதான் தவறாகப் போய்விட்டது. ஆகவே, கடைசி நாள் 4ஆம் தேதியன்று எனது பதிலுரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரே அசந்து போகும் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்புகள் வெளி வரக் காத்திருக்கின்றன. கடைசி நாளன்று, முதலமைச்சர் பதிலுரை அளித்த பிறகு வேறு யாரும் பேச முடியாது—ஆனால், அன்று பேரவைத் தலைவர் வாய்ப்பளித்தால், முதலமைச்சர் பதிலுரை அளித்த பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குப் பேச வாய்ப்பளித்து, அவர் பாராட்டிப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12–05

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4ஆம் தேதி, அதையெல்லாம் கேட்டால் அசந்து போவேன் என்றார்கள். ஆனால், நான் இன்றைக்கே அசந்து போனேன் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால், அந்த மக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது பெரிதும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நான் சென்று பார்த்தபோதுகூட, அவர் வருவார் என்று இன்னும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் 6 ஆம் தேதி வரப் போகிறார் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; எனக்குத் தெரியாது என்றேன். ஏனென்றால், அந்த அளவிற்கு அவர்களுக்கு ஒரு எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் இருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் இதிலே இந்திய அரசு மிகப் பெரிய அளவிற்கு பங்கு பெற வேண்டியது அவசியமாகும். பல இலட்சக்கணக்கான கோடி ரூபாய்களை வரவு—செலவுத் திட்டமாக வைத்துக்கொண்டு ஆண்டுதோறும் நிருவகிக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றது இந்திய அரசு. ஒரு மாநில அரசு தன்னாலே தாங்கக்கூடிய சுமையைத்தான் தாங்க முடியும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 ஜனவரி 31

ஆனால், அதற்கும் மேலாக இத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்பது மிக மிகக் கடினமாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் 14ஆவது பக்கத்தில் 13ஆவது பத்தியை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒருவேளை படிக்கவில்லையோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்காகவும், இந்த அவையில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்காகவும் அந்த ஒரு பத்தியை நான் வாசித்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

“நிலைப் பயிர்களான முந்திரி, பலா, தென்னை முதலியன அழிந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், இதற்கான நிரந்தர மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்பட்டதுடன், ஒரு சிறப்பு நேர்வாக, நிலைப் பயிர்களை, குறிப்பாக முந்திரிப் பயிரை, வீரியம் மிக்க ஒட்டுச் செடிகளைக் கொண்டு, உயர் அடர் நடவு முறையில் மீண்டும் பயிரிட்டு, ஓராண்டுப் பராமரிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளவும், (மேசையைத் தட்டும் ஒலி) வருடாந்திரப் பயிர் வகைகள் பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் பயிர் செய்ய ஏதுவாக, விதையுடன் இடுபொருட்களும் அடங்கிய சிறு தளைகளை விலையின்றி வழங்கவும், முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்குப் பதிலாக, அக்குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வீடுகள் அளிக்கும் வகையில் 1,000 கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் ஒரு மகத்தான திட்டம் இந்த அரசால் தொடங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளின் விவரங்களை எடுத்துக் கூறி தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து 5,248 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவி கோரும் விரிவான கோரிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இடைக்கால நிவாரணமாக 500 கோடி ரூபாயை அளித்துள்ள மத்திய அரசுக்கு . . .” நன்றி



2012 ஜனவரி 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

என்று இதிலே போட்டிருக்கிறது. இருந்தாலும் அதை நான் மீண்டும் இங்கே வாசிக்க விரும்பவில்லை. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட அம்சங்களைப் பற்றியெல்லாம் ஏற்கெனவே ஆளுநர் உரையிலேயே விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் விரிவாக எனது பதிலுரையில் குறிப்பிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். இன்னும் நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** இப்போதே முடித்துவிடட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். Long run–இல் என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பத்தி 13–இல் ஓராண்டுக்கு மட்டும் என்று போடப்பட்டிருக்கிறது. அதைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். ஓராண்டு போதாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் ஓராண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதலமைச்சர் பதிலுரையில் எத்தனை ஆண்டுகள் என்று குறிப்பிடப்படும் என்பதைப் பொறுத்திருந்து கேட்கவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற நிவாரணப் பணிகள் எங்களுக்கு மட்டுமல்ல; பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நம்பிக்கையையும், மன நிறைவையும், வாழ்வுரிமையையும் பெற்றுத் தரும் என்று உறுதியாக நம்புகிறேன். என்னுடைய நம்பிக்கை வீண் போகாது என்றும் கருதுகின்றேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 ஜனவரி 31

அதேநேரத்திலே ஆளுநர் உரையில் ஒரு கருத்து குறிப்பிடப்படவில்லை என்பதனால் அதை மட்டும் சுட்டிக்காட்டி என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அண்மையிலே இந்தியாவினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அங்குச் சென்று இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, அங்கு வீடு கட்டும் திட்டத்திற்கு உதவிகளையெல்லாம் செய்துவிட்டு வந்திருந்தார் என்ற செய்திகளைப் பார்த்தோம். ஆனால், உண்மையில் இலங்கையிலே உள்ள தமிழர்களின் நிலை என்ன? அண்மையில் வந்த செய்தி ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கேயுள்ள தமிழ் இளைஞர்கள் காணாமல் போகிறார்கள்; கடத்தப்படுகிறார்கள்; சிறையிலே தள்ளப்படுகிறார்கள், அவர்களுடைய நிலை என்ன ஆயிற்று என்று இன்றுவரை தெரியவில்லை; இன்றும்கூட அதே நிலைமை. இதை நான் சொல்லவில்லை. இலங்கை அரசு, அவர்களே இந்த மனித உரிமை மீறலைப் பற்றி ஐ.நா. மன்றம் அதற்கான ஒரு குழுவை அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தபோது, (குறுக்கீடு) இல்லை, இல்லை. . .

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், கவர்னர் உரையிலே இதைப் பற்றிப் பேசக்கூடாது. வேறு ஒரு சமயத்தில் இதைப் பற்றிப் பேசலாம்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** Any Subject, ஆளுநர் உரை என்பது general discussion. ஆளுநர் உரையிலே, அதாவது வந்தது, வராதது it is a general discussion, it is a policy. பட்ஜெட்டில்தான் வரவு–செலவு, ஆளுநர் உரையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பொதுவாக எல்லாவற்றையும் சொல்லலாம். அதற்குப் பதில் சொல்வது, சொல்லாதது என்கிற உரிமை அரசுக்கு உண்டு. ஆனால் அரசின் கவனத்திற்கு எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துச் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் இந்தக் கருத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகச் சொல்கிறேன். இதில் வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, இலங்கை அரசே, அவர்களே ஒரு குழுவைப் போட்டு நீதிபதிகளை எல்லாம் போட்டு விசாரித்திருக்கிறார்கள். அந்தக் குழுவிற்குப் பெயர் "Lessons learnt and Reconciliation Commission" என்று அவர்களே போட்டு அவர்களே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆளுங்கட்சி அங்கே இருக்கிற அரசே போட்ட அறிக்கை. அந்த அறிக்கையினுடைய ஒரு பகுதியை மட்டும் சொல்ல வருகிறேன். It reported that it was alarmed by the large number of complaints of abductions, enforced or involuntary disappearances and arbitrary detentions. இளைஞர்கள் காணாமல் போகிறார்கள், கடத்தப்படுகிறார்கள், அவர்கள் என்ன ஆனார்கள் என்றே எங்களுக்கே தெரியவில்லை என்று அங்கே இருக்கின்ற ஆளுங்கட்சி நியமித்த குழுவே அதனுடைய பரிந்துரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறது. இந்த அடிப்படையிலே தமிழர்கள் பகுதியிலே இருக்கக்கூடிய சிங்கள இராணுவத்தினர் இன்னும் அங்கே இரண்டு இலட்சம் பேர் இருக்கிறார்கள். இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்க வேண்டிய அவசியம் என்ன? It is an occupied territory. போர் முடிந்த பிறகும்கூட அங்குள்ள தமிழ் மக்களுக்கு இன்னும் நடமாடுகிற உரிமைகூட இல்லாமல் அந்தப் பகுதி இராணுவத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அவர்கள் அடிமைகளாகத்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவால் இந்த நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டித் தருவது என்பது வேறு. ஆனால் அதேநேரத்திலே அவர்களுடைய வாழ்வுரிமை பறிக்கப்படுகிறது. இந்த நிலைமையையும் தமிழக அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சென்று வருகிறபொழுதோ, வெளியுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சென்று வருகிறபொழுதோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையோ அல்லது இந்த அரசையோ சந்திக்கின்றபோது இந்த நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.



2012 ஜனவரி 31] [திரு. ச. இராமச்சந்திரன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி தொகுதியில் மீண்டும் நான் போட்டியிட அனுமதி வழங்கிய எங்களுடைய தலைவர் தமிழகத்தினுடைய தன்னிகரில்லாத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்தத் தொகுதியிலிருந்து என்னைச் சட்டமன்றத்திற்கு அனுப்பிய

வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் உரையின்மீது பேசுகிற இந்த வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே "தானே" புயலைப் பற்றி பேசுகிறபோது "தானே" புயலால் ஏற்பட்ட அந்தச் சேதாரங்களை எல்லாம் நிவர்த்தி செய்கிறேன் என்று இங்கே முதல்வர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால், இந்த கவர்னர் உரையில் பக்கம் 13-இல் பழுதடைந்த கட்டமைப்புகளைச் சீரமைக்கவும், மற்றவற்றைச் சீரமைக்கவும் 850 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் வழங்கி ஆணையிட்டார்கள் என்று ஒரு வரி வருகிறது. ஆனால் பக்கம் 15-இல் மத்திய அரசிடமிருந்து தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து 5,248 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவி கோரும் விரிவான கோரிக்கை அளிக்கப்பட்டு, அதில் இடைக்கால நிவாரணமாக 500 கோடி ரூபாயை மத்திய அரசு அறிவித்திருப்பதாகத் தெரிவித்து அதற்கு நன்றியையும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் முதல்வர் அவர்கள் புத்தகத்திலே நன்றியைத் தெரிவித்துவிட்டு அவையிலே பேசுகிறபோது நன்றியைத் தெரிவிக்கவில்லை. இருந்தாலும், மத்திய அரசு கொடுத்துள்ள பணத்திற்கு நன்றி தெரிவித்தால்தான் மீதமுள்ள நிதியினை நீங்கள் கேட்டுப் பெறமுடியும். ரூ.850 கோடி வழங்க நீங்கள் உத்தரவிட்டிருக்கிறீர்களே, அதில் இந்த 500 கோடி ரூபாய் சேர்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. 500 கோடி ரூபாய் நிச்சயம் அதில் போய்ச் சேர்ந்திருக்கும். 500 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணம் வரும் என்று தெரிந்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.850 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தானே" புயல் தாக்கிய இரண்டு நாட்களுக்குள்ளாகவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா





அவர்கள் 850 கோடி ரூபாயினை மத்திய அரசினுடைய தயவை எதிர்பார்க்காமல் மாநிலத்தினுடைய சொந்த நிதியை ஒதுக்கீடு செய்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. அப்படியானால் 1,000 கோடி ரூபாயில் 1,00,000 கான்கிரீட் வீடுகள் கட்டும் மகத்தான திட்டம் இந்த அரசின்மூலம் தொடங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்; இதிலும் மத்திய அரசு நிதி வருவதற்கு முன்பாக மாநில அரசு 1,000 கோடி ரூபாய் செலவு செய்து 1,00,000 கான்கிரீட் வீடுகளை கட்டுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், படித்துப் பார்த்துப் புள்ளிவிவரங்களைப் புரிந்து பேசுகிறார்களா அல்லது புரியாமல் பேசுகிறார்களா என்பது ஒன்றும் புரியவில்லை. 'தானே' புயல் வந்தவுடனேயே உடனடி நிவாரணமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.850 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். மத்திய அரசை எதிர்பார்த்து அல்ல. மாநிலத்தில் ஏற்பட்டுவிட்ட இயற்கை இடர்ப்பாட்டைக் களைவதற்கு உடனடி நிவாரணமாக ரூ.850 கோடியினை ஒதுக்கி, நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. மத்திய அரசிடம் தேசிய பேரிடர் பாதுகாப்பு நிவாரண நிதி என்று ஒன்று இருக்கிறது. மாநிலங்களில் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படுகிற இடர்ப்பாடுகளைக் களைவதற்காக அந்த நிதி அங்கே இருக்கிறது. அதிலிருந்து ரூ.500 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இது நமது உரிமை. மத்திய அரசு அதைக் கொடுப்பதற்கு கடமை இருக்கிறது. அதிலிருந்து ரூ.500 கோடி தற்போது கொடுத்திருக்கிறார்கள். விரிவான அறிக்கையில் ரூ.5,248 கோடி கேட்டிருக்கிறோம். எல்லா இனங்களுக்கும் தேவைப்படுகின்ற நிதி 5,248 கோடி ரூபாய். மத்திய அரசு

ஒதுக்கியிருப்பது ரூ. 500 கோடிதான். இதுதான் இந்த விளக்கத்தில் வந்துள்ளது. ரூ. 1,000 கோடி என்ற அளவில் நீண்டகாலத் திட்டமாக ஒரு இலட்சம் வீடுகள்–"தானே" புயலால் குடிசை வீடுகள் எல்லாம் காற்றில் பறந்துபோய்விட்டன. அவர்களுக்கு நிலையான உறுதியான வீடுகளை அந்த ஏழையெளிய மக்களுக்குக் கட்டித் தரவேண்டும் என்ற தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு இலட்சம் வீடுகளுக்கு ரூ.1,000 கோடி அளவில் உடனடியாக திட்டம் தந்திருக்கிறார்கள். இதனைப் பாராட்டுவதை விட்டுவிட்டு, உள்ளே புகுந்து, ஏதேதோ புள்ளிவிவரங்களைத் தெரிவித்து குழப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழக அரசின் திட்டமா அல்லது மத்திய அரசினுடைய திட்டமா என்ற கேள்வியைத்தான் கேட்டேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முழுக்க முழுக்க மாநில அரசின், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டம்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது IAY திட்டம் என்று இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம் என்று ஒன்று உள்ளது. அதைத் தெரிந்துகொள்ளுங்கள். அதனுடைய யூனிட் காஸ்ட் ரூ.45,000 தான். ஒரு வீடு கட்டுவதற்கு மத்திய அரசு ஒதுக்கும் நிதி ஒரு யூனிட் காஸ்ட் ரூ.45,000 தான். இதில் 75 சதவிகிதம்தான் அவர்கள் கொடுக்கிறார்கள். அதாவது ரூ.33,500 தான் அவர்கள் கொடுக்கிறார்கள். இதில் மாநில அரசின் பங்காக ரூ.11,500 நாம் போட்டு ஒரு வீடு கட்ட ரூ.45,000 கொடுக்கிறோம். இதில் ஒரு வீடு கட்ட முடியுமா? இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம் என்று அவர்கள் பேர் வைத்துள்ளனர். அதில் 75 சதவிகிதம் மத்திய அரசு நிதியாக அவர்கள் கொடுக்கிறார்கள். 25 சதவிகிதம் மாநில அரசு போட்டு அந்த வீட்டினைக் கட்டித்தருகிறார்கள். அவர்கள் ஒரு திட்டம் தயாரித்து அனைத்து மாநில அரசுகளுக்கும் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த 45,000 ரூபாயில், ரூ.33,000 அவர்கள் கொடுப்பதோடு 66,500 ரூபாயைக் கூடுதலாகப் போட்டு ஒரு இலட்சம் ரூபாய்க்கு அந்த இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டத்தில் கட்டித் தருகிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இந்தியாவில் வேறு எங்குமே இல்லை. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தமிழ்நாட்டில் மட்டும்தான் உண்டு என்பதை திரு. அன்பழகன் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதை நான் புரிந்துகொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை. உங்களுடைய புத்தகத்தில் 15 ஆவது பக்கத்தில் உள்ள செய்தியைத்தான் சொன்னேன். இதில் 1,000 கோடி ரூபாய்க்கு ஒரு இலட்சம் வீடுகள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதில் மத்திய அரசின் நிதி வரப்போகிறதா? அதில் கட்டப் போகிறீர்களா? அதைத்தான் கேட்டேன். இல்லையென்றால் இல்லையென்று சொல்லுங்கள். உங்களுடைய வரவு–செலவுத் திட்டத்தில் தனியாக அறிவிக்கப் போகிறீர்களா என்று கேட்கிறேன். பரவாயில்லை. (குறுக்கீடுகள்) அடுத்து, பக்கம் 23 இல் . . .

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2006 ஆண்டுகளிலே, நாம் கடந்த காலத்திலே ஆளுங்கட்சியாக இருந்தபோது முதன்முதலில் ஏதாவது வில்லங்கம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக நம்முடைய

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஜனவரி 31

அன்பழகனை பேசவைப்பார்கள். உள் துறை, காவல் துறை மானியத்திலே அவரைப் பேசவைப்பார்கள். அவர் நேரே வருவார், சபாநாயகர் பக்கத்திலே வந்து அந்தப் புத்தகத்தையெல்லாம், policy note–ஐ கிழித்துப்போட்டுவிட்டு போய்விடுவார். இன்றைக்கும் அதுமாதிரி உள்நோக்கம் ஏதாவது இருக்கிறதா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் புத்தகத்தில் இருப்பதைத்தான் படிக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் தனியாக எழுதி எடுத்து வந்திருந்தால் வேறு மாதிரி பேசுவேன். நான் கவர்னர் உரையைத்தான் படிக்கிறேன். பக்கம் 23-இல் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பற்றிச் சொல்லும்போது, "புதிய மின் உற்பத்தியை ஏற்படுத்தத் தவறியதால்" என்று ஒரு வார்த்தையைச் சேர்த்திருக்கிறீர்கள். தி.மு.க. ஆட்சியில் 2006–2011-இல் நாங்கள் புதிய மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக M.o.U. போட்டிருக்கிறோம். மேட்டூரில் 600 மெகாவாட் N.G.O., T.N.E.B.யும் சேர்ந்து. தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் N.L.C.– E.B.–யும் சேர்ந்து. வடசென்னையில் 1,000 மெகாவாட் T.N.E.B தனியாக. உடன்குடியில் 800 மெகாவாட் T.N.E.B. மட்டும். வள்ளியூரில் 600 மெகாவாட் T.N.E.B. – N.T.P.C.–யும் சேர்ந்து. ஆக மொத்தம் 4,000 மெகாவாட் இந்த ஆண்டு இறுதிக்குள் வரப்போகிறது. (குறுக்கீடுகள்) எங்களுடைய ஆட்சியில் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், நீங்கள் இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு கருத்தைக் கூறும்போது,



2012 ஜனவரி 31] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அன்பழகன், இது முறையல்ல. அமைச்சர் பதில் சொல்லும்போது நீங்கள் அமர வேண்டுமல்லவா? உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லும்போது (குறுக்கீடுகள்) அமைச்சர்கள் பேசுவதை அவர் கேட்கவேண்டும். அந்த விதிமுறைகூட தெரியாமல் இருக்கிறாரே என்பதுதான் வேதனையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கு M.o.U.s போட்டதாகச் சொல்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுவிட்டோம் என்றும் சொல்கிறார். அதிலே புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது மட்டும்தான் நடந்ததே தவிர, அடுத்த பணிகள் எதுவுமே நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொன்னால், உடன்குடியில் 2 x 800 மெகா வாட் என்ற அளவிலே 1,600 மெகா வாட் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்–பாரத மிகுமின் நிலையத்தோடு joint venture –ஆக, கூட்டாக ஒப்பந்தத்தை—M.o.U. போட்டார்கள். போட்டு எத்தனை வருடம் ஆனது? தி.மு.க. ஆட்சியில் ஆரம்ப காலத்திலே M.o.U. போட்டுவிட்டு கடைசிவரையில் ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை. அதற்குப் பின்பு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்புதான் அந்தத் திட்டத்தைப் புதுப்பிப்பதற்காக, அதைச் செயல்படுத்துவதற்காக இப்போது பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. நீங்கள் போட்ட M.o.U., M.o.U.–வாகத்தான் இருக்கிறது. 4 வருடம் நீங்கள் முயற்சி செய்திருந்தால், 4 ஆண்டுகளிலே உங்கள் ஆட்சிக் காலத்திலே உற்பத்தியைத் தொடங்கியிருக்கமுடியும். ஆனால் பேப்பர் அளவிலே போட்ட திட்டம்; நாங்கள்தான் கொண்டுவந்தோம் என்று சொல்கிறீர்கள். அதில் எந்தவித பயனும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்

பார்த்தால் 4 ஆயிரம் மெகா வாட்டிற்கு நீங்கள் M.o.U. போடவில்லை. அன்றைக்கு இருந்த மின் துறை அமைச்சர் ஏறத்தாழ 40,000 மெகா வாட் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே மின் உற்பத்தி செய்யப்படும் என்று இதே சட்டமன்றத்திலே அறிவித்தார். (குறுக்கீடு) முதலில் 40,000 மெகா வாட் என்று சொன்னார். பிறகு ஒரு இலட்சம் மெகா வாட் வரைக்கும் என்று சொன்னார். தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; எங்களுடைய ஆட்சிக் காலத்திலே இந்தியாவிற்கே நாங்கள் மின்சாரத்தைக் கொடுப்போம் என்று சொன்னார். போட்ட M.o.U..க்கள் இதுவரைக்கும் செயல்படுத்தவில்லை. M.o.U., போட்டதையே ஒரு சாதனையாக நீங்கள் இங்கே குறிப்பிடவேண்டியதில்லை. அது செயலாக்கத்திற்குத் தொடங்கக்கூட இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த 8 மாத காலத்திற்குள் மின்சார உற்பத்திக்கான அனைத்து திட்டங்களையும் முனைப்போடு செயல்படுத்தி, திட்டங்களைத் தொடங்கி செயலாற்றி வருகிறது என்பதையும், அவை விரைவிலே உங்களுக்குப் பலனைத் தரும் என்பதையும், 2013 ஆம் ஆண்டு முடிவதற்குள் தமிழகம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலே மின்சார உற்பத்தியில் மிகை மாநிலம் என்ற நிலையை எய்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அன்பழகன் உங்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். அவர் சொல்லி முடித்த பிறகு நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். ஆனால், அவர் கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நீங்களும் பேசிக்கொண்டேயிருந்தால் எப்படிக் குறிப்பெடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. பொதுவாக அமைச்சர்கள் எழுகின்றபோது, நீங்கள் உட்கார வேண்டும். Please sit down. திரு. இராமகிருஷ்ணன், உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12–25

**திரு. ஜெ. அன்பழகன்:** அமைச்சர் அவர்கள் M.o.U. போட்டுவிட்டால் அத்திட்டம் நிறைவேறாது என்று சொல்கிறார்.



ஆனால், இந்த ஆண்டு இறுதிக்குள், 4,000 மெகா வாட் வரப்போகிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்து இப்போது 8 மாதங்கள் ஆகியிருக்கின்றன. நீங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக தேர்தல் வாக்குறுதியில் என்ன சொன்னீர்கள் என்றால் “தடையில்லா மின்சாரம் கொண்டுவருவோம்” என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) சொல்லி முடித்து விடுகிறேனே. சொல்வதற்குமுன் நீங்கள் எழுந்தால் எப்படி? (குறுக்கீடு) தடையில்லா மின்சாரம் இல்லை. தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு கிராமங்களில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) Please sit down. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் ஏறாது. Please sit down. நான் சொல்வதைக் கேட்டு, உட்காருங்கள். நீங்கள் சொல்கிற கருத்துக்கு அமைச்சர் அவர்கள் எழுந்து பதில் சொல்வதற்கு உரிமை உண்டு. அவர் எழுந்திருக்கும்போது நீங்கள் உட்காருங்கள். மறுபடியும், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது ஏன் நீங்கள் குறுக்கே பேசுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,074 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்களே என்று சொல்கிறார். நீங்கள் சொன்னது மாதிரி சொல்லிவிட்டு, வேண்டாமென்று செயல்படுத்தாமல் விடுபவர் அம்மா அல்ல. அம்மா ஒன்று சொல்வதற்கு முன்பாக பலமுறை யோசிப்பார்கள். பலமுறை எண்ணிப் பார்த்து, அதாவது

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு”

என்று வள்ளுவர் சொன்னதைப்போல, ஒரு திட்டத்தை அறிவிப்பதற்கு முன்பு பலமுறை எண்ணி, அதற்குப் பின்பு, அத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வந்ததற்குப் பின்புதான் அவர் அதை அறிவிக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, 4,074 மெகா வாட் மின்சார உற்பத்தி 2013 ஆம் ஆண்டுக்குள் தொடங்கப்படும் என்று

சொல்லியிருக்கிறார். 2013 ஆம் ஆண்டு முடியும்போது இந்த 4,074 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி வந்திருக்கிறதா என்பதை அப்போது கேளுங்கள்; உரிய பதில் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள். இப்போது பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** தடையில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று சொன்னீர்களே, தடையில்லா மின்சாரம் எங்கேயிருக்கிறது? கிராமப்புறங்களில் மூன்று மணி நேரம்தான் மின்சாரம் இருக்கிறது. கிராமப்புறங்களில் விவசாயம் நின்றுபோய் இருக்கிறது. தொழில் வளம் நின்றுபோய் இருக்கிறது. அதுமட்டுமல்ல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல, தமிழகத்திலே மிக விரைவிலே தடையில்லா மின்சாரம் உறுதியாக வழங்கப்படும். அம்மா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு ஒன்றரை ஆண்டுக் காலம் அவகாசம் வேண்டும். அதைப்போல. மின்சாரத் திட்டங்களைச் செயல்படுத்தி, 2013 ஆம் ஆண்டு முடிந்ததற்குப் பின்பு தமிழகத்தில் தடையில்லா மின்சாரம் வழங்குவதோடு மட்டுமல்லாமல், நிச்சயமாக மின்சார உற்பத்தியில் மிகை மாநிலம் என்ற நிலையை அம்மாவினுடைய அரசு எட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதுவரையில் அம்மா அவர்கள் கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட 2013 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் தமிழகத்திலே இருக்கின்ற மின்பற்றாக்குறை பிரச்சினை அத்தனையும் படிப்படியாகச் சீரமைக்கப்பட்டு, இறுதியாக 2013 ஆம் ஆண்டிலே அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் வழங்கப்படும். அதைத்தான் சொல்லியிருக்கிறோம். சொன்னதைச் செய்துகொண்டே வருகிறார்கள், அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.



**திரு. ஜெ. அன்பழகன்:** 2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு தடையில்லா மின்சாரம் நிச்சயமாகக் கிடைக்கும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார், நன்றி.

பக்கம் 18-இல் "விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் இந்த அரசின் சிறப்புத் திட்டங்கள் கிராமப்புற ஏழை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன; சுமார் 1.12 இலட்சம் குடும்பங்கள் 2011–2012 ஆம் ஆண்டில் இந்தத் திட்டங்களால் பயன்பெறும்" என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியென்றால், ஐந்து ஆண்டுக் காலத்தில் கூட்டிப் பார்த்தால் ஆறு இலட்சம், ஏழு இலட்சம் பேருக்கு பசுக்கள், ஆடுகள் வழங்குவீர்கள் என்று தெரிகிறது. ஆனால் உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே கிராமப்புறத்தில் இருக்கிற, வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கிற மக்களுக்கெல்லாம் வழங்குவோமென்று சொன்னீர்களே, 7 இலட்சம் பேர்தான் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கிற கிராம மக்களா என்பதை இந்த அரசின்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இதைச் சொல்லி வாக்கு வாங்கிவிட்டு, கிராம மக்களை ஏமாற்றுகிறீர்களா? (குறுக்கீடுகள்) இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு. . . (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தம் இல்லாமல் பதில் சொல்லச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகர்ப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர் ஆடு, மாடு யார் வளர்க்கிறார்கள், யாரால் வளர்க்கமுடியும் என்று முதலில் தெரிந்துகொள்ளாமல், அவர் தேவையில்லாத சப்ஜெக்ட்டை எடுத்திருக்கிறார். புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் முழுமையாகத் தெரியும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்களினுடைய மனநிலையை முழுமையாக அறிந்தவர் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள், அவருடைய சர்க்கிளிலே இருக்கக்கூடிய மக்களைப் பற்றியே தெரிந்திருக்க முடியாத வாய்ப்பு இருக்கிறது.

[திரு. கே.பி. முனுசாமி] [2012 ஜனவரி 31

பிற்பகல் 12–30

ஒரு இலட்சம் ஏழையெளிய மக்களுக்கு இலவசமாக ஆடு, மாடு கொடுக்கப்படுகிறது. இது தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு வந்தால் யார் ஏமாற்றுபவர்கள் என்று தெரியவரும். அந்த ஐந்தாண்டுகளுக்குள் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களின் வாயிலாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்கள் வசதி படைத்தவர்களாக மாறுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் city–யில் இருக்கிறீர்கள். அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** நான் நிறைய சொல்வேன். பேசி முடித்த பிறகு சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதீர்கள், இன்னும் மூன்று நிமிடத்தில் உரையை முடியுங்கள். Subject-இல் பேசுங்கள், வேறு எதுவும் பேசாதீர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** Subject–இல் பேசுகிறேன், வேறு எதுவும் பேசவில்லை. விலைவாசி உயர்வு கடுமையாக இருக்கிறது. பஸ் கட்டணம் ஏறியிருக்கிறது. இரண்டு மடங்காக ஏற்றியிருக்கிறீர்கள். பால் விலை உயர்ந்திருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் டீசல் விலை 13 முறை ஏறியிருக்கிறது. ஆனால் பஸ் கட்டணத்தை நாங்கள் ஏற்றவில்லை. நீங்கள் உங்கள் ஆட்சியில், (குறுக்கீடு) ஒரு நிமிடம், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இதை complete பண்ணிவிடுகிறேன், பிறகு நீங்கள் சொல்லுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் பேருந்துக் கட்டணத்தை ஏற்றவில்லை என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பதிலாக 7,000 கோடி ரூபாய் வருவாய் இழப்பை ஏற்படுத்திவிட்டுச்



2012 ஜனவரி 31] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சென்றிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், 7,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தாமல், உங்கள் ஆட்சியில், நீங்கள் பஸ் கட்டணத்தைக் கூட்டாமல் அப்படியே maintain பண்ணியிருந்தீர்கள் என்றால் அது உங்களுடைய திறமை. அதையெல்லாம் சேர்த்து இப்பொழுது 7,000 கோடி ரூபாய் கூடுதல் நஷ்டத்தை அம்மாவினுடைய அரசின் தலையில் கட்டிவிட்டுப் போயிருக்கிறீர்கள். அதுதான் நீங்கள் செய்த தவறு. 7,000 கோடி ரூபாய் நஷ்டம் இல்லையா; ஏற்கெனவே உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுவிட்ட 7,000 கோடி ரூபாய் நஷ்டத்தை எப்படி ஈடு செய்வது? இந்தக் கட்டண உயர்வுக்கு மூலக் காரணமே கடந்த தி.மு.க. ஆட்சிதான் என்பதை இந்த நேரத்திலே அழுத்தம் திருத்தமாக சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன் உட்காருங்கள். அமைச்சர் பேசி முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிக் காலத்தில் இவர்கள் பேருந்துக் கட்டணத்தை ஏற்றவில்லை என்பதை மறுக்கவே முடியாது. எதிர்க்கட்சியிலிருந்த அத்தனை பேரும் மறைமுகமாக நீங்கள் பேருந்துக் கட்டணத்தை ஏற்றியிருக்கிறீர்கள் என்று பேசி இந்தச் சட்டமன்றத்தில் பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அத்தனை கட்சிக்காரர்களும் பேசினார்கள். L.S.S., Express, மிதவைப் பேருந்துகள் போன்று எக்கச்சக்கமாக பேருந்துக் கட்டணத்தை மறைமுகமாக ஏற்றியிருக்கிறீர்கள். உங்களைப் போல மறைமுகமாக வேலை செய்கின்றவர்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியாளர்கள் அல்ல என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கான்கிரீட் வீடுகள் கட்டுகிறோம் என்று சொல்லி ஏழு ஆண்டுக் காலத்திற்கு அட்டை கொடுத்து மக்களை ஏமாற்றிய ஆட்சி உங்கள் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவைப் பொறுத்தவரையிலும் தெளிவான, சிந்தனையோடு, எதைச் செய்கிறோம் என்பதைத் தெளிவாக மக்களுக்கு எடுத்துச் சொல்பவர் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உங்களைப் போல ஏமாற்றுகிற வேலை கிடையாது.

அட்டையை கையில் கொடுத்திருக்கிறீர்கள். அந்த அட்டையை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்யப் போகிறான்? கான்கிரீட் வீடு வந்துவிடுமா ஏழு வருடத்தில்? உங்களுக்கு ஆட்சிப் போகிற நேரத்தில் கொடுத்திருக்கிறீர்கள் ஏழு ஆண்டுகளுக்கு. ஐந்தாண்டுகளுக்கு ஒரு ஆட்சி என்று இருக்கிறபோது ஏழு ஆண்டுகளுக்கு அட்டை கொடுத்த கொடுங்கோல் ஆட்சி, உங்கள் ஆட்சியில் நடந்ததே தவிர, வேறு எந்த ஆட்சியிலும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தி.மு.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது பேருந்துக் கட்டண உயர்வினைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான அத்தனை இடங்களையும் வங்கிகளிலே அடைமானம் வைத்து, அந்த அடைமானம் மட்டுமல்லாது அத்தனை பேருந்துகளையும் அடைமானம் வைத்து 6,150 கோடி ரூபாயை போக்குவரத்துக் கழகங்களுக்கு இழப்பை ஏற்படுத்திய அரசு, கடந்த கால தி.மு.க. அரசு. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்று, போக்குவரத்துக் கழகங்களில் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் சீரழிக்கப்பட்ட, சின்னாபின்னமாக்கப்பட்ட, ஊதாரித்தனமாக செலவு செய்யப்பட்ட அத்தனை செலவினங்களையும் குறைக்க வேண்டும்; வருவாயைப் பெருக்க வேண்டும்; போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளர்களுக்கு மாதா மாதம் ஒன்றாம் தேதி சம்பளம் வழங்க வேண்டும் என்று சீரிய நடவடிக்கை எடுத்து மாதம் 60 கோடி ரூபாயைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கி, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கியவர் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; கடந்த கால தி.மு.க. ஆட்சியில் டீசல் பெற்ற வகையில் வழங்க வேண்டிய தொகை 46 கோடி ரூபாய். கூண்டு கட்டியதில் 35 கோடி ரூபாய் நிலுவைத் தொகை. விபத்துக்கான நஷ்ட ஈடு வழங்க வேண்டிய தொகை 259 கோடி ரூபாய். வருங்கால வைப்பு நிதிக்கு வழங்க வேண்டிய நிலுவைத்





தொகை 1,152 கோடி ரூபாய். ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத்திற்கான தொகைகள் வழங்கவேண்டிய நிலுவை 398 கோடி ரூபாய். பணிக் கொடை வழங்க வேண்டிய நிலுவை 262 கோடி ரூபாய். இவை உள்ளிட்ட இதர செலவினங்களில் வழங்க வேண்டிய தொகைகள் மட்டும் 2,369 கோடி ரூபாயை நிலுவையாகக் கடந்த கால தி.மு.க. அரசு வைத்திருந்தது.

பிற்பகல் 12–35

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த கால ஆட்சியில், அதாவது கருணாநிதி அரசுக் காலத்திலே ஊதாரித்தனத்தினால் நடந்த நிகழ்வுகளை இங்கே பேசுகின்றபொழுது சுட்டிக்காட்டினார்கள். சென்னையைப் பொறுத்தவரை கடந்த காலங்களிலே சாதாரணப் பேருந்து, எம். சர்வீஸ், எல்.எஸ்.எஸ்., எக்ஸ்பிரஸ், டீலக்ஸ், அல்ட்ரா டீலக்ஸ், செமி டீலக்ஸ் என்று கலர் கலராக வர்ணங்களைப் பூசி, பேருந்துக் கட்டணங்களை உயர்த்தி, சாதாரணப் பேருந்துகளை மிகக் குறைவாக இயக்கினார்கள். ஆனால், ஏழையெளிய மக்கள், அடித்தட்டு மக்கள் மீது அக்கறை கொண்ட, மாண்புமிகு அம்மா அவர்கள் அத்தனையையும் சீர்படுத்தி, சாதாரணப் பேருந்துகள், எக்ஸ்பிரஸ், டீலக்ஸ் ஆகிய 3 வகையான பேருந்துகளை மட்டும் சென்னையிலே இயக்குவதற்கு உத்தரவிட்டு, அதன்படி இன்று சீரிய முறையில் போக்குவரத்துக் கழகங்களைக் காப்பாற்றிய, போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளர்களைக் காப்பாற்றிய அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகின்றபொழுது ஆளுநர் உரையில் சுமார் 1.12 இலட்சம் குடும்பங்கள் 2011–2012 ஆம் ஆண்டில் இந்தத் திட்டங்களால் பயன்பெறும் என்று இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதாவது, பசுக்கள், கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தில் 1.12 இலட்சம் குடும்பங்கள்

2011–2012 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெற வேண்டியிருக்கிறது. நீங்கள் ஏழையெளிய மக்களுக்கெல்லாம் தருவதாகச் சொன்னீர்களே, ஏழையெளிய மக்கள், இவர்கள் மட்டும்தானா என்ற ஒரு வினாவை இங்கே அன்பழகன் அவர்கள் எழுப்பினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களால் கடந்த ஆண்டு தரப்பட்ட நிதிநிலை அறிக்கையில் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு, அடுத்த ஐந்து ஆண்டுகளில் 60,000 கறவை மாடுகள் இலவசமாக வழங்கப்படும் என்றுதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. 60,000 ஏழையெளிய மக்களுக்கு, அடுத்த 5 ஆண்டுகளில் 60,000 கறவைப் பசு மாடுகள்தான் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அதைப்போல இலவசமாக 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு தலா 12,000 ரூபாய் மதிப்புடைய ஆடுகளைப் பெற்று, இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவார்கள். அதாவது 2011–2012 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் குடும்பங்கள். கணக்கு சரியாக வருகிறதா உங்களுக்கு? 1.12 இலட்சம் பசு மாடுகளும், ஆடுகளும் கணக்கில் வந்திருக்கின்றன. கவர்னர் உரையிலே. 60,000 கறவைப் பசு மாடுகள், ஒரு இலட்சம் ஆடுகள்தான் ஒரு வருடத்திற்கு. சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் இதுபற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறோம். ஏழையெளியவர்களுக்கு வழங்கப்படுமென்றுதான் சொல்லியிருக்கிறோமேயொழிய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் சொன்னதுபோல இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** பஸ் கட்டணம், பால் விலை உயர்வினால் நடுத்தர குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ ஆயிரம் ரூபாய், 2 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவருடைய சப்ஜெக்ட் அது. அவர் பேசிவிடட்டும். (குறுக்கீடு) அமைச்சர்



பேசிய பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) உறுப்பினரைப் பேச வேண்டாமென்று சொல்லவில்லையே? (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர் பேசலாம்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** தேர்தல் அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் 60,000 மாடுகள் என்றுதான் சொன்னார்கள். எல்லோருக்கும் வழங்கப்படும் என்று சொல்லவில்லை. உங்களைப்போல எல்லோருக்கும் 2 ஏக்கர் நிலம் என்று சொல்லி ஏமாற்றவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** பேருந்துக் கட்டண உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவது, இந்தப் பேருந்துப் கட்டண உயர்வில், தனியார் பேருந்துக் கட்டணம், நம்முடைய அரசுப் பேருந்துக் கட்டணத்தைவிடக் குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், உட்காருங்கள். பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறார். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பேச விடவில்லையென்றால்தான் என்னைக் கேட்க வேண்டும். பேச விடுகிறேன் அல்லவா?

***மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** பால் விலை உயர்வைப் பற்றி உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) Silent please.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் எல்லாவற்றையும் பார்த்தோம். எல்லா இடங்களிலும் விலைவாசி உயர்வு. மக்களுக்கு எதிரான சக்திதான் தி.மு.க. ஆட்சி. அதாவது அவர்களின் சுய நலத்திற்காக, அவர்களின் குடும்பத்திற்காக ஆட்சி நடத்தினார்களே தவிர, மக்களுக்காக ஆட்சி நடத்தினார்களா என்றால் இல்லை. அதைச் சிந்திக்க வேண்டும்.

[திரு. வி. மூர்த்தி] [2012 ஜனவரி 31

*பிற்பகல் 12–40*

*கடந்த ஆட்சிக் காலத்தில் பால் உற்பத்தியாளர்கள் ஏன் பால் கொள்முதல் விலையை உயர்த்தவில்லை என்று பலமுறை போராட்டம் நடத்தினார்கள். அப்படி நடத்தும்போது பால் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று அந்த ஆட்சி கொஞ்சங்கூட கவனம் செலுத்தவில்லை. ஐந்து வருட காலமாக பால் விலையை உயர்த்தாமல், கொள்முதல் விலையை உயர்த்தாமல், தேர்தல் வருகிறது என்பதற்காக, மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக, தான் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக, சுயநலத்திற்காக, அதாவது 5–1–2011, 16–2–2011 தேதிகளில் பால் கொள்முதல் விலையை உயர்த்தினார்கள். அதாவது, கொள்முதல் விலை 18/– ரூபாய். ஆனால், விற்பனை விலை 17 ரூபாய் 75 காசுகள். அதாவது, கொள்முதல் விலையைவிட விற்பனை விலை குறைவு. 18/– ரூபாய்க்கு பாலை வாங்கி, கிராமத்திலிருந்து இணையத்திற்குக் கொண்டு வந்து, ஆட்களை வைத்து பாக்கெட் செய்து விற்கின்றோம். அவ்வாறு விற்பதனால் ஒரு பாக்கெட்டிற்கு அரசுக்கு ரூ.6.08 நஷ்டத்தில்தான் விற்று வந்தோம். அப்போது அந்த ஆட்சிக் காலத்தில் கொள்முதல் விலையை மட்டும் உயர்த்தியதால் திரும்பவும் நஷ்டம் ஏற்பட்டது. அந்த நிலையை இணையம் சந்தித்ததால் ஒரு மாதத்திற்கு 16.55 கோடி ரூபாய் இணையத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆவின் நிறுவனமும் நசுங்கிப் போய்விடும் நிலை ஏற்பட்டது.*

*மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் இணையத்தைப் பார்த்தார்கள். அந்த இணையத்தை நம்பி 40 இலட்சம் மக்கள் பால் வாங்கிக் குடிக்கிறார்கள். அதாவது, அந்தக் கிராமத்தில் இருக்கும் விவசாயிகளும் அந்தப் பாலைக் கொடுக்கிறார்கள். அந்தப் பாலைக் கொள்முதல் செய்கின்ற 24,000 தொழிலாளிகள் வாழ்கின்றார்கள். அதேபோல், அந்த இணையத்தில் 6,000 தொழிலாளிகள் வாழ்கின்றார்கள். கொள்முதல் விலையை உயர்த்திவிட்டு, விற்பனை விலையை உயர்த்தாமல் இருந்தால் ஆவின் நிருவாகம் நசுங்கிவிடும், இந்தத் தொழிலாளர்களெல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்பதால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் விற்பனை விலையைக் கூட்டினார்கள். பால் விலையை உயர்த்திவிட்டார்கள் என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. நீங்கள் இன்றைய தனியார் பால் நிலையங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். (குறுக்கீடுகள்)*



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்படி எல்லோரும் எழுந்து நிற்கக் கூடாது.* Please sit down. *(குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) அவரைப் பேச அனுமதிக்கப் போகிறேன் மாண்புமிகு அமைச்சர் பேசிய பிறகு உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடுகள்) ஒரு குற்றச்சாட்டு சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அவர் பதில் சொல்லாமல் எப்படி இருக்க முடியும்? நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபொழுது எழுந்து நின்று எது வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசிக்கொண்டிருப்பதை நீங்கள் அவையில் அனுமதிக்கின்றீர்களா என்பதை இந்த அவையின்மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் எச்சரிக்கின்றேன். உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்றார். குற்றச்சாட்டை மறுத்து பதில் கருத்து சொல்வதற்கு அமைச்சருக்கு உரிமை உண்டு. அந்த அடிப்படையில் துறைகள் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவர்களுடைய கருத்தைச் சொல்கின்றார்கள். அவர்கள் கருத்து சொன்ன பிறகு, உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நடுவில் நீங்கள் ஏன் எழுந்து நிற்கின்றீர்கள்? இதுபோன்று நடுவில் எழுந்து நின்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. ஜெ. அன்பழகன்:** *பால் விலை உயர்வையும், பஸ் கட்டண உயர்வையும்தான் சொன்னேன். அது நடைமுறையில் இருக்கிறது. நீங்கள் ஆயிரம் சொல்லிக்கொள்ளுங்கள். பரவாயில்லை. அடுத்து . . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. அன்பழகன், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.*

**திரு. ஜெ. அன்பழகன்:** *அடுத்து பக்கம் 8 இல் நிலங்கள் இந்த அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளால் மீட்டளிக்கப்பட்டு*

[திரு. ஜெ. அன்பழகன்] [2012 ஜனவரி 31

அதன்மூலம் அம்மக்கள் பயனடைந்துள்ளனர் என்று கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். எத்தனை வழக்குகள் போட்டு, எத்தனை நீதிமன்றங்கள்மூலமாக இதுவரையில் நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளன? (குறுக்கீடுகள்) புத்தகத்தில் இருக்கிறது. புத்தகத்தில் இருப்பதை நான் சொல்கிறேன். எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளன? (குறுக்கீடுகள்) அந்தப் பெயர்களை அறிவிக்க முடியுமா? எத்தனை மக்கள் பயனடைந்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அபகரிப்பைப் பொறுத்தவரையிலும் இந்த அரசு நேரடியாக உங்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் கொடுத்த புகார்கள் பற்றி உங்கள் ஆட்சியில் கேட்காமல், பதிவு செய்யாமல் இருந்தீர்கள். எத்தனை பேர் பயனடைந்திருந்தார்கள் என்று இனிமேல்தான் பட்டியல் கொடுப்பார்கள். கவர்னர் உரையில் limited ஆகத்தான் கொடுப்பார்கள். Title மட்டும்தான் இருக்கும். Power point மட்டும்தான் வரும். நீங்கள் நினைப்பதுபோல் எல்லா விவரங்களும் கொடுக்கமாட்டார்கள். எல்லா details–உம் கொடுத்தால் உங்கள் பெயரும் வரும்; அது வேண்டாம். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், உட்காருங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில அபகரிப்பு வழக்கிலே எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன; எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள்; அதனால் பாதிக்கப்பட்டவர்களுடைய நிலங்கள் எவ்வளவு மதிப்பில் மீட்கப்பட்டிருக்கின்றன என்று கேட்கிறார்கள். ஆயிரக்கணக்கான புகார்கள் கொடுக்கப்பட்டு, உண்மையான வழக்குகள் அதிலே பதிவு செய்யப்பட்டு, இதுவரையிலே



2012 ஜனவரி 31] [திரு. சி.வி. சண்முகம்]

கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாம், கறவைப் பசு மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு சின்ன விளக்கம். திரு. அன்பழகன், பொறுங்கள். பொறுமையாக இருங்கள். நீங்கள் எப்போதும் சும்மாவே எழுந்து நிற்கிறீர்கள். 5 ஆண்டுகளுக்கு கறவைப் பசு மாடுகள் 60 ஆயிரம், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் ஒரு குடும்பத்திற்கு 4 ஆடுகள் வீதம் 7 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தச் சிறப்பான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஆக, 7 இலட்சம் குடும்பங்கள், ஒரு குடும்பத்திற்கு 4 ஆடுகள் என்றால் 28 இலட்சம் ஆடுகள், 5 ஆண்டுகளில் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நில அபகரிப்பு பற்றி திரு. அன்பழகன் பேசினார். என்ன வழக்குகள், எத்தனை வழக்குகள் என்று கணக்கெல்லாம் கேட்டார். ஒரு சிறிய உதாரணம் மட்டும் சொல்கிறேன். ஒரு நீதிபதியினுடைய நிலம் மதுரையில் அவருடைய சொந்த நிலம், பட்டா நிலம் கடந்த ஆட்சியிலே அவருக்குத் தெரியாமலேயே இன்னொருவர் பெயரிலே பதிவு செய்துவிட்டார்கள். பதிவு நடந்துவிட்டது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். பத்திரப் பதிவு அலுவலகத்திலே, (குறுக்கீடுகள்) நான் பொதுவாகத்தான் சொல்கிறேன். ஓர் உதாரணமாகச் சொல்கிறேன். பத்திரப் பதிவு அலுவலகத்திலே நிலம் பதிவு செய்யப்பட்டு, பத்திரப் பதிவு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஜனவரி 31

அலுவலகத்திலே E.C.–யிலே இன்னொருவர் பெயரிலே அந்த நிலம் இருந்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே, மறுபடியும் அவர் இப்போது E.C. போட்டுப் பார்த்ததிலே, நிலத்திற்கு முதலிலே யார் உரிமையாளரோ அவருக்கே அந்த நிலம் திரும்ப வந்துவிட்டது அந்த E.C.–யிலே. பயந்துகொண்டு அவர்களாகவே அந்த நிலத்தை உரியவர்களுக்கே திரும்ப எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுதான் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கின்றது. இதுதான் ஒரு சிறிய உதாரணம். இதை திரு. அன்பழகன் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் *(குறுக்கீடுகள்)* நில அபகரிப்பு வழக்குகளிலே கைது செய்யப்பட்டவர்கள் அல்லது நிலம் அபகரித்தவர்களுடைய பெயரைச் சொல்ல முடியுமா என்று கேட்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இருங்கள். ஒன்றைச் சொல்ல முடியுமா என்று கேட்டார்கள். ஒன்றைச் சொல்கிறேன். உங்களுடைய ஆட்சியிலே அமைச்சராக இருந்த, என்.கே.கே.பி. ராஜா–வை *(குறுக்கீடுகள்)* நான் சொல்வதைக் கேளுங்கள். அன்றைக்கு உங்களுடைய ஆட்சியிலே *(குறுக்கீடுகள்)* உங்களுடைய ஆட்சியிலே, உங்களுடைய அமைச்சரவையிலே அமைச்சராக இருந்தவரை நில அபகரிப்புச் செய்ததாக நீங்களே அன்றைக்கு நீக்கினீர்கள். இப்போது அம்மாவினுடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு நில அபகரிப்பு வழக்கிலே கைது செய்யப்பட்டிருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்களும் நில அபகரிப்பு வழக்கிலே கைது செய்திருக்கிறீர்கள். நீங்கள் பெயரைச் சொல்லச் சொன்னீர்களல்லவா? திரு. ஜெ. அன்பழகன் என்பவரும் அதிலே ஒருவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* திரு. அன்பழகன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. அன்பழகன், வேறு ஒரு சந்தர்ப்பத்திலே பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள்.



2012 ஜனவரி 31]

***திரு. ஜே.சி.டி. பிரபாகர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது பேசும் வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கிற, வணக்கத்திற்குரிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் முதற்கண் புலப்படுத்திக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. அன்பழகன், உங்களுக்கு நிறைய வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. வேறு ஒரு சந்தர்ப்பத்திலே பேசிக்கொள்ளலாம். தயவுசெய்து உட்காருங்கள்.

*பிற்பகல் 12–50*

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்**: ஒன்றை நாம் மனதிலே வைக்க வேண்டும். இந்தப் பேரவையிலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் உட்பட, *(குறுக்கீடுகள்)* புரட்சித் தலைவர் பாடிய ஒரு பாடல்தான் இன்றைக்கு எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறபோது தவறு செய்தவர்கள் அதிகாரம் இருக்கிறது என்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்துவிடலாம் என்று தப்பிக்கப் பார்த்தவர்கள் இன்றைக்கு எந்த நிலைமையிலே இருக்கின்றார்கள் என்றால்,

"தோட்டம் காக்க போட்ட வேலி பயிரைத் தின்பதோ? *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைக் கேள்வி கேட்க ஆள் இல்லாமல் பார்த்து நிற்பதோ?
நான் ஒரு கை பார்க்கிறேன்; நேரம் வரும் கேட்கிறேன்;
பூனை அல்ல புலிதான் எனப் போகப் போக காட்டுகிறேன்;
போகப் போக காட்டுகிறேன்" *(குறுக்கீடுகள்)*

என்றுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தப் பாடல் வரிகளுக்கு இலக்கணமாக போகப் போக புலியாகப் பாய்ந்து கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் இன்றைக்கு பொய்யையும், புரட்டையும் உண்மைக்கு மாறுபட்ட செய்திகளையும் இங்கே கொண்டுவந்து, குப்பையாகக் கொட்ட நினைக்கிறார்கள் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் போன்றவர்கள். நான் ஒன்றை எண்ணிப் பார்க்கிறேன். நேற்று அவையிலே ஆளுநர் உரையாற்றுகிறபோது வெளிநடப்புச் செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய

[திரு. ஜே.சி.டி. பிரபாகர்] [2012 ஜனவரி 31

மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் வெளியே சென்று சொல்கிறார், தமிழ்நாட்டு மக்கள் அச்சத்திலே இருக்கின்றார்கள் என்று. அச்சத்திலே இருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தாரா? தமிழ்நாட்டு மக்களா? பயத்தில், பீதியில் இன்றைக்கு உறைந்துபோய் என்ன நடக்குமோ, எப்படி வந்து வழக்குகள் குவியுமோ, செய்த தவறுகளுக்கு எப்படி விடிவு காலம் பிறக்குமோ என்ற பயத்திலே, அச்சத்திலே உறைந்துபோய் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் மு.க. ஸ்டாலின், மக்கள் அச்சத்திலே இருக்கின்றார்கள் என்று வெளியிலே போய் பிதற்றி இருக்கிறார். என் அருமை மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கும் எரிச்சல் வருகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாள்தோறும் போடுகின்ற திட்டங்களிலே, வெளியிடும் அறிக்கையிலே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் கொடுத்து அவர் பேசியிருக்கிறார். இருப்பினும், அவைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில் அவருடைய செயல் அமைந்திருக்கின்றது. அடுத்த உறுப்பினர் பேசிக் கொண்டிருந்தபோது, 2, 3 முறை எழுந்து நின்றுகொண்டிருக்கின்றார். இதை இறுதி எச்சரிக்கையாக உங்களுக்கு நான் விடுக்கின்றேன். மறுபடியும் இந்தத் தவறை நீங்கள் செய்தால் உங்களை வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) மார்ஷல் அவரை வெளியேற்றுங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) எத்தனை முறை சொன்னேன், எழுந்து நிற்பது முறையல்ல என்று? (குறுக்கீடுகள்) நான் எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். அதற்குக் கட்டுப்படவில்லை என்றால் என்ன இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், நீங்கள் உரையைத் தொடருங்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இரண்டு நாட்களுக்கு முன்பாக



2012 ஜனவரி 31] [திரு. ஜே.சி.டி. பிரபாகர்]

அறிக்கையிலே சொல்கிறார்; பேட்டி கொடுக்கிறார்; கீழ்ப்பாக்கத்திலே ஓடுகிற ஒரு சாக்கடைப் பிரச்சினைக்குக்கூட முதல்வர் பெயரிலே அறிக்கை வருகிறது என்று சொல்கிறார். நான் கேட்கிறேன். கீழ்ப்பாக்கத்திலே இருக்கிற சாக்கடையிலே அடைப்பு என்றால்கூட எங்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னால் தீர்த்து வைப்பார் என்று சாமானிய மனிதர் எண்ணுகிற ஒரு அரசாட்சிதான் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆட்சியிலே இருந்தபோது, வீட்டிலே ஓடுகிற அந்தச் சாக்கடையை அடைக்க திராணி இல்லாத திராவிட முன்னேற்றக் கழகம், குடும்பத்திலே நிலவிய சாக்கடைகளைத் தீர்க்கத் தெரியாதிருந்த திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைப் பார்த்து, “ஆட்சியே சாக்கடையாக இருக்கிறது; நீங்கள் விழித்துக்கொள்ள வேண்டும்” என்று அதிகாரிகள் எல்லாம் எடுத்துச் சொன்னபோதும், மக்களெல்லாம் வெகுண்டெழுந்தபோதும் அந்தச் சாக்கடையை அகற்றத் துணியாத திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்த்து இந்தச் சொல்லைச் சொல்கிறார்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

தமிழ்நாட்டிலே எங்கோ மூலையிலே, வீடுகளிலே கண்களிலே ஈரத்தோடு இருக்கிற எந்தத் தமிழனும் தன்னுடைய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அதைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சொன்னால் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கிற பூமியாக, புண்ணிய பூமியாக இன்றைக்குத் தமிழ்நாட்டைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) துணிச்சல் அம்மாவோடு உடன் பிறந்தது. ஆற்றல், அறிவு, ஆளுமை அம்மாவோடு உடன் பிறந்திருக்கிறது.

பிற்பகல் 12–55

எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள்; வாழ்ந்தார்கள்; மறைந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவர் நமக்கு விட்டுபோய் இருக்கிற அச்சாக அவரின் மறு உருவாக, திருவாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்–உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், அவரின் மறு உருவாக இருக்கிற, தந்தை பெரியாரினுடைய வீரத்தை, பேரறிஞர் பெருந்தகை அண்ணா

அவர்களுடைய அறிவு ஆற்றலை, புரட்சித் தலைவர் அவர்களுடைய வள்ளல் தன்மையைக் கொண்டிருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதனால்தான் எத்தனை சோதனை வந்தாலும் தாங்கிக் கொள்கிறார்; தடைகளைத் தகர்த்தெறிகிறார்; சரிவுகளைச் சரிகட்டுகிறார்; குறைகளை நிறைவாக்குகிறார். எப்படி முடிகிறது, எதனால் முடிகிறது, என்று ஆராய்ந்து பார்ப்போமேயானால், தர்மம்; தர்மமே தலைகாத்து வருகிறது என்பதை நிச்சயமாக நம்மாலே உணர முடிகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

"தர்மம் தலைகாக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்
கூட இருந்தே குழி பறித்தாலும்,
கொடுத்தது காத்து நிற்கும்–செய்த
தர்மம் தலைகாக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்
கூட இருந்தே குழி பறித்தாலும்,
கொடுத்தது காத்து நிற்கும்
மலைபோலே வரும் சோதனை யாவும்
பனிபோல் நீங்கிவிடும்
மலைபோலே வரும் சோதனை யாவும்
பனிபோல் நீங்கிவிடும்–நம்மை
வாழவிடாதவர் வந்துநம் வாசலில்
வணங்கிட வைத்துவிடும்–நம்மை
வாழவிடாதவர் வந்துநம் வாசலில்
வணங்கிட வைத்துவிடும்
அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம்
ஆனந்தப் பூந்தோப்பு
அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம்
ஆனந்தப் பூந்தோப்பு–வாழ்வில்
நல்லவர் என்றும் கெடுவதில்லை–இது
நான்குமறை தீர்ப்பு"

என்று தர்மத்தின் வழியிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்





ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் வெல்வார், வீழ்த்துவார் இல்லாத மாபெரும் சக்தியாக இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உள்ளாட்சித் தேர்தலிலே என்ன நடந்தது என்பதை நாடு பார்த்தது. உள்ளாட்சித் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 39.02 விழுக்காடு வாக்குகளைப் பெற்று மகத்தான வெற்றியைப் பெற்றது. அப்படிப் பெற்றிருக்கிற வெற்றியில் 10 மாநகராட்சிகளை, ஏறத்தாழ 80 விழுக்காட்டுக்கு மேலே உள்ளாட்சித் தேர்தலிலே பெற்றிருக்கிற வெற்றி, முழுக்க, முழுக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளுக்குக் கிடைத்திருக்கிற வெற்றி என்பதை தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். She fought the election single–handedly. தன்னந்தனியாக களத்திலே நின்று யார் துணையும் இல்லாமல், தோழமை இல்லாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தாலே களத்திலே நிற்கிறபோது மிகப் பெரிய வெற்றியை, மகத்தான வெற்றியை இந்தியத் துணைக் கண்டம் பார்த்து வியந்துபோகிற வெற்றியைப் பெறமுடியும் என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

திருமங்கலம் formula, அழகிரி formula, என்று இடைத் தேர்தலையெல்லாம் முன்பு பார்த்தோம். ஆனால் இன்றைக்கு அமைதியின் formula ஆக ஜனநாயகத்து நெறிகளைக் காப்பாற்றுகிற formula ஆக புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருச்சி (மேற்கு) இடைத் தேர்தலிலே ஏறத்தாழ 14,658 வாக்குகள் வித்தியாசத்தில் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த அந்தக் காட்சியை இடைத் தேர்தல் நமக்குக் காட்டியது.

கல்கத்தா நகரத்து வீதிகளில் ஏறத்தாழ 50, 60 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்த ஒரு நிகழ்வினை நான் இங்கே சுட்டிக்காட்டி, ஒப்பிட்டுப் பேசுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அன்னை தெரசா, ஒல்லியான தேகத்தோடு, கல்கத்தா வீதிகளில் இருக்கிற கடைகளுக்கு முன்பாக நின்று, வீதியிலே படுத்திருப்போர், ஆதரவற்றோரை அள்ளியெடுத்து, தன்னுடைய விடுதிக்குக் கொண்டுசேர்க்கிற பணியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். கையிலே காசு இல்லை. மாசுமருவற்ற

[திரு. ஜே.சி.டி. பிரபாகர்] [2012 ஜனவரி 31

எண்ணத்தோடு அன்னை தெரசா, ஒரு கடை வாசலில் நின்று, கடைக்காரரைப் பார்த்து கேட்கிறார். 'நீங்கள் வீதியோரம் படுத்திருக்கிற, சாகக் கிடக்கிற அந்த மனிதனுக்கு ஏதாவது செய்யவேண்டும்' என்று கேட்கிறார். அந்தக் கடைக்காரன் பார்க்கிறான், முறைக்கிறான், 'வெளியே போ' என்று சொல்கிறான். அன்னை தெரசா மீண்டும் கேட்கிறார். 'சாகக் கிடக்கிற அந்த மனிதனுக்கு ஏதாவது நீங்கள் செய்யவேண்டும்' என்று கேட்கிறார். அந்தக் கடைக்காரன் காரி உமிழ்கிறான். எச்சில் அம்மா முகத்திலே வந்து விழுகிறது. அதைத் துடைத்துக்கொண்டே அன்னை தெரசா கேட்ட வார்த்தைகள், 'if this is for me, what about the man who is dying on the street' என்று கேட்டார். 'இது எனக்கென்றால், வீதி ஓரத்திலே விழுந்து கிடக்கிற, சாகக் கிடக்கிற அந்த மனிதனுக்கு நீங்கள் என்ன தரப்போகிறீர்கள்' என்று கேட்டார். அந்த மனிதன் திருந்தினான், வருந்தினான். பின்னாளிலே வாரிக் கொடுத்தான். இது வரலாறு. அன்னை தெரசா மீது காரி உமிழப்பட்ட அந்த எச்சிலைத் துடைத்துக்கொண்டு, நான் அந்த மனிதனுக்காக எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று கேட்ட அதே பண்பின் இலக்கணமாகத்தான் இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த அவையிலே 1989 ஆம் ஆண்டு தாக்கப்பட்டபோது, மேலே மாடத்திலே நின்று பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்கு அன்றைக்குக் கிடைத்தது. பதறிப் போனோம்; துடித்தோம்; அழுதோம்; அரற்றினோம்; அங்கலாய்த்தோம். புரட்சித் தலைவி அம்மாவுக்கு இந்த கதியா என்று நாங்களெல்லாம் பயந்து, அடுத்த கட்டமாக என்ன நடக்குமோ என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்திலே, அஞ்சாதே, கலங்க வேண்டாம் என்று எங்களைப் பாதுகாக்கிற கவசமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எத்தனையோ ஏளனங்களைத் தாங்கினார்கள். ஏகடியத்தைத் தாங்கினார்கள். அவமானங்களைச் சுமந்தார்கள். இனி அரசியலையே முடக்கிப் போடுவோம் என்று வீணர்கள் எழுந்து நின்ற நேரத்தில், இந்த இயக்கத்தைக் காப்பாற்றுவதற்காகப் புரட்சித் தலைவருக்குக் கொடுத்த அந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக, தன்மீது விழுந்த பழிகளையெல்லாம் சுமந்து கொண்டு, எப்படி அன்னை தெரசா முகத்திலே விழுந்த எச்சிலைத் தூக்கி எறிந்துவிட்டு, "if this is for me, what about the man who is dying on the street" என்று கேட்டார்களே அதுபோல, இவையெல்லாம் எனக்கே நான் ஏற்றுக்கொள்கிறேன்; ஆனால், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிற இந்தத் தமிழ்நாட்டு மக்களை விட்டு நான் விலக மாட்டேன்;



2012 ஜனவரி 31] [திரு. ஜே.சி.டி. பிரபாகர்]

அவர்களைக் காப்பாற்றியே தீருவேன்" என்று சூளுரைத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–00*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையினுடைய பல கூறுகளை நான் எடுத்துப் படிக்கிறபோது உள்ளத்துக்குள்ளே பீறிட்டுக் கிளம்புகிற சில உணர்வுகளை இந்த மாமன்றத்திலே பகிர்ந்துகொள்வதையே என்னுடைய கடமையாக நான் எண்ணுகின்றேன். தேர்தல் களத்திலே வெற்றியைப் பெற்ற பிறகு, முத்தான ஏழு திட்டங்களிலே கையெழுத்திட்ட பிறகு, நாள்தோறும் திட்டங்களை அறிவித்து, she has opened a new era, a golden era, ஒரு பொற்கால ஆட்சியை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாடும், ஏடும் புகழுகின்ற அளவுக்குத் திட்டங்களையெல்லாம் அறிவித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மைய, மாநில உறவுகள் எந்தப் பக்கம் போய்க்கொண்டிருக்கிறது என்கின்ற கவலை இந்த மாமன்ற உறுப்பினர்களிலே பல பேருக்கு இருக்கக்கூடும். எனக்குள்ளேயும் அந்த அச்சமும், கவலையும் இருக்கிறது. அந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அத்தனை பேரும் ஒருங்கிணைந்து நின்று, புரட்சித் தலைவி அம்மாவினுடைய கரத்தை வலுப்படுத்துகிற அந்தக் காலத்தை நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமாக, மாற்றான் தாய் மனப்போக்கோடு மைய சர்க்கார் நடக்கிறது என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா ஆளுகிறபோது, அவர் சட்டமன்றத்திலே ஆற்றிய அந்த உரைகளிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார். பல இடங்களில் நெருடலோடும், கவலையோடும் அந்தக் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். புரட்சித் தலைவர் ஆளுகிறபோதும் மைய, மாநில உறவுகளிலே சிக்கல் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக தன்னுடைய உரைகளிலே பலமுறை குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு, அது மாற்றான் தாய் மனப்போக்கு என்பதையும் தாண்டி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வெல்வார், வீழ்த்துவார் இல்லாத மாபெரும் சக்தியாக உருவாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து, ஒருவேளை மைய அரசு— மாற்றான் தாய் மனப்போக்கு என்று நான் சொல்லமாட்டேன்— இந்த அரசைப் பழி வாங்குகிற நடவடிக்கைகளில் இறங்கி

இருக்கிறதோ என்று நான் கவலைப்படுகிறேன். காரணம், மைய அரசினுடைய பொறுப்பிலே இருக்கிற சர்க்கார், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையிலே எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. கடலோரம் இருக்கிற மீனவர் பிரச்சினையில் மைய சர்க்கார் எப்படி வாளாவிருக்கிறது என்றும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

கடிதம் எழுதுகிறார்கள், மாண்புமிகு அம்மா அவர்கள்; கரிசனத்தோடு கேட்கிறார்கள்; கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்கள்; ஆனால், இதுகாறும் பதில் இல்லை. முல்லைப் பெரியாறு பிரச்சினை, இரு மாநிலங்களிலும் இருக்கக்கூடிய அந்தப் பிரச்சினையில் காட்ட வேண்டிய ஆர்வத்தை, தணிக்க வேண்டிய சூட்டை அதிகமாக்கி, பிரச்சினையை வளர்த்துவிட்டு, ஆக்கப்பூர்வமான திட்டங்களை நிறைவேற்றுகிற, பணிகளை நிறைவேற்றுகிற இந்த அரசுக்குக் குந்தகமாக மத்திய சர்க்கார் செயல்படுகிறதோ என்று நான் கவலைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல; ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், ரூபாய் ஒரு இலட்சம் கோடிக்குமேல் கடன் சுமை இருக்கிறது. ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்குமேல் இருக்கிற அந்தக் கடன் சுமையை வைத்துக்கொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், டெல்லிக்குச் சென்று நிதியுதவி கேட்டிருக்கிறார்கள். இதுவரை பதில் இல்லை.

பிற்பகல் 1–05

பக்கத்து மாநிலங்களோடு நமக்கு இருக்கக்கூடிய river water dispute–களில், அது கர்நாடகத்திலே இருந்து வருகிற காவிரிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, ஆந்திராவுடன் எதிர்கொண்டிருக்கின்ற அந்தப் பாலாற்றுப் பிரச்சினையாக இருந்தாலும், உணவுப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவில் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்படுகின்றபோது நம்முடைய கருத்துகளாக இருந்தாலும், மாமன்ற உறுப்பினர்கள் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எதிலும் முன்னிலை மாநிலமாக இந்த தமிழ்நாடு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீரிய திட்டங்களையெல்லாம் தீட்டி, 2025–இலே (Vision 2025)—இந்தத் தமிழ்நாடு எப்படி இருக்க வேண்டுமென்பதற்காக, முழுமைபெற்ற மனிதர்களாக தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடப் பிள்ளைகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக,



தமிழ்நாட்டிலே வாழ்பவர்கள் சொந்தக் காலிலே நிற்க வேண்டுமென்பதற்காக, 2025–இல் (Vision 2025)—என்று அவர் அளிக்க இருக்கிற அந்த அறிக்கையைத் தமிழ்நாடு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரைக்கும், தேசிய திட்டங்களை மைய சர்க்கார் நிறைவேற்றுகிறபோது மாநில சர்க்காரைச் சரியாக ஆலோசித்து, திட்டங்களை முனைப்போடு தீட்டுகிறபோது, மாநில அரசுகள் செயல்படுத்துகிற திட்டங்களிலே அவர்களுக்கு உரிய பங்கை, வழிகாட்டுதலை, நெறிமுறைகளை மைய சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிற நிலைமை வந்தால்தான் மைய, மாநில அரசு உறவுமுறை சீர்படும். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கக்கூடிய, இந்திய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குறியாக்கக்கூடிய வகையில், இந்திய இறையாண்மையைப் பார்க்கின்றவர்கள், படிக்கின்றவர்கள் சந்தேகப்படுகின்ற நிலைமைக்கு மைய சர்க்கார் தமிழ்நாட்டை ஆக்கிவிடக் கூடாது என்கின்ற கவலையை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

எதிலும் விரைவாக, யாரும் எதிர்பார்க்காத வேகத்தோடு செயல்படுகிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுனாமி வந்தபோது எப்படிச் செயல்பட்டார்களோ, அப்படிச் செயல்பட்டதை நாடும், வீடும் எப்படிப் பாராட்டியதோ, அதே வேகத்தைத்தான் இன்றைக்கு ‘தானே’ புயல் வந்தபோதும் காட்டினார்கள். நேரடியாகச் சென்றார்கள்; நிவாரணங்களை அறிவித்தார்கள்; periodical meetings போட்டார்கள்; அதை assessment செய்தார்கள்; அதை எப்படித் தீர்க்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள்; அவையெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு, கடலூருக்குப் பக்கத்திலே கூப்பிடும் தொலைவிலே இருக்கக்கூடிய பாண்டிச்சேரி என்னவானது? பாண்டிச்சேரியிலே இருக்கிற மக்கள் என்ன அங்கலாய்க்கிறார்கள்? தமிழ்நாட்டிற்கு நிவாரணம் வருகின்ற அளவுக்கு எங்களுக்கு இல்லை, எந்த உதவியும் கிடைக்கவில்லையென்று பாண்டிச்சேரியில் இருக்கிற மக்களெல்லாம் இன்றைக்கு முனகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடலூரில், அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மக்களெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரிலே சென்று பணிகளை முடுக்கிவிட்ட பிறகு, நிவாரணப் பணிகளிலே

[திரு. ஜே.சி.டி. பிரபாகர்] [2012 ஜனவரி 31

தங்களுக்குத் திருப்தி இருக்கிறதென்று சொல்லக்கூடிய அளவுக்கு அங்கே நிறைவாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய காட்சிகளை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

எனக்கு இருக்கிற கவலையெல்லாம் தமிழ்நாட்டிலே எல்லா திட்டங்களும் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் ஒரு சுபிட்சமான தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போட்டிருக்கிற அத்தனை திட்டங்களும் நிறைவான பயன்களைத் தரக்கூடிய நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது என்ன நடக்கிறதென்றால், பிற மாநிலங்களிலிருந்து மக்கள் தமிழ்நாட்டை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். முன்பு North–eastern zone–இலேயிருந்து வருவார்கள். இப்பொழுது ஆந்திராவிலேயிருந்து, கர்நாடகாவிலேயிருந்து, கேரளாவிலேயிருந்து, பிற மாநிலங்களிலேயிருந்து அமைதிப் பூங்காவாக இருக்கிற தமிழ்நாட்டை நோக்கி, அமைதிப் பூங்காவாக இருக்கிற தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய திட்டங்களைப் பார்த்து, தமிழ்நாட்டை நோக்கிக் குடியேறுவதை migration of people from all over India என்று நாம் சொல்ல வேண்டும். இதற்கெல்லாம் காரணம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது இருக்கிற நம்பிக்கைதான். கண் அசைவிலே கட்சியையும், ஆட்சியையும் காப்பாற்றுகின்ற திறமை இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்கள் மாநிலத்திலே முதலமைச்சராக இருந்திருந்தால் எப்படி இருக்கும் என்று வடபுலத்தாரும், தென்புலத்தாரும், எண்ணிப் பார்க்கிற நிலையோடு, எதிர்காலத்தில் அம்மா அவர்களே இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுகிற மாபெரும் பொறுப்பிலே உட்கார்ந்தால் எப்படியிருக்கும் என்றும் எண்ணிப் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதைத்தான் இங்கே வந்துபோன வடபுலத் தலைவர்களெல்லாம் பேசுகிற பேச்சுகளும், வடபுலத்திலே எழுதப்படுகிற பத்திரிகைகளும் உள்ளன. இந்தியத் துணைக் கண்டத்தினுடைய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அத்தியாயத்தை உங்கள் திருக்கரத்தாலே நீங்கள் எழுத இருக்கின்றீர்கள். இங்கே இருக்கிற செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே தங்கள் கரங்களாலே கொடியை ஏற்றிய நீங்கள், டெல்லி செங்கோட்டையைப் பிடிக்கிற நாள் அதிக தொலைவிலே இல்லை என்பதை நீங்கள் ஆற்றிவருகிற அந்தத் திட்டத்தின் பணிகளெல்லாம் இன்றைக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*



2012 ஜனவரி 31] [திரு. ஜே.சி.டி. பிரபாகர்]

அப்படி முனைப்போடு திட்டங்களைப் போடுகிற காரணத்தினாலேதான்—இரண்டு மணி நேரம் மட்டும் தூங்கி—மாண்புமிகு அண்ணன் செங்கோட்டையன் அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசுகின்றபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னவுடன், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனே குறுக்கிட்டு, ‘மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் ஓயாமல் உழைக்கிறேன் என்று சொன்னார்; நான் ஓர் உண்மையைச் சொல்கிறேன்; நான் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் மட்டும்தான் தூங்குகிறேன்; 22 மணி நேரமும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன்’ என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஓயாமல் உழைக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கே? எந்தப் பிரச்சினை வந்தாலும் வாய்மூடி மௌனமாக இருக்கிற மத்திய சர்க்கார் எங்கே? எந்தப் பிரச்சினை தமிழ்நாட்டைப் பாதிக்கிறது என்று சொன்னாலும், மைய சர்க்கார் இன்றைக்கு “செவிடன் காதிலே ஊதிய சங்காக” அந்தப் பிரச்சினைகளின் நிலை குறித்துக் கேளாமல், அந்தப் பிரச்சினையில் தலையிடாமல், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் குந்தகம் விளைவிக்கிறது. எல்லா பக்கமும் சூழ்ந்து நிற்கிற பிரச்சினைகளில், அது கடலோர பாக் ஜலசந்தி பிரச்சினையாக இருந்தாலும் சரி, கச்சத் தீவை மீட்கிற பிரச்சினையாக இருந்தாலும் சரி, பெரியாறு அணைப் பிரச்சினையாக இருந்தாலும் சரி—புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரியாறு அணைப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க வேண்டியதைத் தவிர வேறு compromise இல்லையென்பதைத் தெளிவாகச் சொன்னார்கள். ஆனால், பெரியாறு அணையைக் கட்டிய பென்னிகுயிக்குக்கு மணிமண்டபம் கட்டி அவர் நினைவைப் போற்றுவேன்; அது என்றைக்கும் அழிக்க முடியாத அணையாக இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்தி அறிவித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–10*

ஜாதி, மதம், இனம், மொழி இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு இருக்கின்ற ஒப்பற்ற தலைவராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காரணத்தால்தான், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்லுவேன், கிறிஸ்துமஸ் விழா என்று அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே நடத்த வேண்டும். அதை நானே முன்னின்று நடத்துகிறேன் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து நடத்தி, அந்த விழாவிலே இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலமும் செய்யாத சாதனையாக, மைய அரசு செய்யாத சாதனையாக, ஜெருசலேம் செல்வதற்கு நலிந்த கிறிஸ்தவப் பெருமக்கள் விரும்புவார்களானால், அவர்களுக்கு நான் நிச்சயமாக உதவித் தொகை வழங்குவேன் என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், கிறிஸ்துமஸ் நாளன்று ரூ.20,000 கிறிஸ்துமஸ் வெகுமதியாக 500 பேருக்கு ஜெருசலேம் செல்வதற்கு முதல்கட்டமாக நான் வழங்கிடுவேன், ஏற்றுக்கொள்ளுங்கள் என்று அன்போடு கொடுத்தார்கள். இஸ்லாமியர்களுக்குத் தருகிற சலுகைகள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஐந்து பேர் பேசவேண்டும், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இஸ்லாமிய பெருமக்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், தன்னை நம்பியிருக்கிற யாரும் தமிழ்நாட்டிலே நிச்சயமாக, சுபிட்சமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிற ஒப்பற்ற பெருந்தலைவராக புரட்சித் தலைவி அம்மா இருக்கிறார்கள். "If not now, never" இப்போது இல்லையென்றால், எப்போதும் இல்லை என்பதை உணர்த்துகிற விதத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. "There is one quality which one must possess to win and that is definiteness of purpose, the knowledge of what one wants and the burning desire to possess it." எதைச் செய்யவேண்டும் என்று விரும்புகிறோமோ, அதனைச் செய்வதில் தீர்க்கமான முடிவு இருக்கவேண்டும். அந்தக் குறிக்கோளை அடைவதற்கான ஆற்றல் வேண்டும். அதற்குரிய அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படி வளர்த்துக் கொள்ளும்போது உள்ளத்துக்குள்ளே பீறிட்டுக் கிளம்புகிற அந்த உணர்வு இருக்கிறதே, அந்த இலட்சியத்தை அடைய வைக்கும் என்பதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு உதாரணமாக இருக்கிறார்கள். மையப் பொறுப்பில் இருக்கிற மைய சர்க்கார் தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து இழைத்து வருகிற அந்த அநீதிகளைக் களைவதற்கு ஒரே ஒரு தீர்வுதான் இருக்கிறது. அந்தத் தீர்வு தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து மக்களும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பின்னாலே அணி வகுத்து,



'நாற்பதும் நமதே, நாடும் நமதே' என்று ஆர்ப்பரித்து வாக்களிப்பார்களேயானால், நிச்சயமாக இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு பொற்கால ஆட்சியை மைய அரசிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்துவார்கள். அதற்கெல்லாம் கட்டியங்கூறும் விதத்திலேதான் நம்முடைய ஆளுநர் உரை இங்கே அமைந்திருக்கிறது.

ஆளுநர் உரை என்பது ஒரு மணிதான். "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்ற பழமொழி இருக்கிறது. பின்னாலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வர இருக்கிற நிதிநிலை அறிக்கையில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவர இருக்கிற அந்த மானியக் கோரிக்கைகளில், நிச்சயமாக முழுமையான பயனை இந்தத் தமிழ்நாட்டு மக்கள் பெறுவார்கள் என்பதற்குக் கட்டியங்கூறும் விதத்திலே இந்த ஆளுநர் உரை இருக்கிறது என்பதை நான் சொல்லி, தமிழ்நாடு முதலிடம், உணவுப் பங்கீட்டுத் துறையில்; தமிழ்நாடு முதலிடம், மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வைத் தருவதில்; தமிழ்நாடு முதலிடம், மாநகரங்களை உருவாக்குவதில்; தமிழ்நாடு முதலிடம், பெண்களுக்கு முதலிடம் அளிப்பதில் எனத் தெரிவித்து, பெண்ணின் பெருமையைப் பற்றி 1982 ஆம் ஆண்டு கடலூரில் நடைபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் பேசிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்ணின் பெருமையைப் பற்றிப் பேசினார்கள்; பெண்ணின் பெருமையைப் பற்றிப் பேசிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு முறையும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறபோது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** பெண்கள், ஆதரவற்றோர், விதவைகள், ஏழைகள். இவர்களுக்குக் கரிசனமாக இருக்கக்கூடிய அந்தத் தாயாகப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அந்தப் பணிகள் மக்களுக்கு நிறைவைத் தருகிறது; ஆற்றலைத் தருகிறது; உற்சாகத்தைத் தருகிறது; 2025–இல் சொந்தக் காலிலே தமிழர்கள் நின்றார்கள்; வென்றார்கள் என்ற சரித்திரத்தை அடைகிற இலக்கைத்தான் இந்த ஆளுநர் உரை காட்டியிருக்கிறது என்பதையும் நான் சொல்லி, வாய்ப்பிற்கு வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினைமீது தமிழக அரசு கடைப்பிடித்த அணுகுமுறையையும், நடைமுறையையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நமது தமிழகத்தினுடைய நீர்ப்பாசன உரிமையைப் பாதுகாப்பதோடு, தக்க வைத்து, ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையிலே அந்த உரிமையைப் பெறுவதற்குரிய அணுகுமுறையாகவும், இரண்டு மாநில மக்களினுடைய ஒற்றுமை, இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பது, இவை குறித்த ஒரு அரசியல் பார்வையோடு நமது தமிழக அரசினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அணுகுமுறையாகவும் அது இருந்தது; அது சரியானது என்று நாங்கள் அதை வரவேற்கிறோம்.

பிற்பகல் 1–15

இரண்டாவதாக, மத்திய அரசு, தமிழகத்தினுடைய, மாநில அரசினுடைய உரிமைகளை எப்படி எல்லாம் தட்டிப் பறிக்கிறது என்பது, ஆளுநர் உரையின் 10 ஆவது பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்களும் நேற்றையதினம் உரையாற்றினார்கள். மத்திய அரசு, மாநில அரசுகளினுடைய உரிமையைப் பறிக்கக்கூடிய இந்த நடவடிக்கையை மாநிலத்தினுடைய ஆளுநர் மூலமாகவே பேச வைத்திருப்பதுதான் தமிழக அரசினுடைய ஒரு highlight ஆன விஷயம் என்று நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவதாக, புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைத் தனியாருக்குக் கொடுக்காமல், அரசு பொதுத் துறையைத் தேர்வு செய்ததை ஒரு நல்ல அம்சமாக நாங்கள் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு





கட்சி, சென்ற ஆட்சியிலேகூட அதை வலியுறுத்தி இருந்தது. இதுபோன்ற திட்டங்களை வரவேற்கக்கூடிய அதேநேரத்தில், ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு மக்களுக்கான திட்டங்களை வரவேற்பது மட்டுமே ஒருவழிக் கடமையாக இருக்க முடியாது; மக்களினுடைய பிரச்சினைகளை, கஷ்டங்களை, கவலைகளை தமிழக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதும் கடமை என்று நான் கருதுகின்றேன்.

அந்த வகையிலேதான், பட்டா குறித்த எந்த அறிவிப்பும் ஆளுநர் உரையிலே இல்லை. தமிழகத்தில் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் குடிசை வீடுகளில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். One time G.O.–ஐ சென்ற ஆட்சியிலே கொண்டு வந்து, அதை முழுமையாக அமல்படுத்தவில்லை. ஆகவே, இந்த One time G.O.–ஐப் புதுப்பிப்பதோடு, தலைநகரமான சென்னை உட்பட பல்வேறு நகரங்களில் இருக்கக்கூடிய அடித்தட்டு மக்கள், ஏழையெளிய மக்கள், 50 ஆண்டுகளுக்கு மேல் குடியிருக்கக்கூடிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு கொள்கை ரீதியான முடிவை, நடவடிக்கையை எடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உள்ளாட்சித் தேர்தலில், நமது தமிழக மக்களுடைய ஆழ்ந்த அரசியல் அறிவை வெளிப்படுத்தியதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின்மீதும், அவர்கள் தலைமையின்மீதும் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை நிலைநாட்டியதற்கு மக்களைப் பாராட்டுவதாக ஆளுநர் அவர்கள் தெரிவித்தார்கள். இது சரியான பாராட்டுதான். ஆனால், அவ்வளவு தூரம் பாசம் வைத்திருக்கக்கூடிய, அவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய மக்களுக்கு உள்ளாட்சித் தேர்தல் முடிந்தவுடனேயே, தமிழக அரசாங்கம் என்ன பரிசு கொடுத்தது? பஸ் கட்டண உயர்வு; பால் விலை உயர்வு; அடுத்த மாதத்தில் வரக்கூடிய மின்சாரக் கட்டண உயர்வு; நீங்கள் அடிக்கடி சொல்லக்கூடிய, 'மாற்றம் தந்த மக்களுக்கு, ஏற்றம் தரக்கூடிய அரசு' என்ற வார்த்தையை மிகவும் ரசித்தது நான்தான். அந்த ஏற்றம் என்பது விலையேற்றமாக அமைந்துவிட்டது என்பதை கவலையோடு உங்களிடத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பஸ் கட்டண உயர்வை சாதாரணமானதாக நான் பார்க்கவில்லை.

[செல்வி கே. பாலபாரதி] [2012 ஜனவரி 31

கிலோ மீட்டருக்கு 22 பைசாவிலிருந்து 42 பைசாவாக, விரைவுப் பேருந்துக்கு 32 பைசாவிலிருந்து 56 பைசாவாக, சூப்பர் டீலக்ஸுக்கு 38 பைசாவிலிருந்து 60 பைசாவாக, அப்படியென்று சொன்னால், நகரப் பேருந்துக் கட்டணம் குறைந்தபட்சம் இரண்டு ரூபாயிலிருந்து 14 ரூபாய் வரைக்கும் உயர்ந்திருக்கிறது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒருசில நிமிடங்களுக்கு முன்னால் சொன்னார்கள், தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்களினுடைய பொதுச் சொத்துக்கள் அடைமானம் போய்விட்டன என்று. என்னுடைய கவலை எல்லாம் இப்பொழுது பஸ் ஏறக்கூடிய பயணி எதையாவது அடைமானம் வைத்தால்தான் பஸ் ஏற முடியும் என்ற நிலைமைக்கு நீங்கள் கொண்டுவந்து விட்டீர்களே என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, பேருந்துக் கட்டணத்தினுடைய உயர்வைப்பற்றிச் சொன்னார்கள். 18 ரூபாய் 26 பைசாவாக டீசல் கட்டணம் இருந்தபொழுது, பேருந்துக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. இப்பொழுது டீசலினுடைய விலை என்பது ரூ.43 என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. டீசலுடைய உயர்வைப் பார்க்கின்றபொழுது 137 விழுக்காடு அளவிற்கு டீசலுடைய விலை உயர்ந்திருக்கிறது. நிருவாகச் செலவினங்களைப் பார்க்கின்றபோது, 180 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. 2001 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 1,267 கோடி ரூபாயாக இருந்த நிருவாகச் செலவினம், 2011–2012 ஆம் ஆண்டில் 3,555 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. உருளைப்பட்டை போன்ற உதிரிப் பாகங்களை வாங்குவதற்கு, 2001–2002 ஆம் ஆண்டில் ஆன செலவு 4,400 கோடி ரூபாய். இன்றைக்கு அதற்கான செலவினம் என்பது 11,029 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 150 சதவிகிதம் அளவிற்கு இவற்றினுடைய விலைகள் உயர்ந்திருக்கின்றன.

பிற்பகல் 1–20

இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப்



2012 ஜனவரி 31] [திரு. வி. செந்தில்பாலாஜி]

பார்க்கின்றபோது, குறிப்பாக, அருகில் இருக்கின்ற ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, குறைந்த கட்டணத்தை இப்பொழுதும் நடைமுறைப்படுத்தியிருக்கின்ற அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், தமிழகத்தில் ஓடும் பேருந்துகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற சாதாரண கட்டணம் என்பது 42 பைசாவாகும். ஆனால், கேரளாவைப் பார்க்கின்றபோது, குறிப்பாக, நீங்கள் அங்கே ஆளுங்கட்சியாக இருந்தபோதுகூட, 2008 ஆம் ஆண்டு சாதாரண கட்டணம் என்பது 55 பைசாவாக இருந்தது. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில், ஒரு கிலோ மீட்டருக்கு 55 பைசா என்ற வீதத்தில் பேருந்துகள் இயக்கப்பட்டன. கேரளாவில் ஒரு கிலோ மீட்டருக்கு 55 பைசா என்ற அளவில் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டபோது, டீசல் விலை 36 ரூபாய் 50 பைசா என்று இருந்தது. ஆனால், இன்றைக்கு டீசல் விலை ஒரு லிட்டருக்கு 43 ரூபாய் 40 பைசா என்ற அளவிற்கு உயர்ந்திருந்தாலும்கூட, சாதாரண, ஏழையெளிய மக்கள், அடித்தட்டு மக்கள் பயன்பெற வேண்டும்; அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது; நலிவடைந்த போக்குவரத்துக் கழகங்களையும் காப்பாற்ற வேண்டும்; அந்தப் போக்குவரத்துக் கழகங்களுடைய தொழிலாளர்களையும் காப்பாற்ற வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், தி.மு.க. ஆட்சியிலே பேருந்துக் கட்டண நிர்ணயத்தைப்பற்றி பல்வேறு முறை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; நன்கு உணர்ந்தவர்கள். கடந்த கால தி.மு.க. ஆட்சியில், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், இயக்கப்பட்ட 3,200 பேருந்துகளில், வெறும் 698 பேருந்துகள் மட்டுமே சாதாரண பேருந்துகளாக இயக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், தமிழகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் இயக்கப்படுகின்ற 19 ஆயிரம் பேருந்துகளில், 9,389 பேருந்துகள் சாதாரண கட்டணப் பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2012 ஜனவரி 31

49 சதவிகிதம் அளவிலான பேருந்துகளைச் சாதாரண பேருந்துகளாக, மக்கள் பயன்பெறும் வகையில் இயக்குகின்ற அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், அந்த விளக்கம் பொருத்தமற்றது. பஸ் கட்டண உயர்வு என்பது கடுமையானது; தமிழக மக்களைப் பாதிக்கிறது என்பதை மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, பால் விலை என்பதும், யானை விலையாக உயர்ந்திருக்கிறது. பால் என்பது, ஏழையெளிய மக்கள், சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒன்று. அந்தத் துறை நஷ்டமடைந்திருக்கிறது; மரணப் படுக்கையில் இருக்கிறது என்று சொன்னாலும், அதைவிட மரணப் படுக்கையில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களின் தலையிலே இந்த விலை உயர்வை வைப்பது என்பது, எந்த வகையிலும் நியாயமே இல்லை என்பதனை மாண்புமிகு நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோன்று, மின் வெட்டு என்பது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆறு மணி நேரம் மின் வெட்டு இருக்கிறது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் திண்டுக்கல்லிலேதான் இருக்கிறார். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் விலையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, பால் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்று மட்டும் சொன்னார்கள். அதாவது, பாலை உற்பத்திச் செய்யக்கூடியவர்கள், உற்பத்தி செய்கின்ற அந்தப் பாலை வாங்குகின்ற தொழிலாளிகள், அந்த இணையத்திலே



2012 ஜனவரி 31] [திரு. வி. மூர்த்தி]

பணி செய்கின்ற தொழிலாளிகள், அத்துணைப் பேரும் நலிந்தவர்கள்தான்; வறுமைக் கோட்டிற்குக் கீழேயிருப்பவர்கள்தான். அவர்கள் அந்தத் தொழிலை நம்பி வாழ்கின்றார்கள். அப்படியிருக்கின்ற சூழ்நிலையிலே, கடந்த ஆட்சிக் காலத்தில், அவர்களுடைய தவறான கொள்கையின் காரணமாக, விற்பனை விலையை உயர்த்தாமல், கொள்முதல் விலையை மட்டும் உயர்த்தினார்கள். ஆதலால், ஆவின் நிறுவனம் நஷ்டத்திலே இயங்கியது என்று இங்கு ஏற்கெனவே கூறினோம்.

அதனடிப்படையிலேதான், அங்கே இருக்கின்ற விவசாயிகளும், அந்த இணையத்திலே பணிபுரிகின்ற தொழிலாளர்களும், அந்த இணையமும் அழிந்து விடக்கூடாது என்பதற்காகவும் பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், இன்றைக்குத் தமிழகத்திலே பார்த்தோமானால், போட்டிப் போட்டுக் கொண்டு, தனியார் பால் பண்ணைகள் தொடங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் உற்பத்திச் செய்யப்படுகிற பாலின் தரமும் சரியாக இல்லை. கடந்த ஆட்சியினுடைய தவறான கொள்கையின் காரணமாக, அந்த இணையம் அழிவதோடு, பால் கொள்முதல் செய்கின்ற தொழிலாளர்கள் அழிவதோடு, மக்களுக்கும் தரமான பால் கிடைக்காத நிலை இருந்தது. ஆதலால்தான், கொள்முதல் செய்கின்ற பால் விலையையும் உயர்த்தி, விற்பனை விலையையும் உயர்த்தினார்கள் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–25

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு அரசாங்கத்தினால் விற்கப்படுகின்ற பால் ஒரு லிட்டர் 24 ரூபாய் என்றால், மற்ற தனியார் பால் விற்பனை விலை என்பது, ஆரோக்கியா பால் 30 ரூபாய்க்கும், ஹெரிடேஜ் பால் 28 ரூபாய்க்கும், திருமலா பால் 28 ரூபாய்க்கும், டோட்லா பால் 28 ரூபாய்க்கும், ஜெர்சி பால் 28 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. அனைத்துத் தனியார் பால்களும் அதிக விலைக்குத்தான் விற்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்ல; ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும்கூட, நாம் 24 ரூபாய்க்கு விற்கக்கூடிய ஒரு லிட்டர் பால், அங்கு 27 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கேரள மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும்கூட, நாம் 24 ரூபாய்க்கு விற்கின்ற ஒரு லிட்டர் பால், அங்கு 28 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

[திரு. வி. மூர்த்தி] [2012 ஜனவரி 31

*நாம் 24 ரூபாய்க்கு ஒரு லிட்டர் பாலை விற்றாலும்கூட, அரசாங்கத்திற்கு அது ஒரு ரூபாய்க்கு மேல் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. அப்படி நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, மக்களுக்கு நல்ல பால் வழங்க வேண்டும்; அதிலே ஈடுபடுகின்ற தொழிலாளிகள் வாழ வேண்டும்; அதை உற்பத்திச் செய்கின்ற விவசாயிகள் வாழவேண்டும் என்பதற்காகத்தான் பால் விலை உயர்த்தப்பட்டதே தவிர, மக்கள் நலன் இதில் அடங்கியிருக்கின்றதே தவிர, சுயநலத்திற்காகவும், சுய இலாபத்திற்காகவும், இந்த அரசு பால் விலையை உயர்த்தவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுக்காக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நலன் பேணிக் காக்கின்ற ஒரு அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *விளக்கமும் உயர்ந்ததாகவே இருக்கிறது; என்ன செய்ய முடியும்? மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக தமிழக மீனவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இலங்கைக் கடற்படையினர் மீண்டும் மீண்டும் நமது தமிழக மீனவர்களுடைய உயிர்களையும், உடைமைகளையும் பறிக்கக்கூடிய கொடூரமான செயலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு இதில் மனித நேயத்தோடுகூடிய தலையீட்டைக்கூட செய்யவில்லை. ஆகவே, மத்திய அரசை நாம் கடுமையாக வலியுறுத்துவோம். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நீங்கள் பிறகு பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) பிறகு பேசும்போது பேசலாம்.*

**செல்வி கே. பாலபாரதி:** *தமிழக மீனவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக, மீன்பிடி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். சமீபத்தில், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் குறிப்பிட்ட ஆலோசனைகளைக்கூட அரசு பரிசீலிக்க முன்வரலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.*



2012 ஜனவரி 31] [செல்வி கே. பாலபாரதி]

*அரசுப் பயிற்சி செவிலியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சின்னஞ்சிறிய குழந்தைகள். குழந்தைகள் என்றால், படிக்கக்கூடிய குழந்தைகள்; 2,700 பேர். அவர்களுடைய போராட்டத்தை இவ்வளவு கடுமையாக* treat *செய்ய வேண்டியதில்லை. ஏனென்று சொன்னால், தனியார்ப் பயிற்சி நிலையங்களில் நர்சிங் படித்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமா என்றால், கொடுக்க வேண்டும். நாங்களும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறோம். ஆனால், அதேசமயத்தில், இந்தத் தனியார் நர்சிங் என்பதை, அரசு கவுன்சிலிங்கின்கீழ் கொண்டுவர வேண்டும். இப்போது பொறியியல், மருத்துவப் படிப்புகளில், அரசினுடைய கவுன்சிலிங் முறையிலிருந்துதான், தனியாருக்கு இரண்டாம் நிலை* mark*–இலிருந்துதான் போகிறார்கள். அதுபோன்று கொண்டு வருவதற்கு, பொதுவான நியதிகளை உருவாக்குவதற்கு முன்னதாகவே, அரசுப் பயிற்சி செவிலியர்களையும், தனியார்ப் பயிற்சி நிறுவனத்தில் படித்து முடித்தவர்களையும், ஒன்றாகப் பார்ப்பது என்பது பொருத்தமானது அல்ல. இந்தப் பிரச்சினையில் அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, 2,700 பேர்களுக்கான பணி நியமனத்தோடு, தனியார்ப் பயிற்சி நிறுவனத்தில் முடித்தவர்களுக்கும் பணி வழங்குவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசித்து, அதை . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனையைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனாலும், காலத்தின் அருமை கருதி, சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். 1990 ஆம் ஆண்டு வரையிலே, மகளிர் செவிலியர்களைப் பொறுத்தவரையிலே, அரசுப் பள்ளிகளிலேதான் படித்தார்கள். அதனால் அரசுப் பள்ளிகளிலே சேர்ந்த எல்லோருக்குமே, அரசுப் பணி கிடைத்தது. அதற்குப் பிறகு, டாக்டர் ஏ.எல். முதலியார் கமிட்டியின் பரிந்துரையின்படி, 10 படுக்கைகள் வசதிக்கு, ஒரு செவிலியர் இருக்க வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் இன்றைக்கு 100 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர்தான் இருக்கிறார்கள். ஆக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், 1994–இலே தமிழ்நாடு முழுவதும் 20, 25 தனியார் செவிலியர்*

[டாக்டர் வி.எஸ். விஜய்] [2012 ஜனவரி 31

பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவர்கள் அந்தப் பள்ளிகளில் கற்றுத் தேர்ந்த பிறகு, பிற மாநிலத்திற்கோ அல்லது வெளிநாட்டிற்கோ சென்று பணியாற்றினார்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருந்தது.

பிற்பகல் 1–30

ஆனால், கடந்த ஆட்சியிலே, 2006–இலேயிருந்து 2007–க்குள், கிட்டத்தட்ட 120 பள்ளிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டன. எதற்காக அந்தத் தனியார் செவிலியர் பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்தார்கள் என்பது அந்த ஆட்சியாளர்களுக்கும், அந்த ஆண்டவனுக்கும்தான் தெரியும். கிட்டத்தட்ட இன்றைக்கு 20,000 தனியார் செவிலியர்கள் படித்து முடித்திருக்கின்றார்கள். மருத்துவர்களும், பொறியாளர்களும் தனியார் நிறுவனங்களில் படித்திருந்தாலும்கூட, அரசுத் துறையில் அவர்களுக்கு வேலை கொடுப்பதுபோன்று Fundamental Rule பிரகாரம், தங்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றத்தை அணுகி, அவர்கள் அதில் வெற்றி பெற்றுவிட்டார்கள். அதன் பிறகு அரசு செவிலியர்கள் அதற்கு stay வாங்கினார்கள். அதன்பின், அந்த stay–யை உச்ச நீதிமன்றத்தில் இவர்கள் vacate செய்து விட்டார்கள். எனவே, அரசு அந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பினை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது. அதே தருணத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நலத் துறையை ஆய்வு செய்து—இதில் என்ன பிரச்சினை என்றால், கடந்த ஆட்சியில் இருந்தவர்கள்தான் உயர் நீதிமன்றத்தில் தனியார் நிறுவனத்தில் படித்த செவிலியர்களுக்கும் நாங்கள் வேலை கொடுக்கிறோம் என்று ஒத்துக்கொண்டு வந்தார்கள்; ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதனை நன்கு ஆய்வு செய்து—எல்லோருக்கும் சமமாக வேலை கொடுக்க வேண்டும் என்ற முறையில்தான், இந்த ஆணையை வழங்கினார்கள். அதுமட்டுமல்ல; எல்லோரும் ஒரே நிலையில் ஒரே பரீட்சை எழுத வேண்டும், Medical Recruitment Board மூலமாக ஒரே பரீட்சை எழுதி, யாருக்குத் தகுதி இருக்கிறதோ அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதில் அரசுக்கு எந்தவிதமான தனி நோக்கமும் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல் இவர்கள் என்ன செய்தார்கள் என்றால், பொது மக்களுக்கு இடையூறு அளிக்கின்ற வகையிலே ரோடு ரேக்கோ போன்றவற்றைச் செய்தார்கள். ஆகவேதான், அவர்களைக் காவல் துறையினர் சிறிது கடுமையாக நடத்தினார்களே தவிர, வேறு எந்தவிதமான தனிப்பட்ட நோக்கமும் அரசுக்கு இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2012 ஜனவரி 31] [டாக்டர் வி.எஸ். விஜய்]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கும் விளக்கத்திற்கு நன்றி. அவர்கள் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை அமல்படுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். போராடக்கூடிய இரண்டு தரப்புகளையும் அழைத்து, பேச்சு வார்த்தை நடத்தி, ஜனநாயக ரீதியாக இன்னும் ஒரு நல்ல முடிவை எடுத்து, நீங்கள் அவர்களைத் தேர்வு செய்வதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே நீதிமன்றத் தீர்ப்பை மக்கள் நலப் பணியாளர்களுக்கும் நீங்கள் பொருத்த வேண்டும். இரண்டு நீதிமன்றங்களும் தீர்ப்பு கொடுத்திருக்கின்றன. சாதாரண ஊழியர்கள் பிரச்சினையில் இவ்வளவு தூரம் போய் இருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஆகவே, அந்தப் பிரச்சினையையும் நீங்கள் தீர்த்து வைத்து, ஒரு சுமுக நிலைக்கு வந்து, அவர்களுக்குப் பணி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று வேலைவாய்ப்பு சம்பந்தமாக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்கள் என்பது அரசியல் ரீதியாக கொண்டு வரப்பட்ட பிரச்சினையாகும். அவர்கள் வேறுவிதமாக தங்களுடைய கட்சிக்காரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக முந்தைய அரசு கொண்டு வந்தது. 2001 இல் ஏற்கெனவே அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தவுடன், அவர்களை மீண்டும் நியமித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை

நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக பல்வேறு அறிவிப்புகள் வருகின்றன. நல்ல விஷயம். ஆனால், அதே சமயத்தில் கடந்த காலத்தில் இருந்தபடி, வேலைவாய்ப்பு அலுவலகத்தினுடைய பதிவு மூப்பின் அடிப்படையில் வேலை தரும் முறையை நீங்கள் அமல்படுத்துவதுதான் பொருத்தமாக இருக்கும். ஆகவே, இப்போது ஒரு மணி நேரத்திற்கு வேலை செய்யக்கூடியவர்களுக்கு ஒரு ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் என்ற பெயரில் தேர்வும் எழுத வேண்டும் என்றெல்லாம் வைத்திருக்கக்கூடிய நிபந்தனைகள் என்பது கடுமையானதாகத் தெரிகிறது. வறுமை, வேலையின்மை, இவை இரண்டும் எவ்வளவு பெரிய சிக்கல் என்பது ஆளுநர் உரையில் மிக அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் 63 இலட்சம் இளைஞர்கள் படித்துவிட்டு, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து இருக்கிறார்கள். ஆனால், அதே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 388 இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே உள்ள 1,108 பணியிடங்களில், 388 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட காலியிடங்களும் அரசாங்கத்தில் இருக்கின்றன. ஆகவே, இந்த ஆசிரியர் பணியிடங்களை தொகுப்பு ஊதியம், மதிப்பூதியம், ஒரு மணி நேர ஊதியம் என்று உலக வங்கியினுடைய நிபந்தனையை அமல்படுத்த வேண்டுமென்ற மத்திய அரசின் சுற்றறிக்கையின் அடிப்படையிலே கொண்டு செல்வது என்பதை மாற்றுவதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். எந்தக் காலத்திலும், பதிவு மூப்பின் அடிப்படையில்தான் அவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் கல்வித் துறை சுமுகமான நிலைமையில் செல்வதற்கு, ஆரோக்கியமானதாக செல்வதற்கு உதவி செய்யும்.

தமிழகத்தில் தீண்டாமையை கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்கிறது. இல்லை என்று நான் சொல்லவில்லை.





ஆனால், அதேசமயத்தில் தீண்டாமையைக் கொள்கை ரீதியாகவும் அணுக வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. புதுக்கோட்டை மாவட்டம், கருவடா தெரு, பெண் ஊராட்சித் தலைவர். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி பேசுகின்றபோது ஆசிரியர் நியமனம் பற்றி கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால், கல்வித் துறையில் தொலைநோக்குப் பார்வையோடு பல திட்டங்களையெல்லாம் அறிவித்து, அதிகமான ஆசிரியர்களை நியமனம் செய்து, தரமான கல்வியை மாணவ, மாணவிகளுக்கு வழங்க வேண்டுமென்று பல திட்டங்களையெல்லாம் தொடர்ந்து அறிவித்து, தினந்தோறும் ஆசிரியர் பணி நியமனங்களையெல்லாம் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப முறையான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பகுதி நேர ஆசிரியர் நியமனம் பற்றிச் சொன்னார்கள். பகுதி நேர ஆசிரியர் நியமனம் பற்றிச் சொல்கின்றபோது, அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி தலைமையில் 6 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்கள் முறையான நேர்காணல் நடத்தி, அவர்களுக்குத் தகுதி அடிப்படையில் விரைவிலேயே பணி நியமனம் வழங்க இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருப்பவர்களையும் இப்போது பரீட்சை எழுதச் சொல்கிறார்கள் என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியல்ல; இந்தப் பகுதி நேர ஆசிரியர் நியமனத்தைக் குறிப்பிடுகிறபோது, 6 பேர் கொண்ட கமிட்டி தகுதியான ஆசிரியர்களை நேர்காணலுக்கு அழைத்து, அவர்களின் தகுதியின் அடிப்படையிலும், அதேபோன்று வேலைவாய்ப்பு மூப்பு முன்னுரிமையின் அடிப்படையிலும், கல்வித் தகுதி மற்றும் அவர்களுடைய experience அடிப்படையிலும்,

marks–மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, இப்போது அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவிலேயே தகுதியான ஆசிரியர்களுக்கு இந்தப் பகுதி நேர ஆசிரியர் நியமன உத்தரவு வழங்க இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தங்கள்வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த காலக்கட்டத்தில் இதுவரை தமிழ்நாட்டில் 25 ஆண்டுகளாக சுமார் 1,03,351 ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, 25 ஆண்டுகளில் 1,03,351 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு மட்டும் தமிழகத்தில் அனைவரும் கல்வி கற்கின்ற நிலைமையை ஏற்படுத்த, இந்தியாவிலே தமிழ்நாடுதான் முதன்மை மாநிலமாக வரவேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஓராண்டில் மட்டும் 56,453 ஆசிரியர்களை நியமிக்க உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தங்களின்வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவி குடியரசு தினத்தில் தேசியக் கொடியை ஏற்ற முடியவில்லை; தடை செய்யப்பட்டிருக்கிறார். இது மிகவும் வருத்தத்திற்குரிய, வேதனைக்குரிய ஒரு சம்பவம். அதேபோன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், பசுவப்பட்டி பஞ்சாயத்துத் தலைவி வள்ளி தெய்வானை, நாற்காலியில் உட்காருவதற்கே முடியவில்லை என்ற செய்தியும் இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுகுறித்த நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் அரசின்மீது அபாண்டமான ஓர் குற்றச்சாட்டைச் சுமத்துகின்றபோது, அதற்கு விளக்கம் கொடுப்பது அரசினுடைய கடமை. ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஓர் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அங்கு கொடுமை





நடந்திருக்கிறது என்று சட்டமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரை நிகழ்த்துகிறார். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை அல்லவா? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள். (குறுக்கீடு) நானே சொல்கிறேன். ஈரோட்டிலே, சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில், பசுவப்பட்டி பஞ்சாயத்திலே உள்ள வள்ளி தெய்வானை என்ற தலைவர் அங்கே chair–லே உட்கார வைக்கப்படவில்லை என்று சொன்னார். உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகியபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே நேரடியாக விசாரணை செய்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். அது தவறாக இருக்கின்றபட்சத்தில் நிச்சயமாக இந்த அரசு முறையாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி, பாராட்டுகள். உடனுக்குடன் நீங்கள் நடவடிக்கை எடுப்பது; அதுவும் தீண்டாமையின்மீது எடுப்பது; யார் வேண்டுமானாலும் சொல்லலாம்; அது குற்றச்சாட்டு அல்ல; தமிழகத்திலே இந்தியா முழுவதிலும் இருப்பதுதான் தீண்டாமை. எந்த மாநிலமும் விதிவிலக்கல்ல.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீய சிந்தனை ஒருசில மனிதர்களிடத்திலே நீண்டகாலமாக “ஆண்டான் அடிமை” என்ற ஒரு மனோபாவம் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி ஒருசிலர் பதவிக்கு வருகின்றபொழுது இதுபோன்ற தவறுகள் நடப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அது ஒருபக்கம் இருந்தாலுங்கூட இன்னொரு பக்கம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் நீதியாக காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையிலே, கட்சியின் அடிப்படையிலேகூட இதுபோன்ற ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துகின்ற அவல நிலையும் இருந்துகொண்டிருக்கிறது. அப்படி வருகின்ற நேரத்தில்தான் முறையாக விசாரணை செய்து எந்தப் பக்கம் தவறு இருக்கிறது, ஜாதி இந்துக்கள் பக்கம் தவறு இருக்கிறதா, அல்லது ஆதி திராவிடர் சமூகத்தைச் சார்ந்தவர்கள்

[திரு. கே.பி. முனுசாமி] [2012 ஜனவரி 31

பக்கம் தவறு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, உடனடியாக நடவடிக்கை எடுத்துக் களைவதற்குதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நொய்யல் நதி சம்பந்தமாக ஆளுநர் அறிக்கையில் அற்புதமான ஒரு வார்த்தை இருக்கிறது. நமது தமிழக அரசு சார்பாக, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 200 கோடி ரூபாய் திருப்பூரில் இருக்கக்கூடிய அந்தச் சாயக் கழிவுநீர்ப் பிரச்சினைக்காக ஒதுக்கீடு செய்திருந்தார்கள். அந்த நிதி ரிலீஸ் செய்யப்பட்டது. ஆனால் இதுவரை திருப்பூரில் இருக்கக்கூடிய ஒரு தொழில் நிறுவனருக்குக்கூட அந்த நிதி போய்ச் சேரவில்லை. மீண்டும் ஒரு வருடம் ஆகியும் அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டே இருக்கின்றன. இதற்கு அரசு காரணமல்ல. அந்த நிதி போய்ச் சேர்ந்திருக்கிறதா; எங்கு அந்த நிதி அடைபட்டிருக்கிறது; அந்த நிதி ஏன் சேரவில்லை என்பது குறித்து அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக தலையீடு செய்து அவர்களுக்கு நிதி சென்று சேர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, நம்முடைய டாஸ்மாக் கடைகள். இன்றைக்கு பொதுமக்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகளான பள்ளிகள், கோயில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். நொய்யல் நதிக்கரையிலே வருகிற கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காகத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட தொகைகள் சரியான முறையில் அவர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள்மூலமாக



2012 ஜனவரி 31] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

சுத்திகரிக்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உங்கள் திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர்கூட அதில் இருக்கிறார்கள். அந்தக் குழுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக இந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்கியதற்குப் பிறகு, அவர்கள் அந்தத் தொகையை எடுத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொகை ஒதுக்கியாகிவிட்டது.

**செல்வி கே. பாலபாரதி:** அந்த பிளான்ட் போடுவதற்குப் பணம் வேண்டியிருக்கிறது. நிதி இருந்தால்தான் அவர்கள் செய்ய முடியும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாஸ்மாக் கடைகள் பொதுமக்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகளில் இருக்கக்கூடாது என்று ஏற்கெனவே அரசு விதிகள் உள்ளன. அதை மீண்டும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கடைகளினுடைய எண்ணிக்கையைக் அதிகப்படுத்துகின்றபோது கொஞ்சம் பொதுமக்களின் நலன் கருதி, தமிழகத்தினுடைய கலாச்சாரம் சீரழியாமல் தடுப்பதற்குரிய அந்தக் கடமை உணர்வோடும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு விநியோகம் இல்லை என்ற ஒரு பேனர் கொண்டு வந்தால் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சகோதரி செல்வி கே. பாலபாரதி அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு எங்கெங்கு, அதாவது சட்ட விதிகளுக்குட்பட்டு வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள் இருக்கின்ற இடங்களுக்கு அருகில் இருக்கின்ற அந்த மதுபானக் கடைகளை நிச்சயமாக அப்புறப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வந்தால் அதை அப்புறப்படுத்தி விடுகிறார்கள். அதில் யாருக்கும் எந்தவிதமான தயவு தாட்சண்யமும் இல்லை. அதையும் மீறி பொதுமக்கள் எதிர்ப்பு வரும் இடங்களிலே அதை ஆய்வு செய்து விதிமுறைக்குட்பட்டு இருந்தால் அந்தக் கடையை மாற்றி அமைக்கிறோம். இந்த விதிமுறைக்குட்பட்டு சொல்லியும்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 ஜனவரி 31

இன்னும் கடைகள் இயங்குகின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

14 வயதுக்குட்பட்டவர்கள் வரும்போது மதுபானக் கடையிலே மதுபானம் விற்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். எனவே இது சட்டப்பூர்வமாகவே இருக்கிறது. சட்டரீதியாக ஏற்கெனவே அமலில் இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள், உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை விளம்பரப்படுத்த வேண்டுமென்றும், கடைக்கு முன்னால் போர்டு ஒன்றை வைக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1—45

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூரில் இருளர் சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் 4 காவலர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் கொடுத்ததை நாங்கள் வரவேற்கின்றோம். ஒரு நல்ல நடவடிக்கை. ஆனால், 5 இலட்ச ரூபாயை வங்கியிலிருந்து வாங்குவதற்குக்கூட அவர்களுக்கு அடையாள அட்டை இல்லை. ரேஷன் கார்டு இல்லை. குடிசை என்று சொன்னால் மண்டியிட்டுத்தான் உள்ளே செல்ல வேண்டும். அப்படி ஒரு மிகவும் பின்தங்கிய சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்கள் அந்த 4 பெண்கள். இப்படி ஒரு குற்றச்சாட்டு காவலர்கள் மீது வந்திருக்கிறது. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நம்முடைய உயர் நீதிமன்றம் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறது. மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரோ இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ ரூ.5 இலட்சத்தினை அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொன்றுக்கும் தொடர்பில்லாமல் முரண்பட்ட நிலை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.5 இலட்சம் அனுப்பியிருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திலும் இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பதனால்,



2012 ஜனவரி 31] [செல்வி கே. பாலபாரதி]

இதன்மீது சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டு அந்த இருளர் சமுதாயப் பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி பாதிக்கப்பட்ட 4 இருளர் சமுதாயப் பெண்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிவாரண உதவியாக ரூ.5 இலட்சம் வழங்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் அவர்கள் வங்கியிலே கணக்கு துவக்குவதற்கு முடியவில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்குக் குடும்ப அட்டை இல்லை என்பது எனது கவனத்திற்குச் சென்ற வாரம் வந்தது. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் கொடுக்கச் சொல்லியும், வங்கிக் கணக்கினை உடனடியாகத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி, மற்ற உறுப்பினர்கள் பேசவுள்ளனர். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலையீட்டினை நாங்கள் ஏற்கெனவே அறிந்திருந்தோம். ஆகவே, அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டு அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையை 100 கோடி ரூபாயில் விரிவுபடுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு கடந்த காலத்தில் அறிவிப்பு வந்தது. அது அறிவிப்போடு நிற்கிறது. எனவே, தமிழக அரசு அதனையும் செய்துகொடுக்க வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். தொகுதி கோரிக்கையைச் சொல்லவில்லையென்றால், எதுவுமே சொல்லவில்லை என்று ஆகிவிடக் கூடாது என்பதற்காக அதையும் பதிவு செய்து, வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையை நேற்றும் இன்றும் விரிவாகப் படித்துப் பார்த்தேன். அதில் மேலோட்டமாக அறிவிப்புகள் இல்லை என்று சொன்னாலும், அதனுடைய பல பகுதிகள் எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையான பல கருத்துகளைக் கொண்டிருப்பதை உணர்கிறேன். அறிக்கையினைப் படிக்கப் படிக்க, அதனுடைய ஆழமான அழுத்தமான கருத்துகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆளுநர் உரையின் சாதனைகளை மட்டும் புகழ்பாடும் அறிக்கையாக மட்டுமல்லாமல், தமிழகத்தின் அடிப்படையான பிரச்சினைகள் விமர்சன ரீதியான அணுகுமுறையில் முன்வைக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். குறிப்பாக அனைவருக்கும் பயன்பெறத்தக்க நிலையான வளர்ச்சியால் ஏற்படும் பயன்பாட்டிற்கு அரசின் உதவிகளும், மானியங்களும் ஈடாகாது. வறுமையும், வேலையின்மையும் நமது சமுதாயம் எதிர்கொண்டுள்ள இரட்டைச் சவால்களாகும். கிராமப்புற வறுமை ஓரளவு குறைக்கப்பட்டிருப்பினும், நகர்ப்புற வறுமைக்கான தீர்வு தொடர்ந்து ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது. எனவே, தற்போதுள்ள முறைகளுக்கு மாற்றாக ஒவ்வொரு குடும்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்துவது அவசியமாகும். இந்த அரசின் பல்வேறு தீவிர முயற்சிகளுக்குப் பின்னரும் மாநிலத்தின் மின் நிலைமை தொடர்ந்து கவலை அளிப்பதாக உள்ளது. இத்தகைய குறைகளைப் போக்குவதன்மூலம் மாநில அரசின் குறிக்கோளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான அனைத்து குறியீடுகளிலும் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட முடியும். ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார





மேம்பாட்டிற்கான வளர்ச்சியை ஏற்படுத்திட முடியும். பொதுவாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பல அம்சங்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

சமீபத்தில் தமிழகத்தின் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களைத் தாக்கிய 'தானே' புயல் குறித்த விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வருகின்ற 4–ஆம் தேதியும் அதற்கான நிவாரண உதவித் தொகையை அளிப்பது குறித்தும் சொல்லவிருக்கிறார்கள். இருந்தாலும், அதில் நான் ஒரே ஒரு குறிப்பினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 3 மாவட்டங்களைக் கடுமையாகத் தாக்கியிருக்கின்ற அந்தத் 'தானே' புயல் பாதிப்பிற்கு, மத்திய அரசு இதுவரை வெறும் 500 கோடி ரூபாயை மட்டும்தான் கொடுத்திருக்கிறது என்பது தமிழக மக்கள்மீது மத்திய அரசு எத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கிறது என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்திருக்கிறது. எனவே, மத்திய அரசு, தமிழக அரசு கேட்டிருக்கிற 5,248 கோடி ரூபாயை உடனடியாக அறிவித்து, பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு முழு நிவாரணம் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன். இங்கே, விவசாயிகளுக்கான பாதிப்பு என்பது அவர்களுடைய வாழ்க்கையைத் தலைகீழாக புரட்டிப் போட்டிருக்கிறது.

*பிற்பகல் 1–50*

குறிப்பாக, நிலையான பயிர்களான முந்திரி, மா, தென்னை மற்றும் பலா போன்ற பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு நிலையில், விவசாயிகளுக்கான நிவாரணத்தை இரண்டு கட்டங்களாக கொடுக்கவேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்று, இந்த ஆண்டு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பைச் சரி செய்வதற்காக ஏக்கர் ஒன்றுக்கு 30,000 ரூபாய் மரங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கிடவேண்டும். அதைப்போல, முற்றிலும் அந்த மரங்களை அகற்றி, முந்திரிப் பயிர்களை வைப்பதற்கான திட்டத்தை நமது ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்கள். அதற்கு வழங்கக்கூடிய உதவித் தொகையை ஓராண்டுக்கு மட்டுமல்லாமல், தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சு. குணசேகரன்] [2012 ஜனவரி 31

அதைப்போல, நிவாரணத் தொகை வழங்குவதில் சிற்சில குறைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். எனவே, அந்தக் குறைகளை விசாரித்து, முறையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கையையும் அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புயல் பாதித்த நான்காம் நாள், எங்களுடைய இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவாகச் சென்று பார்வையிட்டோம். அந்த நேரத்தில் பல கிராமங்களுக்கு 4 நாட்கள் ஆகியும் அரசு அதிகாரிகள் உட்பட யாரும் செல்லாத ஒரு நிலை இருந்தது. இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நமது நிருவாக அமைப்பு முறை எவ்வாறு இருக்கிறது என்பதற்கு இதை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்ளவேண்டும். எனவே, ஆபத்துக் காலங்களில், பாதிக்கப்பட்ட நேரங்களில் நமது அரசு நிருவாகம் உடனடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று, நிவாரண உதவிகளை வழங்கக்கூடிய ஒரு நல்ல நிருவாக அமைப்பு முறைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது நிவாரணத் தொகை 4 நாட்களாகக் கிடைக்கவில்லை என்று சொல்கின்றார்கள். நீங்கள் ஒன்றை மட்டும் உறுதியாக நினைத்துப் பார்க்கவேண்டும். கிட்டத்தட்ட 4 இலட்சம் குடும்பங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 10 நாட்களிலே, அதாவது அதிகாரிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும்கூட உடனடியாக சென்றடையும் வகையிலே, வெளி மாவட்டங்களிலேயிருந்து தாசில்தார்கள் மட்டும் 200 பேர்களை மற்றும் பல அதிகாரிகளை அழைத்து வந்து 10 நாட்களிலே 4 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிய ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 30 ஆம் தேதி, 'தானே' புயல் 145 கிலோ மீட்டர் வேகத்திலே கடந்து, அதன் தாக்கம் கடலூர் மாவட்டத்தை முழுமையாக பாதித்துவிட்டது. உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 5 மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை கடலூர் மாவட்டத்திற்கு 30 ஆம் தேதி இரவே அனுப்பி, அந்தந்தப் பகுதிகளிலே, குறிஞ்சிப்பாடி வட்டத்திலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, அதற்கு அடுத்த கட்டமாக பண்ருட்டி பகுதியிலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, அதற்கு அடுத்த கட்டமாக சிதம்பரம் வட்டத்திலே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்து, உடனடியாக அத்தியாவசியத் தேவைகளான தண்ணீர் வழங்குவது முதற்கொண்டு, பால் விலையைச் சரிசெய்வது முதற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் காய்கறிகளை வழங்குவது முதற்கொண்டு அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக மேற்கொள்ள ஆணையிட்டார்கள்.

முதல் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை பகுதிகளிலே புயல் தாக்கிய 30 ஆம் தேதி இரவே North Zone I.P.S. அதிகாரி–சைலேந்திர பாபு அவர்களுடைய தலைமையிலே முழுமையாகப் பணிகளை மேற்கொண்டு, அன்று 30 ஆம் தேதி இரவே, தேசிய நெடுஞ்சாலைகளில், மாநில நெடுஞ்சாலைகளில் வேரோடு பெயர்ந்து விழுந்த மரங்களை அப்புறப்படுத்தும் பணியை முழுமையாக மேற்கொண்டார்கள் என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், அனைத்து கிராமப் பகுதிகளிலும், ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர், அந்தப் பகுதியினுடைய மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் அனைவரும் முழுமையாகப் பங்கேற்று, அந்தப் பகுதி மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகள் முழுமையாக வழங்கப்பட்டன என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவாக அந்தப் பணிகள் முடுக்கிவிடப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். விதிமுறைக்கு ஏற்ப ஒரு வட்டாட்சியருக்கு 2 இலட்சம் ரூபாய்தான் அனுமதி அளித்து அவர்களுக்கு நிதியுதவி வழங்குகின்ற திட்டம் இருந்தபோதுகூட, மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காகத் தனிக் கவனம் எடுத்து, வட்டாட்சியருக்கு 20 இலட்சம் ரூபாயும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 20 இலட்சம் ரூபாய் என்று இருந்ததை ஒரு கோடி ரூபாயாகவும் உயர்த்தி, அந்தப் பணிகளை வேகமாக, விரைவாக முடிக்கவேண்டுமென்றும், 20 கோட்டாட்சியர்களை அங்கே பணியில் அமர்த்தி, ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் அவர்கள் கையிலே தந்து, இரவு பகல் பாராமல் அந்தப் பணத்தைத் தருவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். பல்வேறு இடங்களிலே போராட்டங்கள் நடைபெற்றபோதுகூட, அவர்கள் எப்படிக் கொண்டுவந்து அதைக் கொடுத்து, பணிகளை முடித்து, அதற்குப் பிறகு அந்தத் தொகையை இரவு நேரங்களிலே கொண்டுவந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே ஒப்படைக்கின்ற இதுபோன்ற பணிகளெல்லாம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைபெற்றதைப்போல எந்தக் காலத்திலேயும், என்றைக்கும் நடைபெற்றதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிவாரண உதவிகள் சென்றடைவதிலே காலதாமதம் கொஞ்சம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். ஒன்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சுனாமி பாதிக்கப்பட்டபோது, சிறப்புக் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளிலே அதிகாரிகள் உடனடியாகச் சென்று அந்த நிவாரணப் பகுதிகளைக் கவனிக்க வேண்டுமென்று எப்படிச் சொன்னார்களோ, அதைப்போல இந்த முறை 'தானே' புயலால்



பாதிக்கப்பட்ட இடத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வந்து, நிவாரண உதவிகளைத் தன்னுடைய பொற்கரங்களால் தொடங்கி வைத்தவுடனே, அத்தனை அமைச்சர்களையும், பாதிக்கப்பட்ட அந்த இரண்டு மாவட்டங்களுக்குச் சென்று, தங்கி நிவாரண உதவிகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அனைத்து அமைச்சர்களும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று, ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஓர் அமைச்சர் என்று பிரித்துக்கொண்டு, அந்த நிவாரணத் தொகைகளை வழங்கினார்கள். இன்னொன்றையும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதில் எந்த அளவிற்கு கீழ்மட்டத்திலிருக்கிற அந்த கிராம நிருவாக அலுவலர்கள் சிரமப்பட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த நிவாரணத் தொகை எங்களுக்கும் வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்களும் கேட்டார்கள்; பாதிக்கப்படாதவர்களும் கேட்டார்கள்; கொடுக்கப்பட வேண்டுமென்றும் சொன்னார்கள். பல இடங்களிலே மக்களால் அந்தக் கிராம நிருவாக அலுவலர்கள் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்திருக்கின்றது. அதையும் தாங்கிக் கொண்டு, அந்த நிருவாக அலுவலர்களால் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே இந்த நிவாரண உதவிகள் விரைவிலே கொடுத்து முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை உங்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிர் இழப்பீட்டுத் தொகையைப் பொறுத்தவரையில் சிறப்பு நிகழ்வாகக் கருதி பதிவு செய்யாத விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் அரசின் நிலைப்பாட்டை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆதரிக்கிறோம். அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறபடி அணையின் பாதுகாப்பை, தமிழ்நாட்டு மாநில அரசிடம் மத்திய அரசு ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை உடடினயாக மத்திய அரசு ஏற்றுச் செயல்படுத்திட வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், நதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிற அடிப்படையில் மத்திய அரசு, நதிகளைத்

தேசியமயமாக்க வேண்டுமென்ற தீர்மானத்தையும் நாம் சட்டமன்றத்திலே முன்மொழிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலைப் பற்றி அறிக்கையில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. கடந்த ஆட்சியில் நடந்த உள்ளாட்சித் தேர்தல் அளவிற்கு முறைகேடுகள் இல்லையென்று சொன்னாலும், முற்றிலுமாக முறைகேடுகளே இல்லையென்று சொல்லமுடியாது. (குறுக்கீடு) அங்கொன்றும் இங்கொன்றுமாக சில முறைகேடுகள் நடக்கத்தான் செய்தது. (குறுக்கீடு) இருங்கள், ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். என்னவென்றாவது கேளுங்கள். அதாவது, கடந்த ஆட்சியில் திட்டமிட்ட முறைகேடுகள் நடந்தன. இந்த ஆட்சியிலே அப்படியெல்லாம் இல்லை. ஆனால், அதற்காக குறையே இல்லை என்று சொல்ல முடியாது. சில இடங்களில் குறைகள் இருந்தன. அந்தக் குறைகளும் இல்லாத அளவிற்கு (குறுக்கீடு) இருங்கள். அந்தக் குறைகளும் இல்லாத அளவிற்கு எதிர்காலத்தில் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களை நடத்துவதற்கான நடைமுறைகளை அரசு நிருவாக ரீதியாக உருவாக்கிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவுதான். வேறு ஒன்றுமில்லை. பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமென்பதற்காகவே, போலியான ஒரு குற்றச்சாட்டை இந்த அவையிலே சுமத்தி, பொதுவாகச் சொல்லிவிட்டுச் சென்றால், அது அவ்வளவு நாகரிகமான செயல் அல்ல. எங்கு குற்றம் நடைபெற்றிருக்கிறது? குற்றம் நடைபெற்ற இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும். எந்த நிலையில், எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும், எப்படிக் கைது





செய்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள்? எந்த உயர்ந்த பதவியில் இருந்தாலும்கூட, குற்றம் செய்திருக்கிறார் என்று—F.I.R. போட்டால் உடனே arrest செய்கிறார்களா, இல்லையா? அதுதானே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு? (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நடந்து முடிந்து மூன்று மாதக் காலங்கள் ஆகிவிட்டன. எதையாவது சொல்ல வேண்டும் என, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதை எதையோ தேடிப் பார்த்ததாகச் சொன்னார். ‘மேம்போக்காக நான் படித்துப் பார்த்தேன்; புரியவில்லை; உள்ளே, நுழைந்து, நுழைந்து செல்கின்றபோதுதான், இந்த அரசு நல்ல திட்டங்களையெல்லாம் கொடுத்திருக்கிறது’ என்று தெரிந்து கொண்டதாகச் சொல்கிறார். இந்த நல்ல திட்டங்களைச் சொல்கின்ற அவர், தன்னை அறியாமலேயே தான் ஒரு எதிர்க்கட்சி என்பது நினைவுக்கு வந்தவுடனே இக்குற்றச்சாட்டைப் பொதுவாகச் சொல்கிறார். அது தவறு. குற்றச்சாட்டு என்னவென்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் ஈரோட்டிலே நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்கள். உடனடியாக அதற்கு பதில் கொடுக்கப்பட்டதா, இல்லையா? மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறாரா, இல்லையா? தவறைச் சுட்டிக்காட்டுங்கள். சுட்டிக்காட்டிய உடனேயே, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** பயப்படாதீர்கள். அதாவது, தேர்தல்களைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியரிடம் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளில் என்ன பதில் கிடைத்தது என்று சொன்னால், இந்தத் தேர்தல் முறையிலே, அங்கிருக்கக்கூடிய தேர்தல் அதிகாரி ஒரு முடிவை அறிவித்ததற்குப் பின்னால், அந்த வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றுதான் தீர்வு ஏற்படுத்த முடியும். என்ற அடிப்படையில்தான் விதிமுறைகள் இருக்கிற காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர்களே தலையிட்டு, அந்தக் குறைகளைத் தீர்க்க முடியவில்லை. இதை அரசினுடைய குற்றமாக நான் சொல்லவில்லை. இது தேர்தல் நடைமுறையில் இருக்கக்கூடிய

[திரு. சு. குணசேகரன்] [2012 ஜனவரி 31

குறைகளாக நான் சுட்டிக்காட்டுகிறேன். நீங்கள் முழுவதுமாகப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே அப்படிப்பட்ட குறைகள் இல்லாமல் எதிர்காலத்தில் தேர்தல் நடத்துவதற்கான ஒரு அமைப்பை நாம் உருவாக்க வேண்டும். தேர்தல் ஆணையம் அதை உருவாக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *2–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சு. குணசேகரன்:** பாராளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சி அமைப்புத் தேர்தலாக இருந்தாலும், ஜனநாயகத்தின் ஆணி வேரே தேர்தல்தான். எனவே தேர்தல் என்பது நீர்த்துப் போகாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும், எந்தத் தேர்தலாக இருந்தாலும் தமிழ்நாட்டில் இன்றைக்குப் பணமும், மதுபானமும் மிகப் பெரிய அளவில், மிகப் பெரிய பங்கை வகித்துக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பிறகு சொல்லுங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தத் தேர்தலாக இருந்தாலும் வாக்குகள் வித்தியாசம் என்பது இயற்கை. ஒரு சிலர் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைகிறார்கள்; வெற்றிபெறுகிறார்கள். ஒரு சிலர் ஆயிரம் வாக்குகளில் வெற்றிபெறுகிறார்கள். எத்தனையோ பேர் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுகிறபோது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், அம்மாவினுடைய விசுவாசத்தில் தேர்தல்களில் போட்டியிடுகிறபோது ஒரு வாக்கு வித்தியாசத்தில் எத்தனையோ பேர் வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அப்படி நாங்கள் ஒரு தவறு செய்ய நினைத்திருந்தால் இதன் நிலைமை வேறாக இருந்திருக்கும். அப்பேர்பட்ட தவறுகளை தி.மு.க. போல நம்முடைய அரசாங்கம் நிச்சயமாகச் செய்யாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசேகரன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** தமிழகத்தில் தொடர்ந்து உள்ளாட்சித் தேர்தல்களில் பல ஆயிரம் கோடிகள் பணம் செலவிடப்படுவதும், சுமார் 2,000 கோடி ரூபாய் அளவில் மதுபானங்கள் விற்றுள்ளதும் சரிதானா என்றும் நாம் சிந்திக்க வேண்டும். வெற்றிவாய்ப்பை இழந்த பல ஆயிரம் வேட்பாளர்கள் தேர்தலில் பல இலட்சங்களை இழந்து அவர்களுடைய குடும்பங்கள் பொருளாதார ரீதியாக சீரழிவிற்கு ஆட்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு நேர்மையான தேர்தல் முறைகளை எதிர்காலத்தில் நாம் உருவாக்கிடவேண்டும்.

விவசாயத்தை முதன்மைத் தொழிலாக ஏற்று தமிழக அரசு சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், விவசாய விளைபொருளுக்கு இலாபமான விலையை அறிவிக்க வேண்டும். அந்த அடிப்படையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது போல, கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாய் என்று அறிவித்தீர்கள். ஆனால், இப்போது 2,150 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக கரும்பு விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கிற விதமாக வெட்டுக் கூலியை ஆலை நிருவாகம் ஏற்று, வயல் விலையாக 3,000 ரூபாய் கரும்புக்கு அறிவிப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிவகங்கை மாவட்டத்தில் இன்றைக்கு அறுவடை நேரத்தில் நெல் கொள்முதல் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கு ஜோதி என்கிற ஒரு இரக நெல்லை அதிக அளவில் பயிரிடுகிறார்கள். அந்த நெல் இப்பொழுது கொள்முதல் செய்யப்படாத காரணத்தால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்குக் காரணம் கேட்டால், இந்த அரிசி சிவப்புக் கலரில் இருப்பதால் நாங்கள் கொள்முதல் செய்யமாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால், கேரள மாநிலத்தில் இருக்கக்கூடிய மக்கள் அந்த அரிசியை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். எனவே, அதை நீங்கள் கொள்முதல் செய்து, வேறு மாநிலத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை

எடுக்க வேண்டும். அந்த நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாக் வளைகுடா பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் பாரம்பரிய உரிமையைப் பாதுகாக்கவும், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசேகரன், உரையை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. சு. குணசேகரன்:** இரண்டு நிமிடம், அவ்வளவுதான் முடித்துவிடுகிறேன். கச்சத் தீவைத் திரும்பப் பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தமிழக அரசின் நிலைப்பாட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முழுக்க முழுக்க ஆதரிக்கிறது. இன்றும் தமிழக மீனவர்கள், இலங்கை இராணுவம், சிங்கள மீனவர்களால் தாக்கப்படுவது, கொடுமைப்படுத்தப்படுவது தொடர்கிறது. இதற்காக உண்மையிலேயே ஒவ்வொரு தமிழனும் வெட்கித் தலை குனிய வேண்டும். தமிழக மீனவர்கள் தாக்கப்படும்பொழுதெல்லாம் அவமானத்தால் கூனிக் குறுகும் நிலை ஏற்படுகிறது. மத்திய அரசை வலியுறுத்தி இதற்கு உறுதியான நடவடிக்கையை, சட்டபூர்வமாகவும், அரசியல்பூர்வமாகவும் தமிழக அரசு எடுத்திட வேண்டும். இப்பிரச்சினைக்கு இறுதியான முடிவு எடுத்திட வேண்டும்.

சமீபத்தில் பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையைப்பற்றி வெளியுறவுத் துறை அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியதாக, செய்திகள், பத்திரிகையில் வெளிவருகின்றன. அதுபற்றிய விவரம் தமிழக அரசுக்குத் தெரியுமா என்பதை அவைக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஏற்கெனவே கச்சத் தீவை இழந்து தமிழக மீனவர்கள் கடும் துயருக்கு ஆளாகியுள்ள நிலையில் தமிழக மீனவர்கள் நலன் பாதுகாக்க, மீன் பிடிக்கும் உரிமைகளைப் பற்றிய பேச்சுவார்த்தைக் குழுவில் தமிழக அரசின் பிரதிநிதிகளும், தமிழக அரசியல் கட்சிகளின் மீனவ அமைப்புகளின் தலைவர்களும் பங்கேற்க வேண்டும். இக்கருத்தை வலியுறுத்தி தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போல, ஏற்கெனவே தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை மத்திய அரசு ஏற்றுச் செயல்படுத்திட, தமிழக அரசு வலியுறுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இதுவரை ஈழத் தமிழர்களுக்கு அரசியல் உரிமை, மொழி, தாயக உரிமை கிடைக்காத நிலையில் தமிழர்கள் அடிமைகளாக எவ்விதப் பாதுகாப்பும் இன்றி உள்ளார்கள். அவர்கள் மீதான தாக்குதல் தொடர்கின்றன, சொத்துக்கள் அபகரிக்கப்படுகின்றன. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

*பிற்பகல் 2–05*

**திரு. சு. குணசேகரன்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்து விடுகிறேன். இந்திய அரசு இதுவரை 1,500 கோடி ரூபாய் நிதி வழங்கியும் இலங்கை அரசு இதுவரை தமிழர்களுக்கு அந்நிதியை முழுமையாகச் செலவிடவில்லை. எனவே, நடந்த இனப் படுகொலைக்கு ராஜபக்ஷே மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும், மார்ச் 27 ஆம் தேதி ஐ.நா.–வின் மனித உரிமை ஆணையம், நவநீதம் பிள்ளை தலைமையில் இலங்கையில் நடந்த போர்க் குற்றம் பற்றிய விசாரணையைத் தொடங்கவுள்ளது. ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கையில் போர்க் குற்றம் நடந்ததை முதற்கட்டமாக ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்விசாரணையில் மத்திய அரசு, தமிழகச் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கைப் போர்க் குற்றத்தை பகிரங்கப்படுத்துவதோடு, தமிழகப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவும் வழி செய்திட மத்திய அரசை வலியுறுத்தி மீண்டும் தமிழகச் சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** நிருவாகச் சீர்கேடுகள் குறித்து 13–11–2011 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர் மாநாட்டில் நிகழ்த்திய தமிழக முதல்வரின் உரை சிறப்புக்குரியது. அதை முழுமையாகச் சொல்ல நேரம் கிடையாது. ஆனால், ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல

[திரு. சு. குணசேகரன்] [2012 ஜனவரி 31

விரும்புகிறேன். அதிலே அவர்கள் தெளிவாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 'நல்ல ஆட்சிக்கு, திறமையான நிருவாகம் அடிப்படை. நல்ல ஆட்சி என்னும் குறிக்கோளை எய்துவதற்கு ஊழல் என்பது பெருந்தடையாக உள்ளது. மாவட்ட ஆட்சியர்களுக்கு, நிருவாக அமைப்பைத் தூய்மைப்படுத்தி சேவை வழங்கும் பெரிய பொறுப்பு உள்ளது. மக்கள் ஊழலற்ற சேவையை எதிர்பார்க்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்பிற்கு மாறாக,... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள். (குறுக்கீடு) உரையை முடிக்கமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊழல் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு சமூகத்தில் ** இருந்து கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு நமது தமிழ்நாட்டிலும் லோக்பால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாகச் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். குறிப்பிட்டு எங்கேயாவது நடந்திருந்தால் அதைப் பற்றிச் சொல்லலாம். அதற்கு உரிய பரிகாரமாக பதில் கிடைக்கும். ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் இறுதியாகக் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள், ஐந்து நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 ஜனவரி 31]

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் குடும்பங்களின் காவல் தெய்வம், தமிழக மக்களின் இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கின்ற தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, எனது உரையைத் துவக்குகின்றேன்.

தமிழகத்திலே ஓர் ஊதாரித்தனமான, அராஜக ஆட்சியை நடத்தி, தமிழக மக்களின் வரிப் பணத்தை வீணடித்து தமிழக நிதிநிலையை மிகவும் மோசமான சூழ்நிலைக்குக் கொண்டுசென்றுவிட்ட நிலையிலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 8 மாத காலத்திற்குள்ளாகவே தேர்தல் நேரத்தில் கொடுத்த பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றி, ஏழையெளிய மக்கள் பயனடைகின்ற வகையிலே ஒரு சிறப்பான நல்லாட்சியை, தமிழக மக்கள் போற்றுகின்ற ஒரு ஆட்சியை, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துகொண்டிருக்கின்றார்கள்.

நேற்று இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநரின் உரையைப் புறக்கணித்துவிட்டுச் சென்றவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல், அது உள்ளாட்சி தேர்தல் அல்ல; ரவுடி ராஜ்ஜிய தேர்தல். அதில் தோற்றவர்கள் எல்லாம் வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்றவர்கள் எல்லாம் தோல்வியுற்றார்கள். பல்வேறு வாக்குச் சாவடிகளில் காலை 9 மணிக்கே வாக்களித்து முடித்துவிட்டதாக அறிவித்தார்கள். சென்னை போன்ற மாநகராட்சிகளில் வாக்காளர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உயர் நீதிமன்றம் தனது கண்டனத்தைத் தெரிவித்ததோடு மறு தேர்தலுக்கும் உத்தரவிட்டது. இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்குக் காரணமானவர்கள் சட்டம்—ஒழுங்கு சீர்கேட்டை உருவாக்கியவர்கள், சட்டம்—ஒழுங்கைப் பற்றிப் பேச அவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் நேர்மையாகவும், நியாயமாகவும், அதேநேரத்தில் அமைதியாகவும் நடைபெற்றதை

மக்கள் பாராட்டுகிறார்கள். பத்திரிகைகளும் பாராட்டுகின்றன. அதேநேரத்தில் 80 சதவிகித வெற்றியை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள்மீது தமிழக மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தி உள்ளனர். இதன்மூலமாக, தமிழக வாக்காளர்களின் அரசியல் முதிர்ச்சியினால் அடித்தளத்தில் உள்ள மக்களாட்சி அமைப்புகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன. சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான அனைத்து குறியீடுகளிலும் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுகின்ற வகையில் வளர்ச்சிப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்துகின்ற அதேவேளையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களும் பொருளாதார மேம்பாட்டில் சமமாக முன்னேறுகின்ற வகையிலே வழங்கப்படும் உதவிகள் அதிகரிக்கப்பட்டு வழங்கப்படுவதை மக்கள் அனைவரும் ஒருமித்த கருத்தோடு வரவேற்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்”

என்றான் பாரதி. அவருடைய கனவை நனவாக்குகின்ற வகையில் இன்றைக்கு தமிழகத்தில் பசி இல்லை, பஞ்சம் இல்லை, பட்டினிச் சாவு இல்லை. ஏனென்றால், எல்லோருக்கும் தாயாக விளங்கும் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாட்டிலேயே முதன்முதலாக விலையில்லா அரிசி வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளிய மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும், குடும்ப வருமானத்தையும் பெருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், ஏழைக் குடும்பங்களுக்குக் கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்குவதோடு, அரிசி பெறத் தகுதியுடைய அத்துணை ரேசன் அட்டைதாரர்களுக்கும், காலை 8 மணிக்கெல்லாம் வேலைக்குச் சென்று மாலை 5 மணிக்கு வீடு திரும்பும் பெண்கள் அம்மியிலே அரைத்து உணவு தயாரிப்பதற்கும், மறு நாள் காலை உணவுக்கு, குழவிக் கல்லில் மாவாட்டி அவர்கள் படுகின்ற கஷ்டத்தைப்





போக்குகின்ற வகையிலும், இரவில் கொசுக்கடி இல்லாமல், அதே நேரத்தில், வியர்க்காமல் அவர்கள் படுத்து உறங்குவதற்கும் மிக்சி, கிரைண்டர், மின் விசிறி ஆகியவற்றைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கின்றார்கள். அந்தப் பொருட்களையெல்லாம் வழங்கக்கூடிய பாக்கியத்தை என் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் வழங்கியுள்ளார்கள். அவற்றைப் பெற்றுக்கொள்கின்ற தாய்மார்களின் முகத்திலே ஒரு மகிழ்ச்சி. எதிர்கால வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையோடு செல்கின்ற காட்சியைப் பார்த்தால் நமக்கு ஏற்படுகின்ற சந்தோஷத்திற்கு அளவே இல்லை. இதைத்தான் பிறரை மகிழ்வித்து மகிழ் என்பார்களோ? இதற்காக, மாண்புமிகு அம்மாவின் அரசு, கூடுதலாக 8,000 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை ஏழை எளிய மக்கள் மனதார மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு தொடங்குகின்ற திட்டங்கள் அனைத்தும் இலக்குகளோடு தொடங்கப்பட்டு, அவை மக்களைச் சென்றடையும் வகையில் ஒளிவு மறைவற்ற, திறமையான நிருவாகத்தில் நாட்டிற்கே எடுத்துக்காட்டாக விளங்கும்வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் செயல்பாடுகள் உறுதியாக உள்ளன. இது, தமிழகத்தை நாட்டின் முதன்மை மாநிலமாக மாற்றியே தீரும் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அண்டை மாநிலங்களுடன் நல்லுறவைப் பேணுகின்ற அதேநேரத்தில், நீர் ஆதாரத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தின் உரிமையைக் காக்கின்ற அதேநேரத்தில், குறுகிய அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்படும், உண்மைக்கு மாறாகச் செய்யப்படும் பரப்புரைகளை நம்ப வேண்டாம் என்று ஆளுநர் உரையில் கூறி இருப்பது வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்லாமல், அணையின் பாசனப் பகுதி எந்த மாநிலத்தில் உள்ளதோ, அந்த மாநிலத்தின் பாதுகாப்பில்தான் அணை இருக்க வேண்டும் என்பதையும் விவசாயிகள்

வாழ்வாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீதிமன்றங்கள் உள்பட அனைத்து மன்றங்களிலும் நமது மாநில உரிமை நிலை நாட்டப்படும் என்றும் கூறியிருப்பது தமிழக மக்கள் மீது அம்மா அவர்களும், அம்மா மீது தமிழக மக்களும் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

அதுமட்டுமல்லாமல், 2010 ஆம் ஆண்டு அணைப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவில் உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளதை தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் மாவட்ட மக்கள் மட்டுமல்லாது, தமிழக மக்களே வரவேற்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் உயிரை துச்சமென மதித்து, பொதுச் சொத்து மட்டுமல்லாது, தனியார் சொத்தாக இருந்தாலும்கூட, அதைக் காக்கின்ற முயற்சியில் ஈடுபடும்போது அதனால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு நிதி உதவி செய்வதோடு, தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவிக்கின்ற நிகழ்ச்சி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகிறது.

மேலும், அவர்கள் வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கத்தை வழங்கியதோடு, இனி எப்போதும் இதுபோன்ற பேரிடர் விபத்து நிகழாவண்ணம், அதைத் தடுக்கும்பொருட்டு நிபுணர் குழுவை அமைத்து, தொன்மை வாய்ந்த கட்டடங்களையெல்லாம் ஆராய்கின்ற நிகழ்ச்சி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அரசு ஊழியர்கள் மீது உள்ள அக்கறையையும் மனிதாபிமானத்தையும் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் மகாசக்தியாக, அன்பிற்கு அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக, கருணைக்குக் கடலாக, பண்பிற்கும், பாசத்திற்கும் அருட்கடாட்சமாக விளங்கும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு சிலருக்கு மட்டும் சிம்ம சொப்பனமாக விளங்குகிறார்கள். அவர்கள்தான் சமூக விரோதிகள், நில அபகரிப்பாளர்கள், அடுத்தவன் சொத்துக்கு ஆசைப்படுபவர்கள். பொதுச் சொத்தைத் தன் சொத்தாக மாற்றுபவர்கள். இவர்களிடமிருந்து ஏழை எளிய மக்களைக் காக்க, எப்படி முருகக் கடவுள் சூரனை வதம் செய்து, சூரனை சம்ஹாரம்





செய்து தேவர்களையும், மக்களையும் காத்தாரோ, அதேபோன்று நில அபகரிப்பாளர்களையெல்லாம் வதம் செய்து, அவர்கள் அபகரித்த சொத்துகளை மீட்டுக் கொடுத்து மக்களை வாழ வைத்தவர்தான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல; இனிமேலும் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று கூறியிருப்பது 'யாமிருக்க பயமேன்' என்ற தெய்வ வாக்காக உள்ளது.

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பொருளாதார மந்த நிலை காரணமாக ஏற்பட்டுள்ள பணவீக்கம், ரூபாயின் மதிப்புக் குறைவு, உயர்ந்து வரும் வட்டி விகிதம், உயர் வளர்ச்சி இலக்கை அடைய தடைக் கற்களாக உள்ளன. இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையிலுங்கூட உட்கட்டமைப்புக்கும், சமூகப் பாதுகாப்பிற்கும் எவ்விதக் குறைபாடுமின்றி உறுதியுடன் செயல்பட்டு 12 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு 1,85,000 கோடி ரூபாயைத் திட்டப் பணிகளுக்குச் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இது 11 ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட 85,000 கோடி ரூபாயைவிட இரண்டு மடங்கிற்கும் அதிகமானதாகும். இந்த உயர் இலக்கு தமிழ்நாட்டைத் துரித வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்லும் என்பதில் எள்ளளவும், எள் முனையளவும் சந்தேகம் இல்லை என்பது தெள்ளத் தெளிவாகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்பது பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கைகளாக இருந்து வருகின்றன. ஆனால், மத்திய அரசு இந்தக் கொள்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலே திட்டங்களைத் தயாரிக்கின்றது. இது எதிர்பார்த்த பலன்களை அளிக்காது என்பதால் (மணியடிக்கப்பெற்றது) மாநில சுயாட்சிக் கொள்கையின் அடிப்படையில் மாநிலங்களின் தேவைகளுக்கு ஏற்ப அந்தந்த மாநில அரசுகளே திட்டங்களை வடிவமைக்கும் சுதந்திரத்தை வழங்க வேண்டுமென்று ஆளுநர்

உரையில் கூறியிருப்பது மாநிலங்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கை ரீதியான நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள்தான் தமிழ், தாங்கள் மட்டும்தான் தமிழ், தங்களுடைய குடும்பம் மட்டும்தான் தமிழை வளர்க்க முடியும் என்று கூறி, உலகத் தமிழ் மாநாடு நடத்த, உலகத் தமிழ்ச் சங்கம் மறுத்தபோதும், "நாங்கள் உலகத் தமிழ் மாநாடு நடத்தவில்லை, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்துகிறோம்" என்று கூறி, தன் குடும்பத்தாரை மேடையில் மட்டுமல்ல; முன் வரிசை, பின் வரிசை என்று அமர வைத்து, தன் புகழ்பாடிகளை, துதிபாடிகளை எல்லாம் வைத்து, சுய விளம்பர தம்பட்ட மாநாடு நடத்திய முந்தைய ஆட்சியாளர்கள் மத்தியில், தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து அரசு வலியுறுத்தும் என்ற அறிவிப்பு முத்தாய்ப்பானது. மூத்த தமிழ் அறிஞர்களுக்கான உதவித் தொகையை 1,000/– ரூபாயிலிருந்து 2,000/– ரூபாயாக உயர்த்தி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ச. பழனிச்சாமி**: ஆனால், முந்தைய தி.மு.க. மைனாரிட்டி அரசு, இதுபோன்ற செயல்களைச் செய்யாமல், அரசு அலுவலகங்களில் 'தமிழ் வாழ்க' என்று நியான் விளக்குகளை அமைத்துள்ளது. சர்க்கரை என்று காகிதத்தில் எழுதி நாக்கில் வைத்தால் எப்படி இனிக்காதோ, அதேபோல் விளக்குகள் அமைத்தால் மட்டும் தமிழ் வளராது. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியால், திருக்குறள் மட்டுமல்லாது, தேர்வு செய்யப்பட்ட பாரதியார் மற்றும் பாரதிதாசன் படைப்புகளை, சீனா மற்றும் அரேபிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், தமிழ் அறிஞர்களின் படைப்புகளை அனைவரிடமும் கொண்டு செல்லும் வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட 1,471 புத்தகங்களை இணையதளத்தில் வெளியிட்டுள்ளது உண்மையான தமிழ் வளர்ச்சிக்கு உதவும் என்பது தெள்ளத் தெளிவாகிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் அதைத் தொலைநோக்குப் பார்வையுடன்தான் தீட்டுவார்கள். அதன்படி, 'தொலைநோக்குத் திட்டம், 2025' – தமிழ்நாட்டின் வருங்கால திட்டங்களையும் செயலாக்கும் வழிமுறைகளையும் விரித்துரைக்கும் திட்ட அறிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிடுவதன்மூலம் உட்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிந்து, முன்னுரிமைப்படுத்துதல், ஒப்புதல் அளித்தல், விரைந்து நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை வழிநடத்தக்கூடிய தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒன்றை அமைக்க எதிர்வரும் வரவு–செலவு கூட்டத் தொடரில் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படும் என்று கூறியிருப்பதும், 'உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி' என்ற ஒன்றைத் தனியாக அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தும் என்று கூறியிருப்பதும், அதேநேரத்தில் திட்டச் செயலாக்கத்தில் தனியார் பங்களிப்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பது என்ற அறிவிப்பும், திட்டப் பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடு) 'அண்ணன்' என்று கேட்டாலும் முடியாது! (சிரிப்பு)

***திரு. ஜே.ஜி. பிரின்ஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பேசுவதற்கு அளித்த வாய்ப்பிற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் நன்றி சொல்கிறேன். "உனக்கு திராணி இருக்கும்போது செய்ய வேண்டியதைச் செய்" என்ற வேத வாக்கியத்திற்கிணங்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை நமக்குத் தந்திருப்பதற்காக நான் பெருமைப்படுகிறேன், பாராட்டுகிறேன். அன்பிற்குரியோரே, விலையில்லா அரிசி, ரேஷன் பொருட்கள் மற்றும் ஏழைகளுக்கு கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், மிக்சி, கிரைண்டர், மின் விசிறிகள், மாணவர்களுக்கு மடிக் கணினிகள் வழங்குதல், பெண்கள், முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு உதவி, பெண்களுக்குத் திருமண உதவி, தாலிக்குத் தங்கம், பசுமை வீடுகள் திட்டம், நகர்ப்புற கட்டமைப்புகளை மேம்படுத்தும் திட்டம், போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சி, புதிதாக அமைக்கப்படும்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2012 ஜனவரி 31

சாலைத் திட்டங்கள், தொழில் வளர்ச்சியை மேம்படுத்த புதிய தொழிற்பகுதிகள், மீன் வளத் துறையில் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவித்தல், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஏழை மக்களுக்கு உதவி செய்யும் வகையில் புதிய ஒருங்கிணைந்த காப்பீட்டுத் திட்டம், கிராம மக்கள் அடிப்படை வசதி பெற்றிட தமிழ்நாடு கிராமப்புற குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை வரவேற்கக்கப்படக்கூடியவை.

'தானே' புயலின் நிவாரணப் பணிகளைச் சிறப்பாகச் செய்த தமிழக அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, அதற்காக முதற்கட்டமாக மத்திய அரசு 500 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியாய்த் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலே, நாகப்பட்டினத்திலே, அன்பிற்குரிய எங்களுடைய மத்திய அமைச்சர் சிதம்பரம் அவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். அதுபோல அன்புக்குரிய மத்திய அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்களும் பார்வையிட்டு நிவாரண உதவிகள் செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 2—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? பேசுவது உங்கள் உறுப்பினர்தான்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** திரு ஜி.கே. வாசன் அவர்களும், திரு. ப. சிதம்பரம் அவர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆறுதலையும் தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசிடம் கூறி 500 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். அன்புக்குரிய இடதுசாரி நண்பர்களும், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மத்திய அரசு ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வதை நான் மறுக்கிறேன். ஒன்றாம் கிளாஸ் படிக்காமல் இரண்டாம் கிளாஸ் போக முடியாது. முதல் கட்டமாக 500 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள உதவித் தொகையை நிச்சயமாக மத்திய அரசு கொடுக்கும். அதற்கு நாங்கள் பரிந்துரை செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். எங்களுடைய தலைவர்கள் மத்தியில் கூறி . . . (குறுக்கீடு)



2012 ஜனவரி 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், என்ன point of order? சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றாம் வகுப்பு படிக்காமல் இரண்டாம் வகுப்பு போக முடியாது உண்மைதான். ஆனால் ஒன்றாம் வகுப்பிலே பத்து வருடம் படித்துக் கொண்டிருக்கக் கூடாது! (சிரிப்பு) அது மிகப் பெரிய தவறு. எனவே, மக்கள் பாதிக்கப்பட்டு நிறைய காலம் ஆகிவிட்டது. உடனடியாக நிதியை வழங்கினால்தான் அந்த மக்களுக்கு நிதி போய்ச் சேரும், பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், உங்கள் உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசிய பின்னர் C.P.I. உறுப்பினர் பேசலாம். (குறுக்கீடு) நீங்கள் என்ன கருத்தைச் சொல்ல வருகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலிருந்து ஒன்றை கவனித்துக் கொண்டு வருகிறேன். கிராமங்களிலே கஞ்சி குடிக்கும்போது காரத்திற்காக மிளகாயைக் கடித்துக்கொள்வார்கள். அதைப்போன்று காலையிலிருந்து பேசுபவர்கள் எல்லோருமே மத்திய அரசைத் தாக்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதனாலே, அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். இடைக்கால நிவாரணமாக 500 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கின்றோம். இன்னும் வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உறுப்பினர்களே, அன்போடு நான் வேண்டுவது, மத்திய அரசு, தமிழக அரசோடு அன்பாக இருக்கிறது. தமிழக மக்கள் வாழ வேண்டும் என்று நீங்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும். எங்களுக்குத் தமிழக அரசு வாழக்கூடாது என்று இல்லை. எங்களுடைய விருப்பம் தமிழக அரசு சிறப்பாகச் செயல்பட வேண்டும். எல்லாப் பணிகளிலும் வளர வேண்டும். முதன்மை மாநிலமாகத் தமிழகம் விளங்க

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2012 ஜனவரி 31

வேண்டும் என்பதுதான் காங்கிரசினுடைய விருப்பம். இதை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசை அடிக்கடி குறை சொல்வதில் அர்த்தம் இல்லை.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை சம்பந்தமாக, மத்திய அரசு நல்ல முடிவை எடுத்திருக்கிறது. தமிழக மக்களுடைய வாழ்க்கைக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது.

அடுத்தபடியாக, வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் இன்று கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, மாலத் தீவில் வசிக்கக்கூடியவர்கள் சிறு குற்றங்கள் செய்தால் விசாரணைகூட இல்லாமல் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். மரண தண்டனை கொடுக்கப்படுகிறது. கேட்பதற்கு நாதியில்லை. தாய் நாடு திரும்ப விடாமல் தடை செய்யும் சர்வ சாதாரணமான சூழ்நிலை இருக்கிறது. ஆனால், கேரளாவிலே ஓர் அமைப்பு வைத்திருக்கிறார்கள். வெளிநாடுவாழ் கேரள மக்கள் விவகாரத் துறை என இயங்குகிறது கேரளாவிலே. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் கேரள அரசு உடனடியாக ஈடுபடுகிறது. தமிழர்கள் இன்று பாதிக்கப்படுகிறார்கள். அதைப்போல தமிழர்களுக்கும் வெளிநாடு வாழ் தமிழர்கள் விவகாரத் துறை ஒன்றை அமைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

என்னுடைய சொந்தத் தொகுதி, குளச்சல் மருத்துவமனையில் ஆறு மருத்துவர்கள் வேண்டும். 3 பேர்தான் இருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் வேண்டுகிறேன். நிச்சயமாக 3 மருத்துவர்களையும் போட்டுவிடுங்கள். மருத்துவர்கள் தேவை இருக்கிறது. இதனைக் கோரிக்கையாக வைக்கிறேன். கேரள மாநிலத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தை நாங்கள் தமிழகத்தோடு இணைத்து இருக்கிறோம்.

நீண்டகால ஒரு கோரிக்கை. விடுபட்ட தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டும். ஒரு தியாகி சொல்கிறார், "இந்த அம்மா காலத்திலாவது ஒரு மாத பென்ஷன் வாங்கிவிட்டு செத்துவிடலாம்" என்று சொல்கிறார். அப்படிப்பட்ட ஒரு தேவையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று கோரிக்கையாக வைக்கிறேன். நிச்சயமாக விடுபட்ட தியாகிகளுக்கு, தியாகிகள் பென்ஷன் கிடைக்காதவர்களுக்கு இந்த அரசு நிச்சயமாக



2012 ஜனவரி 31] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

உதவித் தொகை கொடுக்க முன்வர வேண்டும். வருகின்ற நிதி ஆண்டிலே நிச்சயமாக இந்தப் பிரச்சினைக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, விடுபட்ட தியாகிகளுக்கு என்று பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் கூறிக் கொண்டிருக்கிறார். எந்தத் தியாகி விடுபட்டுப் போய் இருக்கிறார் என்ற புள்ளிவிவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவாரேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், please listen to my words. Specific case–ஆக இருக்க வேண்டும். பொத்தாம் பொதுவாகப் பேசக் கூடாது.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் சொன்னதுபோல் ஏதாவது specific case–ஆக இருந்தால் அமைச்சரிடம் கொடுங்கள். He will take action.

*பிற்பகல் 2–25*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** Yes. நன்றி சொல்கிறேன். விடுபட்ட தியாகிகள் என்றால், மொழிப் போர் தியாகிகளாகத் தியாகம் புரிந்து, கன்னியாகுமரி மாவட்டத்தைத் தமிழகத்தோடு இணைத்தவர்கள் ஆவர். அவர்கள் பல உதவித் தொகைகள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று தமிழகத்திற்குப் பெருமளவு வருமானத்தை ஈட்டித் தர வணிக மற்றும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கலன் துறைமுகத்தினை ஏற்கெனவே குளச்சலிலே எங்களுக்குத் தரவேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். நிச்சயமாக அன்புக்குரிய நம்முடைய மாண்புமிகு

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2012 ஜனவரி 31

முதலமைச்சர் அம்மா அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுப்பார்கள், எங்களுக்கு நிச்சயமாகத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மின் பற்றாக்குறைப் பிரச்சினை, பெரிய பிரச்சினையாக இப்பொழுது இருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சி, மின் உற்பத்தி குறைவாக இருப்பதால் பாதிக்கப்படுகிறது. மின் வெட்டுப் பிரச்சினை குறித்து பல்வேறு குறைகளைச் சொன்னார்கள். நான் குறை சொல்ல வரவில்லை. ஆனால் நம்முடைய கூடங்குளம் அணு மின் உலையை இயக்குவதற்கு இந்த அரசு ஆதரவு தெரிவிக்கவேண்டுமென்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு ரூ.19,000 கோடி ரூபாய் செலவு செய்து கட்டியுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தைத் திறக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதைத் திறப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் பிறந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, குளச்சல் தொகுதிக்குட்பட்ட திருநயினார்குறிச்சி ஆகும். மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபொழுது இந்தப் பிரச்சினையை அவையிலே வைத்திருக்கிறார்கள். இது மறைந்து போயிருக்கிறது. யாருமே இதைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. இனி வருகின்ற காலக்கட்டத்தில் திருவள்ளுவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் அவர் எங்கு பிறந்தார் என்பதைத் தெளிவுபடுத்தி பாடப் புத்தகத்தில் ஒரு பாடமாகச் சேர்க்க மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாத் துறை நலிந்துள்ள நிலையில் இருக்கிறது; வருத்தப்படும் நிலையில் இருக்கிறது. அதனால் உண்மையை நான் open–ஆகச் சொல்கிறேன். உலக அளவில் இன்று சிறப்பாக இருக்கக்கூடிய சுற்றுலாத் துறை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், please, உட்காருங்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாத் துறை நலிவடைந்துள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2012 ஜனவரி 31] [திருமதி எஸ். கோகுல இந்திரா]

ஒரு தவறான கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, இப்பொழுது குறுகிய காலத்திலே ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகளே ஆரம்பிக்காத வேலைகளெல்லாம் இப்பொழுது சுற்றுலாப் பயணிகளுக்காக வேகமாக நடைபெற்று வருகின்றன. அதிகமாக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்லக்கூடாது. பொங்கல் விழாகூட கன்னியாகுமரியிலே மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கின்றது. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமோ, இல்லையோ என்று தெரியாது. சுற்றுலாத் துறை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இப்பொழுதுதான் எங்கு பார்த்தாலும் எல்லா மாவட்டங்களிலும் சுற்றுலாத் துறை சார்பாக அதிகமான பணிகள் முடுக்கிவிடப்பட்டு, ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், வேறு ஒரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு பேசுவதற்கு வாய்ப்புத் தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். கடலூர் மாவட்டத்தில் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து குடிசை வீடுகளுக்குப் பதிலாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்று தமிழக அரசு ஆளுநர் உரையில் அறிவித்திருப்பதைப் பாராட்டுகின்றோம்; வரவேற்கின்றோம். ஆனால், ஒரு இலட்சம் வீடுகளை மட்டும் கட்டித் தருவது போதுமானது அல்ல. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு 2 இலட்சம் வீடுகள் பாதிப்புக்குள்ளாகியிருக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அனைத்து வீடுகளையும் கட்டித் தரவேண்டுமென அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

*பிற்பகல் 2–30*

அதேநேரத்தில் ஒரு வீட்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை போதுமானதாக இருக்காது என்று கருதுகின்றோம். இத்தொகையை ரூ.2 இலட்சமாக உயர்த்தி ஒதுக்கி நல்ல வீடுகளைக் கட்டித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம், ஒரு மாதத்திற்குப் பிறகும், இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. தமிழகத்தை வழக்கமாகத் தாக்கும் புயல்களால் ஏற்படும் பாதிப்புக்கும், 'தானே' புயல் தாக்கியதால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. அதனால் வாழை, கரும்பு, நெல் போன்ற பயிர்கள் சேதம் அடைந்துள்ளன. நெற்பயிர்கள் சேதம் அடைந்தால், அதன் பாதிப்பு 3 அல்லது 4 மாதங்களில் தீர்ந்துவிடும். கரும்பு, வாழையும் சேதம் அடைந்தால் அதனால் ஏற்பட்ட பாதிப்பை ஓராண்டில் சரி செய்துவிடலாம். ஆனால், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் முற்றிலும் வேறுபட்டவை. இந்த மாவட்டங்களில் 50 ஆண்டுகளைக் கடந்த முந்திரி, பலா மரங்கள் புயலால் சாய்ந்துவிட்டன. இவற்றை மீண்டும் நட்டு அவை பலன் தருவதற்கு குறைந்தது 8 முதல் 10 ஆண்டுகள் ஆகும். அதுவரை முந்திரி மற்றும் பலா மரங்களைத் தங்களின் வாழ்வாதாரமாகக் கருதுகின்ற உழவர்களுக்கு வருமானம் கிடைக்காது. இதை அரசு கவனத்தில் கொண்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பலா, முந்திரி போன்ற தோட்டப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் 3,600 வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு ஏக்கர் முந்திரி தோட்டத்தில் சாய்ந்து கிடக்கும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கே 15,000 ரூபாய்வரை செலவாகும். அவ்வாறு இருக்கும்போது தமிழக அரசு அறிவித்துள்ள இழப்பீடு போதுமானதல்ல. சேதம் அடைந்த பயிர்களை மீண்டும் வளர்த்தெடுப்பதற்கும் ஓராண்டு ஆகும். செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விவசாயப் பணிகள் செய்ய அனுமதிக்கப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





தமிழ்நாட்டை சுனாமி தாக்கியபோது பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பவில்லை என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைப் பொத்தாம்பொதுவாக வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 3–1–2012 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, முதல் கட்டமாக 4 ஆம் தேதி கடலூர் மாவட்டத்திற்கு வருகைதந்து அவர்களுடைய திருக்கரங்களால் நிவாரண உதவி வழங்கப்பட்டு, 15 அமைச்சர்களை நியமனம் செய்து, ஒன்றியம் வாரியாக, நகர வாரியாக அமைச்சர் பெருமக்களை நியமனம் செய்து நிவாரணப் பணிகளை முழுமையாக மேற்கொண்டதன் அடிப்படையில் குடிசை வீடுகள், ஓட்டு வீடுகள் 4 இலட்சத்து 6 ஆயிரத்து 657 வீடுகளுக்கு 115 கோடி ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு அடுத்தகட்டமாக, இரண்டாவது கட்டமாக ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 823 வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு, 70 ஆயிரம் வீடுகளுக்கு ரூபாய் 2,000 என வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்தகட்டமாக அனைத்துக் குடியிருப்புகளுக்கும், 7 இலட்சத்து 9 ஆயிரத்து 350 வீடுகளுக்கும் பொங்கலுக்கு முன்பாக, கிட்டத்தட்ட 45 ஆயிரம் மின் கம்பங்கள் நடப்பட்டு, வீட்டு உபயோகங்களுக்கான மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு அடுத்தகட்டமாக மின் மோட்டார்கள். விவசாயிகளுடைய மின் இணைப்புகள் 69 ஆயிரத்து 783 மின் மோட்டார்களுக்கான இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றுவரை 69 ஆயிரம் விவசாய மின் மோட்டார்கள் மற்றும் விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு, இயல்பு நிலை முழுமையாகத் திரும்பியுள்ளது என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அதற்கு அடுத்தகட்டமாக, ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 532 ஹெக்டேர் மொத்த நெல் சாகுபடியில் 92 ஆயிரத்து

[திரு. எம்.சி. சம்பத்] [2012 ஜனவரி 31

628 ஹெக்டேர் நெற்பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. அதில் ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 631 விவசாயிகள் இருக்கின்றார்கள். மொத்தமாக சவுக்கு சாகுபடியில் 6 ஆயிரத்து 500 ஹெக்டேருக்கு, தோட்டக்கலையில் முந்திரி, மா, பலா சாகுபடியைப் பொறுத்தவரையில். 38 ஆயிரத்து 156 ஹெக்டேரில், முந்திரி சாகுபடியில் 33 ஆயிரத்து 634 ஹெக்டருக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் 120 கோடியே 16 இலட்சம் ரூபாய் நிவாரண உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். புயல் வேகத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'தானே' புயலைத் தவிடு பொடியாக்கியவர் தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா என்பதை நாங்கள் ஆணித்தரமாகக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அடுத்தகட்டமாக 4 ஆம் தேதி தமிழக முதலமைச்சருடைய நீண்ட பதிலுரையின்கீழ், மனம் மகிழ்ச்சி அளிக்கின்ற வகையில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் நிறைவடைகின்ற வகையில் குறிப்பாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த முந்திரிப் பயிர் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கின்றவகையில் அந்த பதிலுரை இருக்கும் என்பதை அவையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்.

பிற்பகல் 2–35

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** கடலூர் மாவட்ட மக்கள் கூட்டுறவு வங்கியிலும், பொதுத் துறை வங்கிகளிலும் பெற்றக் கடனை தமிழக அரசு இரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் கல்விக் கட்டணத்தை அடியோடு இரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.



2012 ஜனவரி 31] [திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்]

அதேநேரத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுடைய பதிலுரையின்போது இந்த மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்கின்ற வகையில் நல்ல திட்டங்களையெல்லாம் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அனைத்து மாநிலங்களுக்கும் ஒரேமாதிரியான திட்டங்களைத் தயாரித்து மத்திய அரசு திணிப்பது முறையல்ல என்றும், மாநில அரசுகள் அவற்றின் தேவைக்கேற்ப திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுவதற்கு சுதந்திரம் வேண்டுமென்றும் ஆளுநர் உரையில் வலியுறுத்தப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம்.

தமிழ்நாட்டில் நடப்பாண்டில் உணவு உற்பத்தி, கடந்த ஆண்டைவிட சுமார் 33 விழுக்காடு அதிகரித்து ஒரு கோடி டன் என்ற அளவைத் தாண்டும் என அரசு கூறியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதனால் விவசாயிகளின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் என்றும் நம்பலாம்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படும் என்று உறுதி அளித்திருந்தும், நமது முதலமைச்சர் அவர்கள் தற்பொழுது லாரி வாடகையுடன் சேர்த்து 2,800 ரூபாய் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்கள். இது போதுமானது அல்ல. தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவாறு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2,500 வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், மூன்று மாதங்களில் மின் தட்டுப்பாடு போக்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். ஆனால், தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அறிவிக்கப்பட்ட மின்வெட்டு தொடருகிறது. அறிவிக்கப்படாத மின்வெட்டும் தொடருகிறது. இதனால் தொழிற்சாலைகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசின் தொகுப்பிலிருந்து மின்சாரத்தை வாங்கியாவது மின் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 4,704 மெகா வாட் அளவுக்குக் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் கூடுதலாக எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்பதுபற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. அப்படியானால், இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மின்வெட்டு தொடருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். 2012–2013 முதல் மின்வெட்டு இருக்காது என்று அறிவித்திருக்கிறோமே தவிர, அதுவரை மின்வெட்டு தொடரும் என்று சொல்லவில்லை. இருக்கின்ற மின்வெட்டு படிப்படியாக, இந்த ஜூன் மாதத்திற்குப் பிறகு, ஜூன் மாதம் சற்று குறையும், ஆகஸ்டு மாதம் சற்று குறையும், டிசம்பர் மாதத்திலே சற்று குறையும். அப்படி ஜூன் மாதத்திலிருந்து படிப்படியாக மின்வெட்டு தளர்த்தப்பட்டு, இறுதியாக 2013 ஆம் வருடத்திற்குள் முழுவதுமாக மின்சாரம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் தமிழக அரசு கடைப்பிடித்துவரும் நடவடிக்கை பாராட்டத்தக்கது. முல்லைப் பெரியாறு பிரச்சினை தொடர்பாக கேரள அரசுடன் எந்தவித பேச்சும் நடத்தப்படாது என்றும், நீதிமன்றத்தின்மூலமாக உரிமை நிலைநிறுத்தப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை மீண்டும் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பா.ம.க. உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேநேரத்தில், 29–1–2012 அன்று ‘தின மலர்’ என்ற ஒரு நாளேடு மிகப் பெரும்பான்மை சமூகமான வன்னியர் சமுதாயத்தைக் கொச்சைப்படுத்துகின்ற வகையிலும், கேவலப்படுத்துகின்ற வகையிலும் ‘குற்றப் பரம்பரை’ என்றும் ‘இவர்கள் கண்டிக்கத்தக்கவர்கள்’ என்றும் சாதிக் கலவரத்தைத் தூண்டுகின்ற வகையிலும் செய்தி வெளியிட்டுள்ளது. இதுபோன்ற பத்திரிகைகள், பத்திரிகை தர்மத்தை மறந்து தனிப்பட்ட சமூகத்தைப் புண்படுத்துகின்ற வகையில் வெளியிடுகின்ற தகவலை, பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக இந்த அரசுக்குத் தெரிவித்து, இதுபோன்ற பத்திரிகைகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1–2–2012) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் இரண்டாம் உறுப்பினரின் வேற்றுப் பணிக் காலத்தினை நீட்டிப்பு செய்தது குறித்து 25–5–2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு(இ2)த் துறையின் அரசாணை (3டி) எண் 9–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல்

*உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து 13–6–2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு(இ2)த் துறையின் அரசாணை (2டி) எண் 92–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*3. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*4. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*5. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)*

*2. 2012 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*





### இணைப்பு

(*53 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

Hon'ble Members of the Legislative Assembly,

Vanakkam.

It gives me immense pleasure to address the Assembly for the first time after taking over as the Governor of Tamil Nadu. At the outset I wish to convey my New Year and Pongal greetings to all members. The State has witnessed a stupendous performance of the new Government with the launching of a multitude of schemes and programmes aimed at the welfare and development of the State under the able leadership of the Hon'ble Chief Minister, Selvi J Jayalalithaa, who is always decisive in her deeds. The resolve and commitment of our Hon'ble Chief Minister in implementing the greater part of her electoral promises in such a short period, even in the face of a crippling financial crisis, is commendable. I am glad to note that these programmes have started showing results on the ground by improving the life of the common people.

2. Let me congratulate the people of Tamil Nadu for demonstrating their political wisdom and once again reposing their unshakable faith in the leadership of the Hon'ble Chief Minister in the recently held Local Body elections. The political maturity displayed by the electorate and the commitment shown by the Government in conducting this election in a most fair and peaceful manner will further strengthen the grass root democratic institutions. The vibrant functioning of this tier will nurture the young and committed elected representatives of these institutions to emerge as the leaders of the future. This Government will take further steps to strengthen the Local Bodies based on the recommendations of the Fourth State Finance Commission and an Action Taken Report will be tabled in the Assembly in the next session.

3. This Government is leaving no stone unturned to make Tamil Nadu the *numero uno* State in India in all facets of socio economic development. The strategy has been to revitalize the development process to create a conducive environment for higher growth and to implement welfare schemes to bring in the element of equity in economic wellbeing for the poor and downtrodden. As you know, this Government has substantially increased benefits

under various welfare schemes and has provided rice, free of cost, for the first time in the country to ensure food and social security to the needy. Besides this, several flagship programmes like distribution of milch cows, sheep and goats to poor households, and mixies, grinders and fans to all families eligible to draw rice from the Public Distribution System and laptop computers to students have been launched. In fact, I am proud to state that this Government has been able to allocate an unprecedented additional outlay of around Rs.8,000 crores for these schemes in spite of the gloomy financial situation faced by the present Government while taking charge.

4. We are fully aware that governmental support and subsidies are no substitute for an inclusive and sustainable growth process. In this regard, our Government is assiduously working to break the present impasse and stagnation in the Primary Sector, which continues to be the prime source of livelihood for the majority of the poor. In addition, the focused mission mode approach for improving urban infrastructure and strengthening the economic infrastructure to address the critical gaps in achieving higher growth will continue as a thrust area in our future strategy. Now that numerous welfare and developmental schemes have been launched and targets set, the focus of this Government will shift to effective implementation of the plethora of schemes in order to get better results and deliver better services to the people of the State and to exemplify transparent and efficient administration in the Country.

5. This Government is committed to maintaining cordial relationships with all our neighbouring States. Unfortunately, being a lower riparian State, Tamil Nadu has often been the victim of false and parochial campaigns launched with short sighted political interests and the persistent indifference of the Union Government. Our State has shown utmost restraint and ably handled the recent incidents relating to the Mullai Periyar Dam. The attempts on the part of the Kerala State to whip up mass fear and insecurity through false propaganda have been the primary cause of these incidents. Tamil Nadu is all for ensuring the safety of the dam and



I earnestly appeal to the people of Kerala not to succumb to such malicious campaigns. I want to categorically state that this Government would never compromise on the rights of our State and the livelihood of our farmers and will defend our rights in all appropriate fora and courts of law. We also urge the Government of India to direct the Government of Kerala to abide by the decision of the Supreme Court. As several inter-state river water disputes remain unresolved for many years, the time has come for a rethink on the present institutional framework. At this crucial juncture, we urge the Central Government that the proposed Dam Safety Bill, 2010, should ensure for entrusting the safety of dams to the Dam Safety Cell of the State owning the dam, instead of the State where it is situated.

6. The fire accident that occurred on the midnight of 15th January, 2012 in the Chepauk building complex has led to the death of a fireman and resulted in grievous injury to officers who gallantly fought the fire. I express my heartfelt condolences to the bereaved family of the fireman and wish the injured officers a speedy recovery. I appreciate the Government for awarding these three officers with Anna Medal for Gallantry 2012. An expert committee has been constituted to study all the heritage buildings housing Government offices and assess the structural stability of such buildings to avert such disasters in future and ensure safety of the persons working in such premises.

7. From the day of assuming office, this Government has taken firm action against anti-social elements. Its resolve to show zero tolerance to law and order problems has helped the State to restore peace and tranquillity again after a gap of five years. The peaceful conduct of the Local Body elections has been acclaimed by all sections of Society and the media. Many festivals which were considered sensitive have passed off peacefully. The Anti Land Grabbing Cells established in every district by this Government have benefited innumerable poor innocent people who were coerced into selling their lands and their lands have been restored to them. I reassert this Government’s continued commitment to bringing such land grabbers exploiting the poor and gullible to justice.

8. The impact of the prolonged spell of global economic slowdown poses a real threat to fiscal stability and the Government's ability to spend more. Slow growth, persistently high inflation, depreciating rupee value and soaring interest rates have made it difficult for achieving our higher growth targets. As a result, investments are slowing down and the growth projections for 2011-2012 have been considerably scaled down at the national level. The negative impact of such economic slow down on the State's economy is inescapable. Notwithstanding these negativities, this Government is determined to ensure that spending by Government towards infrastructure and social security is not compromised in any manner. For the ensuing Twelfth Plan, this Government plans an ambitious outlay of Rs.1,85,000 crores for plan schemes, more than double the size of the Eleventh Plan outlay of Rs.85,000 crores. This would put Tamil Nadu back on the path of accelerated growth.

9. The continued attempts by the Union Government to push through legislations encroaching upon State powers and the adoption of a one-size-fits-all approach in designing schemes do not augur well for a healthy Centre-State relationship. Also, this Government urges the Union Government to adopt a flexible approach in formulating and implementing national schemes by fixing only the broad objectives and framework, while allowing the State Governments to have the freedom of designing the schemes to meet the State's specific needs by dovetailing Central funds with the State's resources providing better synergy and focusing on achieving intended goals. We would continue to impress upon the Union Government the need to adequately address the issues pointed out by our State regarding the implementation of Goods and Services Tax.

10. This Government is taking all efforts for the promotion of the Tamil language and to preserve the cultural heritage of Tamils. We will continue to insist that the Union Government should recognise Tamil as one of the Official Languages of the Central Government. The pension for aged Tamil Scholars has been doubled from Rs.1,000/- to Rs. 2,000/- per month by the Hon'ble Chief



Minister. As already promised in the earlier Governor's address, Thirukkural and selected works of Bharathiyar and Bharathidasan are being translated into Mandarin and Arabic. This Government has uploaded 1,472 nationalised books of eminent Tamil Scholars in the website of the Tamil Virtual University to preserve and promote their literary works.

11. Hon'ble Members may recall the announcement made on the preparation of the 'Vision 2025' document when this Government assumed charge last year. Now, I am glad to inform you that this Vision 2025 document will be released shortly by our Hon'ble Chief Minister, setting the tone for this Government's vision for the State and the plan of action towards achieving it. A Bill will be introduced during the coming Budget Session for the formation of the Tamil Nadu Infrastructure Development Board, which will serve as an institutional framework for conceptualisation, prioritisation, sanction and speedy implementation of critical infrastructure projects. A separate Infrastructure Development Fund will be constituted by this Government to give a fillip to implementation of critical projects. In this direction, this Government will also come out with a new Public Private Partnership Policy to synergise the resources of the Government and the Private Sector in project implementation.

12. This Government has taken all steps to mitigate the sufferings of the people due to the devastating impact of the cyclone 'Thane' and the prolonged spell of rain in November 2011. Unfortunately, during the recent North-East monsoon, 177 lives have been lost. I convey my condolences to these families. The Hon'ble Chief Minister had ordered in November, 2011 a release of Rs.150 crores for immediate restoration of the damaged roads affected by the floods. As the damage caused by cyclone 'Thane' to the crops, huts, boats and other infrastructure in districts like Cuddalore and Villupuram was very extensive, the Hon'ble Chief Minister sanctioned an amount of Rs. 850 crores to carry out relief measures, disburse compensation and restore the damaged infrastructure including power, drinking water and roads. I appreciate the State Government for using the early warning systems to initiate preventive measures and for taking timely action for providing relief.

It may not be out of place to mention here that, due to sustained intensive relief work, normalcy could be restored to a very large extent in a month's time, whereas it would normally take several months to achieve such results.

13. As the livelihood of the farmers has been totally destroyed due to complete damage of perennial crops like cashew, jackfruit, coconut etc., now the Government is also focusing on permanent rehabilitation measures. As a special gesture, apart from extending immediate relief for crop loss, the Hon'ble Chief Minister has ordered taking up of the replantation of perennial crops particularly cashew-nut crop with grafted seedlings under high density planting by meeting the entire cost of planting and maintenance for one year, and distribution of mini-kits with seeds and other essential inputs for taking up recultivation of annual crops in the affected fields. I am also glad to announce that this Government will take up the construction of one lakh concrete houses immediately at a cost of Rs.1,000 crores specially to replace the damaged huts in the cyclone affected districts like Cuddalore and Villupuram, to provide safe shelter to the affected families. A detailed memorandum spelling out the quantum of damage and requesting a special package of assistance for Rs.5,248 crores from the National Disaster Response Fund has been submitted to the Union Government and I thank the Central Government for releasing Rs.500 crores as interim relief. The Central team had also visited the affected areas and I hope, the Government of India will respond positively to our Memorandum with adequate financial support.

14. Poverty and unemployment are the twin challenges to our Society. Decades of efforts in implementing several anti-poverty programmes have not yielded the desired results. Though there has been some reduction in rural poverty, the solution to urban poverty still remains elusive. Hence a paradigm shift is needed in our approach towards poverty reduction, incorporating innovative family based intervention. Our efforts to mitigate rural poverty through dovetailing of



various schemes like the National Rural Livelihood Mission and Pudhu Vazhvu project with State sector schemes will continue. Considering the high incidence of urban poverty, a comprehensive programme will be launched to deal with it in the forthcoming Budget as it did not get adequate attention in the past.

15. The issue of poverty is intricately linked to unemployment. This Government has already spelt out a two pronged strategy of imparting skills to make youth employable, while simultaneously focusing on entrepreneurship development to promote new ventures to generate employment. To ensure the effectiveness of the Skill Development Mission, this Government has decided to integrate various skill building programmes implemented by different departments. We will bring in a centralized system of selecting and monitoring skill upgradation courses and institutions besides tracking the trainees till they get employed. The Tamil Nadu State Skill Development Mission Society under the guidance of the State Skill Development Mission will be the nodal agency for this purpose. This would ensure a common standard framework of programmes and fee structures, which the beneficiary departments can utilize without any overlapping or duplication of efforts or wastage of resources.

16. Inclusive growth is possible only if growth in the Primary Sector is achieved. Keeping this in mind, this Government is taking all efforts to usher in a Second Green Revolution for improving farm productivity and farmers income. This requires sustained investment in the Farm Sector for better capital formation. Convergence of the National Agriculture Development Programme with State sponsored programmes for farm mechanisation, 100% subsidy to small and marginal farmers for adopting micro irrigation, strengthening the network of godowns and warehouses and focusing on the market infrastructure have given a new lease of life to the Farm Sector. Due to the decision taken by the Hon'ble Chief Minister to release water from Mettur Dam early, the State has had a bountiful kuruvai crop. As a result, food grain production this

year is likely to surpass the level of 100 lakh metric tonnes for the first time as against 75.95 lakh tonnes in 2010-2011. This Government's flagship scheme of free distribution of milch cows, sheep and goats has received a remarkable response from the rural poor. During 2011-2012, about 1.12 lakh families would benefit from these schemes. This Government has simultaneously strengthened the extension services and the veterinary infrastructure to support growth in the Animal Husbandry Sector.

17. In the Fisheries Sector also, many path breaking initiatives have been taken to promote deep sea fishing and improve infrastructure. I am sure all these initiatives will give a substantial boost to the Primary Sector. This Government is deeply concerned about the continuing attacks on and harassment of fishermen of Tamil Nadu by the Sri Lankan Navy. Despite our protests, such incidents are being repeated. I urge the Government of India to take up this issue strongly with Sri Lanka. All efforts must be taken to protect the traditional fishing rights of our Tamil Nadu fishermen in the Palk Bay area and ensure their safety and security. I also take this opportunity to reiterate this Government's clear resolve to regain Katccha Theevu so as to restore the lost rights of our fishermen.

18.Tamil Nadu has the best functioning universal Public Distribution System in the country. This Government has further strengthened it by providing rice free of cost to all the rice card holders and by supplying pulses, edible oil and fortified atta at subsidised rates. The Union Government's Food Security Bill compromises universal access and deprives the State Government of the present allotment of food grains from the Central Pool. Hence, we will voice our opposition to the Food Security Bill in its present form as proposed by the Union Government. This Bill, primarily aimed at States where the Public Distribution system is non-functional, would have a definite negative impact on Tamil Nadu's Universal Public Distribution System. Hence, this Government insists that the Food Security Bill proposed by the Central Government needs drastic modifications, incorporating provisions for providing flexibility to the State Governments or for exempting those States



which already have a well functioning system from the application of the Act.

19.This Government is in the process of formulating a comprehensive new Industrial Policy and sector specific policies on the key and emerging sectors to promote industrial growth. We will strengthen the infrastructure along the potential industrial corridors to promote the speedy growth of industrial clusters and achieve a balanced industrial development. In the fast growing Information Technology Enabled Services (ITES) sector also, Tamil Nadu needs to reinforce its dominant position in software exports by taking the lead as India's hardware hub. In this regard, we will constitute an Expert Committee with representatives from Industry, to evaluate the potential and advise the Government on the way forward to attract more investments in hardware manufacturing.

20. As assured by the Hon'ble Chief Minister, this Government is taking all efforts to revive Common Effluent Treatment Plants (CETP) so as to solve the issue of effluents discharge into the Noyyal River. Based on the trial studies taken up to introduce an alternative Nano Filtration Technology to achieve zero liquid discharge in the Arulpuram CETP, this Government has already sanctioned Rs.179 crores as interest free loan to restart these closed CETPs. In addition, Rs.75 crores has also been provided as loan to the Pollution Control Board for settling the compensation to the farmers in the Noyyal Ayacut pending determination of compensation by the Court. The intervention of the Hon'ble Chief Minister in this regard has been well appreciated by all the concerned industrialists as well as farmers and has given them the confidence that this vexed problem has come to an end leading to a new lease of life for thousands of workers.

21. In spite of the best efforts of this Government, the power scenario in the State continues to be a matter of concern. The non-addition of generating capacity by the

previous government and the lackadaisical response from the Centre to our request for additional allotment of power from the Central Pool have put the people of Tamil Nadu in a state of fix. In order to revive the sinking power utilities from the financial mess, this Government has provided Rs.2,600 crores as share capital support and Rs.955 crores as loan. This Government is making all out efforts to improve the energy availability and reduce the power shortage. Since this Government assumed charge, a capacity addition of 30 Megawatts under State Sector and a share of 113 Megawatts from Central Generating Stations have been made in the State in addition to 556 Megawatts of wind energy. New projects with a total capacity of 4,704 Megawatts are to be commissioned in the next two years.

22. Quality road infrastructure is essential for ensuring balanced development. This Government will give priority to upgrading the quality of the core road network, creation of bypasses and widening and strengthening of State Highways, Major District Roads and Other District Roads to improve transportation efficiency. A Land Pooling System will be followed in green field road projects to enhance the benefits to land owners. As already assured in the Budget 2011-2012, a Performance Based Maintenance Contract System will be put in place on a pilot basis in Coimbatore Circle shortly and it will be scaled up throughout the State in due course.

23. This Government has notified the rules for implementing the Right To Education Act, and is committed to ensuring its implementation. Since this Government's assumption of office, schools in the State have been provided with additional infrastructure such as new classrooms and laboratory buildings. To address the problem of inadequacy of teaching staff, 33,681 posts of teachers along with 16,549 part-time teachers and 5,000 posts of non teaching staff have been sanctioned during the current year. To reduce the burden of students and to ease the process of learning, it has been decided to





introduce the Trimester system upto 8$^{th}$ Standard in all schools from the academic year 2012-2013. I hope this Government's all out efforts will improve the quality of education, usher in universal access to secondary education, imparting higher levels of competency and skills to the students.

24. A number of initiatives have been taken by this Government to provide world class higher education and to make it accessible to all. Eleven Arts and Science colleges have been opened in a short span of time. New courses are being started in 34 Government colleges. The unviable Anna Universities of Technology which were created in various places by the previous Government have again been brought under a single entity, making Anna University the largest Technical University in the country. We have embarked on a massive programme to scale up the computing skills of the students through distribution of free laptop computers. I am confident that this much acclaimed programme will add to the quality of human resources of our State. On the issue of Common Entrance Examination for professional courses like engineering and medicine, we will continue to oppose this move by the Centre as it will be detrimental to the interests of our students.

25. A new Comprehensive Health Insurance Programme covering over 1.34 crore families in the State has been launched by the Hon'ble Chief Minister on 11$^{th}$ January 2012. This scheme, with an enhanced coverage, will provide the much needed support to the poor for getting specialised treatment. With the objective of further reducing Maternal Mortality Rate (MMR) and Infant Mortality Rate (IMR), Comprehensive Emergency Obstetric Care has been strengthened and 41 Neonatal Intensive Care Units have been established. In addition, this Government has enhanced the maternity benefit to poor mothers to Rs.12,000/-, the highest in the country. Tamil Nadu is undertaking a comprehensive drive to build awareness about the increasing threat of non-communicable diseases and also to screen and diagnose

them at early stages. We expect that these measures will ensure that this Government achieves its objective of universal health care in the State effectively.

26. This Government has taken several initiatives for improving public transportation facilities. During 2011-2012, 3,000 new buses are being purchased at a total cost of Rs.539.83 crores. Further, for the first time ever, Rs.97.58 crores has been sanctioned for rebuilding 1,432 old buses, in which the engines and chassis are in good condition. I hope these new initiatives will improve the performance of the Transport Corporations and help them deliver better service to the people. Towards the goal of achieving an Integrated Multi-Modal Urban Transportation System in Chennai, I am happy to note that the process of tendering to establish a Monorail system is progressing well.

27. The District Innovation Fund will be used in all districts for making the Government's service delivery more citizen centric by dovetailing the efforts and contributions of the Private Sector. The scheme of fast track patta transfer launched by this Government has yielded significant results. Patta transfers have gone up by 50% compared to the previous year. The Chief Minister's 'Uzhavar Paadhukaappu Thittam' was launched on 10$^{th}$ September, 2011. This provides comprehensive social security to the families of farmers and agricultural labourers from birth to death.

28. This Government had announced in the last Budget a sum of Rs.5 crores for undertaking a mass campaign for clearing the accumulated plastic waste throughout the State and another Rs.50 crores for laying Black Topped roads using plastic waste on an experimental basis. It is heartening to note that about 146 kms of roads are being taken up using plastic waste at an estimated cost of Rs.50 crores. We will come out with a detailed programme for laying such durable roads on a large scale, thereby arresting environmental degradation due to the accumulation of plastic waste.



29. Tamil Nadu is endowed with diverse resources for attracting multi destination tourists. This Government will endeavour to provide world class services to domestic and international tourists. In this direction, the Inclusive Tourism Infrastructure Project funded by the Asian Development Bank will be launched shortly. The policy of promoting tourism in the State under Public Private Partnership (PPP) will gain momentum in the coming years.

30. Tamil Nadu, being a highly urbanised State, needs substantial improvement in planning and investment to improve urban infrastructure. The existing infrastructure is very inadequate and already under severe stress due to heavy migration. This is being addressed through the convergence of various programmes like Jawaharlal Nehru National Urban Renewal Mission (JNNURM) and Tamil Nadu Urban Development Project-III (TNUDP III). Chennai Corporation has been expanded by merging the adjoining suburban areas. Similarly, the boundaries of seven other Corporations and eight Municipalities have also undergone changes. This Government has also launched the Chennai Mega City Development Mission and Integrated Urban Development Mission to provide additional resources for implementing urban infrastructure projects. We will continue to focus on Solid Waste Management in an integrated manner besides improving other public amenities like roads, streets and parks. The preparation of master plans in the expanded municipal corporations and municipalities where such plans are not available will be carried out to ensure balanced and sustainable growth in our urban areas.

31. This Government is adopting a habitation based approach for providing basic amenities and infrastructure facilities in the rural areas. As you are all aware, the Tamil Nadu Village Habitation Improvement (THAI) Scheme has been launched in the State. This scheme will cover all the habitations in five years.

During the year 2011-2012, 2,020 village panchayats with 25,335 habitations are being covered wherein the basic amenities like roads, drinking water, street lights, etc., will be provided. Under the direction of the Hon'ble Chief Minister, a massive campaign was launched to revive all the Sanitary Complexes constructed in the past by refurbishing the facilities. In rural housing, besides IAY, the Chief Minister's Solar Powered Green House Scheme to construct 60,000 new houses per year is also under progress. Through these schemes, this Government is confident of providing adequate basic amenities and safe housing to all the rural poor.

32. This Government has taken several pioneering initiatives for the welfare of the weaker sections of our Society – women, children, aged, destitute and differently abled persons. The path breaking move to enhance the assistance and to distribute gold coins to make *Thali* for the marriage of poor girls; infusing life back into the Girl Child Protection Scheme and the Cradle Baby Scheme; doubling the Social Security Pension taking it to the highest level in the country; opening of Integrated Homes for orphans and the aged in all districts stand testimony to the care and compassion shown by our Hon'ble Chief Minister towards the weak and vulnerable. As never done before in the history of any State, sanction has been accorded for bringing 5 lakh new beneficiaries under the social security net and the distribution is also being streamlined through direct transfer to the bank accounts of the beneficiaries, thereby plugging the leakages. I am sure that these efforts will ensure that our State has the best and most comprehensive Social Security Support System for the disadvantaged and marginalised.

33. Several programmes are being implemented for the welfare of the socially and economically backward classes like Adi-Dravidars, Backward Classes, Most Backward Classes, Denotified communities and the Tribals. The historic efforts of the Hon'ble Chief Minister to establish social justice by enacting



an Act 45 of 1994 and getting it included in the 9$^{th}$ Schedule of the Constitution in 1994 by a Constitutional Amendment passed by both Houses of Parliament, and issuance of a Government Order in the year 2011 to protect the reservation for the backward and most backward classes will be cherished by all. A substantial increase has been given to the feeding charges for students belonging to socially and economically disadvantaged groups staying in Government hostels. The Hon'ble Chief Minister also took a characteristically bold decision to construct own buildings for all the hostels which are at present housed in rented premises. The welfare of the poor and downtrodden will occupy continued primacy in the agenda of this Government.

34. This Government is fully aware of the immense responsibility placed on its shoulders by the people of Tamil Nadu, through their sweeping mandate in the Assembly election. The yearning of the people for a changeover from a legacy of corruption and inefficiency to one with transparency and efficiency has been further demonstrated in the Local Body elections. Our Hon'ble Chief Minister has, in this short period, amply demonstrated that the faith the people of Tamil Nadu have in her and her Government stand vindicated. Against all odds – a precarious fiscal situation, a gloomy economic environment and an unhelpful Union Government-this Government will continue to march on its way towards the goal of uplifting the State and its people. In this, I seek cooperation from all of you and the people of Tamil Nadu in our efforts to put the State back on the road to prosperity. With the Hon'ble Chief Minister at the helm, I have no doubt that these efforts will definitely fructify and Tamil Nadu will usher in a new era of transparency, efficiency and prosperity.

Nanri. Vanakkam. Jai Hind

[2012 ஜனவரி 31

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே,

வணக்கம்.

தமிழ்நாட்டின் ஆளுநராகப் பொறுப்பேற்று, முதன்முறையாக இப்பேரவையில் உரையாற்றுவதை எண்ணி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் வாழ்த்துக்களையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். திடமான முடிவுகளைத் துணிச்சலுடன் மேற்கொள்ளவல்ல மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் திறமைமிக்க தலைமையின் கீழ், மாநிலத்தின் நலனையும், வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டு எண்ணற்ற நலத் திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் துவக்கி, செயல்படும் இந்த அரசின் மூலம் மகத்தான செயலாக்கத்தை நமது மாநிலம் கண்டுள்ளது. கடுமையான நிதி நெருக்கடி இருப்பினும் இக்குறுகிய காலத்தில் பெரும்பாலான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள உறுதியும், அர்ப்பணிப்பும் பாராட்டுதலுக்குரியது. இத்திட்டங்கள் பொது மக்களைச் சென்றடைந்து அவர்தம் வாழ்வில் நல்ல பலன்களை ஏற்படுத்தி வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

2. அண்மையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில், தமது ஆழ்ந்த அரசியல் அறிவை வெளிப்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை நிலைநாட்டியதற்காக தமிழக மக்களைப் பாராட்டுகின்றேன். வாக்காளர்களின் இந்த அரசியல் முதிர்ச்சியும், நேர்மையான மற்றும் அமைதியான முறையில் தேர்தலை நடத்த இந்த அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளும் அடித்தளத்தில் உள்ள மக்களாட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்த உதவும். உள்ளாட்சி அமைப்புகளின் துடிப்பான செயல்பாடுகள் அந்த அமைப்புகளுக்கு மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களையும், இளம் பெண்களையும் திறமையும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்ட எதிர்காலத் தலைவர்களாக உருவாக வழிவகுக்கும். உள்ளாட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்த நான்காவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி இந்த அரசு நடவடிக்கைகளை



2012 ஜனவரி 31]

மேற்கொள்வதுடன், அது குறித்த செயல் அறிக்கை சட்டப் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் வைக்கப்படும்.

3. சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான அனைத்து குறியீடுகளிலும், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு எடுத்து வருகிறது. வளர்ச்சிப் பணிகளுக்குப் புத்துயிரூட்டி, அதிகப் பொருளாதார வளர்ச்சியை அடையத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கும் உத்தியோடு, ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும் பொருளாதார மேம்பாட்டில் சம வாய்ப்பு பெறும் வகையில் நலத்திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உதவிகள் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளதையும், ஏழை எளியவர்களின் உணவு மற்றும் சமூகப் பாதுகாப்புகளை உறுதி செய்யும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருவதையும் நீங்கள் அறிவீர்கள். இது தவிர, இந்த அரசின் எண்ணற்ற முன்னோடித் திட்டங்களான ஏழைக் குடும்பங்களுக்குக் கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்குதல்; பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறத் தகுதியுடைய குடும்பங்களுக்கு மிக்சி, கிரைண்டர், மின்விசிறிகள் வழங்குதல்; மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் போன்றவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பதவியேற்றபோது இருந்த மோசமான நிதி நிலைமையிலும், முன் எப்போதும் இல்லாத அளவாக 8,000 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதி பல்வேறு புதிய நலத் திட்டங்களுக்காக இந்த அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. அனைவரும் பயன்பெறத்தக்க நிலையான வளர்ச்சியால் ஏற்படும் பயனுக்கு அரசு உதவிகளும், மானியங்களும் ஈடாக அமையாது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். பெரும்பான்மையான ஏழை மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக உள்ள முதன்மைத் துறையில் தற்போதுள்ள தேக்க நிலையை நீக்கி அதன் வளர்ச்சியை ஊக்குவிக்க இந்த அரசு மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல், உயர் வளர்ச்சியை எய்துவதில் உள்ள தடைகளைக் களையும்

[2012 ஜனவரி 31

வகையில் நகர்ப்புறக் கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டும், பொருளாதாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் பொருட்டும் தீவிர அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது வருங்கால உத்திகளில் தொடர்ந்து முக்கியத்துவம் பெறும். பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டு, இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இத்திட்டங்களால் விளையும் பயனும், மேம்பட்ட சேவைகளும் மக்களை முழுமையாகச் சென்றடையும் வகையில் திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு ஒளிவு மறைவற்ற, திறமையான நிர்வாகத்தை வழங்கி நாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் இவ்வரசின் செயல்பாடுகள் அமையும்.

5. அண்டை மாநிலங்களுடன் இணக்கமான உறவைப் பேணுவதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. எனினும், துரதிர்ஷ்டவசமாக நீர் ஆதாரத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு கடைமடை மாநிலமாக உள்ளதால், தவறான குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட பரப்புரைகளாலும் மத்திய அரசு தொடர்ந்து காட்டும் அலட்சியப் போக்காலும், அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக அண்மையில் ஏற்பட்ட நிகழ்வுகளை நமது மாநிலம் மிகுந்த கட்டுப்பாட்டுடனும், திறமையுடனும் கையாண்டுள்ளது. அணையின் பாதுகாப்பு குறித்து பொது மக்களிடையே பீதியைக் கிளப்பும் நோக்குடன் கேரள மாநிலத்தால் பரப்பப்பட்ட தவறான பிரச்சாரங்களே இந்த நிகழ்வுகளுக்கு மூலகாரணமாக அமைந்துள்ளன. அணையின் பாதுகாப்புத் தன்மையை உறுதி செய்வதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். எனவே, இதுபோன்ற உள்நோக்கங்கொண்ட பிரச்சாரங்களுக்கு இரையாக வேண்டாம் என்று கேரள மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன். நமது மாநிலத்தின் உரிமைக்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் எவ்விதத்திலும் குந்தகம் ஏற்படாத வகையில் நீதிமன்றங்கள் உள்பட அனைத்து மன்றங்களிலும் நமது உரிமையை இந்த அரசு நிலைநாட்டும் என்று திட்டவட்டமாக கூறிக்கொள்கிறேன். இது குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு கேரள அரசை வலியுறுத்தும்படி மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். பல்வேறு



2012 ஜனவரி 31]

மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பிரச்சினைகள் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத நிலையில், இது குறித்த அமைப்பு முறைகளை மறுபரிசீலனை செய்வதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. அணையின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அணை அமைந்திருக்கும் மாநிலத்தில் உள்ள அணைப் பாதுகாப்புக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் அணை இருப்பதை விட, அணையின் மீது உரிமையுள்ள மாநிலத்தில் உள்ள அணைப் பாதுகாப்புக் குழுவின் கட்டுப்பாட்டில் அணை இருக்க வேண்டும் என்பது 2010 ஆம் ஆண்டு அணைப் பாதுகாப்பு சட்ட முன்வடிவில் உறுதி செய்யப்பட வேண்டும் என்று இந்த முக்கியமான தருணத்தில் மத்திய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

6. சென்னை, சேப்பாக்கம் அரசு அலுவலக வளாகத்தில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் நாள் இரவு ஏற்பட்ட தீ விபத்தின் விளைவாக தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்ததோடு மட்டுமல்லாமல் தீரமுடன் போராடிய அலுவலர்கள் சிலருக்கும் கடும் காயம் ஏற்பட்டது. உயிரிழந்த தீயணைப்பு வீரரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என விரும்புகிறேன். இத்துயர சம்பவத்தில் தீரமுடன் போராடிய இவ்வலுவலர்களுக்கு, 2012 ஆம் ஆண்டின் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களை இவ்வரசு வழங்கியுள்ளதை நான் பாராட்டுகிறேன். வருங்காலங்களில் இதுபோன்ற பேரிடர் நிகழாது தவிர்க்கும் வகையிலும், இத்தகைய இடங்களில் பணிபுரிபவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், அரசு அலுவலகங்கள் செயல்படும் அனைத்து தொன்மையான கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித் தன்மையை மதிப்பீடு செய்ய ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

7. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் சமூக விரோத சக்திகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளில் பாரபட்சமின்றி உறுதியாக இந்த அரசு நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, ஐந்து ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழகத்தில் மீண்டும் அமைதி திரும்பியுள்ளது. உள்ளாட்சித் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றதை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும்,

[2012 ஜனவரி 31

ஊடகங்களும் பாராட்டியுள்ளன. அமைதிக்குக் குந்தகம் ஏற்பட வாய்ப்புள்ளதென கருதப்பட்ட பல்வேறு விழாக்களும் அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளன. பலவந்தமாக அபகரிக்கப்பட்ட அப்பாவி மக்களின் நிலங்கள் இந்த அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளால் மீட்டளிக்கப்பட்டு அதன் மூலம் அம்மக்கள் பயன் அடைந்துள்ளனர். ஏழை எளிய மக்களை அச்சுறுத்தி சுரண்டும் இத்தகைய நில அபகரிப்பாளர்களை சட்டத்தின்முன் கொண்டுவந்து உரிய நீதியை வழங்க இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

8. உலகப் பொருளாதாரத்தில் தொடர்ந்து காணப்படும் மந்தநிலை, அரசின் நிதி உறுதித் தன்மையையும் (fiscal stability), அதிக செலவுகளை அரசு மேற்கொள்ளும் திறனையும் பாதிக்கும் வகையில் உள்ளது. மந்தமான வளர்ச்சி, தொடர்ந்து காணப்படும் அதிக பணவீக்க அளவு, சரிந்துவரும் ரூபாயின் மதிப்பு, உயர்ந்து வரும் வட்டி விகிதம் ஆகியவை நாம் உயர் வளர்ச்சி இலக்கை எட்டுவதற்கு தடைக்கற்களாக உள்ளன. இதன் விளைவாக, முதலீடுகள் குறைந்து வருவதுடன் தேசிய அளவில் 2011—2012 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி மதிப்பீடு கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பொருளாதார மந்தநிலையின் எதிர்மறை விளைவுகளால் மாநிலப் பொருளாதாரம் பாதிக்கப்படுவது தவிர்க்க இயலாதது ஆகும். இந்த எதிர்மறை சூழ்நிலைகளுக்கிடையிலும், உள்கட்டமைப்புக்கும் சமூகப் பாதுகாப்புக்கும் எவ்வித குறைவுமின்றி போதிய நிதியை ஒதுக்கீடு செய்வதில் இந்த அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. வரும் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்த அரசு 1,85,000 கோடி ரூபாயைத் திட்டப் பணிகளுக்குச் செலவிட திட்டமிட்டுள்ளது. இது பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவிடப்பட்ட 85,000 கோடி ரூபாயை விட இரண்டு மடங்குக்கும் அதிகமானதாகும். இந்த உயர் இலக்கு தமிழ்நாட்டை மீண்டும் துரித வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்.

9. மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் மத்திய அரசு சட்டங்களை இயற்ற தொடர்ந்து முயற்சி செய்து வருவதும், திட்டங்களை வடிவமைப்பதில் அனைத்து மாநிலங்களுக்கும்



2012 ஜனவரி 31]

ஒரே மாதிரியான அணுகுமுறையைத் திணிப்பதும் மத்திய—மாநில உறவுகளில் ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்பட வழிவகுக்காது. திட்டமிட்ட குறிக்கோளை எட்டி, சிறந்த பலன்களைப் பெறுவதற்கு ஏதுவாக, தேசிய திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் இணக்கமான செயல்முறையைப் பின்பற்றி, பரந்த குறிக்கோள்களை மட்டும் மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும் என்றும், அத்தகைய திட்டங்களில் மத்திய நிதியுடன் மாநிலத்தின் நிதியையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, அந்தந்த மாநில அரசுகளுக்கே திட்டங்களை வடிவமைக்கும் சுதந்திரத்தை அளிக்கவேண்டும் என்றும் இந்த அரசு வலியுறுத்துகிறது. சரக்கு மற்றும் சேவை வரிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நம் மாநிலத்தால் சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்திய அரசு முழுமையான தீர்வு காண வேண்டும் என்று இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

10. தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் தொன்மையான பண்பாட்டைப் பாதுகாக்கவும் இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும். மூத்த தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,000/— ரூபாயிலிருந்து 2,000/— ரூபாய் என இருமடங்காக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். முந்தைய ஆளுநர் உரையில் தெரிவித்தவாறே திருக்குறள், தெரிந்தெடுக்கப்பட்ட பாரதியார் மற்றும் பாரதிதாசன் படைப்புகளை சீன மற்றும் அரேபிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறந்த தமிழ் அறிஞர்களின் படைப்புகளைப் பாதுகாத்து, அவற்றை அனைவரிடத்தும் கொண்டு செல்லும் வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட 1,472 புத்தகங்கள் தமிழ் இணைய பல்கலைக்கழக இணையதளத்தில் இந்த அரசால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

11. சென்ற ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 'தொலைநோக்குத் திட்டம் 2025' தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். தமிழ்நாட்டிற்கான இந்த அரசின் வருங்காலத் திட்டங்களையும் அவற்றைச் செயலாக்கும் வழிமுறைகளையும் விரித்துரைக்கும்

[2012 ஜனவரி 31

இத்திட்ட அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் வெளியிட இருக்கிறார்கள் என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிதல், முன்னுரிமைப்படுத்துதல், ஒப்புதல் அளித்தல், விரைந்து நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை வழி நடத்தக் கூடிய தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தினை தோற்றுவிப்பதற்கான சட்ட முன்வடிவு வரும் வரவு—செலவுத் திட்ட கூட்டத் தொடரின்போது அறிமுகப்படுத்தப்படும். முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 'உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி' என்ற ஒன்று தனியாக இந்த அரசால் ஏற்படுத்தப்படும். இந்த வகையில், திட்டச் செயலாக்கத்தில் அரசு மற்றும் தனியார் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைக்க 'அரசு—தனியார் பங்களிப்புக் கொள்கை' (Public Private Partnership Policy) ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும்.

*12.* கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த தொடர்மழை மற்றும் 'தானே' புயல் ஆகியவற்றால் பேரிழப்பைச் சந்தித்துள்ள மக்களின் துயரத்தைத் துடைக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. துரதிருஷ்டவசமாக இந்த வடகிழக்குப் பருவமழை காரணமாக 177 உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை உடனடியாக சீரமைக்க நவம்பர் 2011—ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 150 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. தானே புயலால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பயிர்கள், குடிசைகள், படகுகள், இதர கட்டமைப்பு வசதிகள் மிகப்பெருமளவில் சேதமடைந்ததையடுத்து, நிவாரணப் பணிகளுக்காகவும், இழப்பீடுகளுக்காகவும், மின்சாரம், குடிநீர், சாலைகள் உட்பட பழுதடைந்த கட்டமைப்புகளை சீரமைக்கவும் 850 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி ஆணையிட்டார்கள். முன்னெச்சரிக்கை தகவல் அளிக்கும் முறைகளைச் சரியாகப் பயன்படுத்தி, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டதையும், தாமதமின்றி உரிய நேரத்தில் நிவாரண உதவிகளை வழங்கியதையும் நான்



2012 ஜனவரி 31]

மனதாரப் பாராட்டுகிறேன். இத்தகைய பாதிப்புகளிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்குத் திரும்ப சாதாரணமாக பல மாதங்கள் ஆகுமென்றாலும், மாநில அரசின் திட்டமிட்ட தீவிரமான நிவாரணப் பணிகளின் காரணமாக ஒரு மாத காலத்திற்குள் பெருமளவு இயல்புநிலை திரும்பியுள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

*13.* நிலைப் பயிர்களான (perennial crops) முந்திரி, பலா, தென்னை முதலியன அழிந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், இதற்கான நிரந்தர மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்பட்டதுடன், ஒரு சிறப்பு நேர்வாக, நிலைப் பயிர்களை, குறிப்பாக முந்திரிப் பயிரை, வீரியம் மிக்க ஒட்டுச் செடிகளைக் கொண்டு, உயர் அடர் நடவு முறையில் மீண்டும் பயிரிட்டு, ஓராண்டுப் பராமரிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளவும், வருடாந்திரப் பயிர் வகைகள் (annual crops) பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் பயிர் செய்ய ஏதுவாக, விதையுடன் இடுபொருட்களும் அடங்கிய சிறு தளைகளை (mini kits), விலையின்றி வழங்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்குப் பதிலாக, அக்குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வீடுகள் அளிக்கும் வகையில் 1,000 கோடி ரூபாய் செலவில், ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் ஒரு மகத்தான திட்டம் இந்த அரசால் தொடங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளின் விவரங்களை எடுத்துக்கூறி தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து (NDRF) 5,248 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவி கோரும் விரிவான கோரிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இடைக்கால நிவாரணமாக 500 கோடி ரூபாயை அளித்துள்ள மத்திய அரசுக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்தியக் குழுவும் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டுச் சென்றுள்ளதைத் தொடர்ந்து, மாநில அரசு கோரியவாறு போதிய நிதியுதவியினை மத்திய அரசு விரைந்து அளிக்கும் என நான் நம்புகிறேன்.

[2012 ஜனவரி 31

*14.* வறுமையும் வேலையின்மையும் நமது சமுதாயம் எதிர்கொண்டுள்ள இரட்டைச் சவால்களாகும். பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வந்தாலும் வறுமையை ஒழிப்பதில் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. கிராமப்புற வறுமை ஓரளவு குறைக்கப்பட்டிருப்பினும் நகர்ப்புற வறுமைக்கான தீர்வு தொடர்ந்து ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது. எனவே, தற்போதுள்ள வறுமை ஒழிப்பு அணுகுமுறைகளுக்கு முற்றிலும் மாற்றாக ஒவ்வொரு குடும்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்தும் புதிய அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியம். கிராமப்புற வறுமை ஒழிப்பில் மாநிலத் திட்டங்களுடன் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், புது வாழ்வுத் திட்டம் போன்றவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் முயற்சிகள் தொடரும். கடந்த காலங்களில் நகர்ப்புற வறுமை ஒழிப்பு குறித்து உரிய கவனம் செலுத்தப் பெறாத நிலையில் நகர்ப்புறங்களில் நிலவும் அதிக வறுமை நிலையைப் போக்குவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வரும் வரவு—செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும்.

*15.* வறுமை, வேலையின்மையோடு தொடர்புடைய பிரச்சினையாகும். திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் மூலமாக இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறும் தகுதியுடையவர்களாக உருவாக்குவதையும், புதிய தொழில் முனைவோரை ஊக்குவித்து வேலைவாய்ப்பைப் பெருக்குவதையும், இருமுனை நடவடிக்கைகளாக இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. திறன் மேம்பாட்டு இயக்கம் சிறப்புடன் செயல்பட பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் திறன் வளர் பயிற்சிகளை ஒருங்கிணைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. திறன் வளர் பயிற்சிகளையும் பயிற்சி மையங்களையும் தேர்ந்தெடுத்தல் மற்றும் பயிற்சிகளைக் கண்காணித்தல், பயிற்சி பெற்றவர் வேலைவாய்ப்பைப் பெறும் வரை கண்காணித்தல் போன்றவை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். தமிழ்நாடு மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கத்தின் வழிகாட்டுதலோடு, மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கச் சங்கம் இதற்கான ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படும். இதனால் ஒரே மாதிரியான தரமான பயிற்சி முறையையும், கட்டணங்களையும் பல்வேறு துறைகளும்



2012 ஜனவரி 31]

எளிதாகப் பயன்படுத்தி தரமான பயிற்சி வழங்க வழிவகை ஏற்படுவதுடன், ஒன்றுக்கும் மேற்பட்ட துறைகளில் ஒரே நபர் பயிற்சி பெறுவதும் நிதி ஆதாரங்கள் வீணாவதும் தடுக்கப்படும்.

*16.* முதன்மைத் துறையில் வளர்ச்சி இருந்தால் மட்டுமே அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய வளர்ச்சி சாத்தியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்கும் வண்ணம், இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, வேளாண் துறையில் கட்டமைப்பை மேம்படுத்த தொடர் முதலீடு அவசியமாகிறது. வேளாண் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்க, மாநிலத் திட்டங்களுடன் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல், சிறு குறு விவசாயிகளுக்கு *100* சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம், சேமிப்புக் கிடங்கு வசதிகளை மேம்படுத்துதல், சந்தைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வேளாண்துறை புத்துயிர் பெற்றுள்ளது. மேட்டூர் அணையிலிருந்து முன்கூட்டியே பாசனத்திற்காக நீர் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதால், மாநிலத்தில் அபரிமிதமான குறுவை விளைச்சல் ஏற்பட்டது. இதனால், கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட *75.95* இலட்சம் டன் என்ற அளவை விஞ்சி இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி முதல் முறையாக *100* இலட்சம் டன் அளவினையும் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் இந்த அரசின் சிறப்புத் திட்டங்கள் கிராமப்புற ஏழை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. சுமார் *1.12* இலட்சம் குடும்பங்கள் *2011—2012* ஆம் ஆண்டில் இந்தத் திட்டங்களால் பயன்பெறும். இவற்றுடன், கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் வகையில், விரிவாக்க வசதிகளையும், கட்டமைப்புகளையும் இந்த அரசு வலுப்படுத்தி வருகிறது.

*17.* மீன்வளத் துறையிலும், ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் அனைத்தும் முதன்மைத் துறைக்கு சிறந்த ஊக்கத்தை

[2012 ஜனவரி 31

அளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் இவ்வரசுக்கு ஆழ்ந்த கவலையளிப்பதாக உள்ளது. நமது ஆட்சேபங்களுக்குப் பிறகும் இந்நிகழ்வுகள் தொடர்கின்றன. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கையிடம் கடுமையாக வலியுறுத்துமாறு இந்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். பாக் வளைகுடாப் பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைப் பாதுகாக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று, இந்த அரசு கேட்டுக்கொள்கிறது. கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதன் மூலமே தமிழக மீனவர்கள் இழந்த உரிமையை மீளப் பெற இயலும் என்ற இந்த அரசின் உறுதியான முடிவினை இத்தருணத்தில் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

18. நாட்டிலேயே தமிழகத்தில்தான் அனைவரும் பயன்பெறக்கூடிய பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசியை வழங்குவதுடன், அனைத்து அட்டைதாரர்களுக்கும் பருப்பு, சமையல் எண்ணெய், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்றவற்றை மானிய விலையில் இந்த அரசு வழங்கி வருகிறது. இந்த வகையில், மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள உணவுப் பாதுகாப்பு சட்டமுன்வடிவு, தற்போது அனைவரும் பெற்றுள்ள உணவுப் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுத்துவதுடன், மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசு பெறும் உணவு தானிய ஒதுக்கீட்டையும் குறைக்க வழிசெய்கிறது. எனவே, மத்திய அரசு முன்மொழிந்துள்ள இந்த உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் தற்போதைய வடிவை இந்த அரசு எதிர்க்கிறது. பொது விநியோகத் திட்டம் முறையாகச் செயல்படாத மாநிலங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சட்டமுன்வடிவு அனைவருக்கும் பயனளிக்கும் பொது விநியோகத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தி வரும் தமிழகத்திற்கு எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, சிறப்பாக பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் மாநிலங்களுக்கு உணவுப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விலக்களிக்கவோ, அம்மாநிலங்களுக்குப் பொருந்தும் வண்ணம் விதிகளில் உரிய மாற்றங்களை உள்ளடக்கி, இச்சட்டமுன்வடிவில் பெருமளவு திருத்தம் செய்யப்படவோ வேண்டுமென மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.



2012 ஜனவரி 31]

19. தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க புதிய தொழில் கொள்கையையும், முக்கிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளுக்கான துறைவாரியான கொள்கைகளையும் இந்த அரசு உருவாக்கி வருகிறது. தொழில் வளர்ச்சிப் பெருவழிகளில் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலமாக தொழிலக குழுமங்களின் (Industrial clusters) வளர்ச்சியை துரிதப்படுத்தி சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத் துறையிலும், மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிப்பதைப்போலவே, வன்பொருள் உற்பத்தியிலும் இந்தியாவின் முன்னணி மையமாக தமிழகத்தை உருவாக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. இதன் பொருட்டு, வன்பொருள் உற்பத்தியில் அதிக முதலீடுகளை ஈர்ப்பது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை அளிக்க தொழில்துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய வல்லுநர் குழு ஒன்று இந்த அரசால் அமைக்கப்படும்.

20. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தபடி, நொய்யல் ஆற்றில் கழிவு நீர் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு, பொதுக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்படச் செய்ய அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. அருள்புரம் பொதுக் கழிவு சுத்திகரிப்பு ஆலையில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவு நீரே வெளியேறாத நிலையை (Zero Liquid Discharge) எய்தக் கூடிய நானோ வடிகட்டல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், மூடிக் கிடக்கும் பொது சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்பட வைக்க வட்டியில்லாக் கடனாக 179 கோடி ரூபாயை இந்த அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. இது தவிர, நீதிமன்றத்தால் இழப்பீட்டுத் தொகை உறுதி செய்யப்படுவதை எதிர்நோக்கி, நொய்யல் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு 75 கோடி ரூபாய் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின்

[2012 ஜனவரி 31

இந்த நடவடிக்கை, சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் மற்றும் விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கை பிறக்கவும் வழிவகுத்துள்ளது.

21. இந்த அரசின் பல்வேறு தீவிர முயற்சிகளுக்குப் பின்னரும், மாநிலத்தின் மின் நிலைமை தொடர்ந்து கவலையளிப்பதாக உள்ளது. முந்தைய அரசு புதிய உற்பத்தியினை ஏற்படுத்தத் தவறியதாலும், மத்திய தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சார ஒதுக்கீடு செய்வது பற்றிய நமது கோரிக்கைகளுக்கு மத்திய அரசு செவிசாய்க்காத காரணத்தாலும் தமிழக மக்கள் மின் பற்றாக்குறையினால் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். கடன் சுமையால் மூழ்கும் நிலையிலுள்ள மின்வாரியத்திற்குப் புத்துயிரூட்ட 2,600 கோடி ரூபாயை பங்கு மூலதனமாகவும், 955 கோடி ரூபாயை கடனாகவும் இவ்வரசு வழங்கியுள்ளது. மின் உற்பத்தியை அதிகப்படுத்தவும், பற்றாக்குறையைக் குறைக்கவும் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து, காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்ய நிறுவப்பட்ட 556 மெகாவாட் தவிர, மாநிலத் தொகுப்பில் 30 மெகாவாட்டும் மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் பங்காக 113 மெகாவாட்டும் கூடுதல் மின் உற்பத்தித் திறனாக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த இரண்டாண்டுகளில் 4,704 மெகாவாட் அளவிற்குக் கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

22. சீரான பொருளாதார வளர்ச்சிக்கு தரமான சாலைக் கட்டமைப்பு இன்றியமையாததாகும். போக்குவரத்துத் திறன் மேம்பாட்டிற்காக, முக்கியச் சாலை வழிகளைத் தரம் உயர்த்துதல், புறவழிச் சாலைகளை உருவாக்குதல், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட பிற சாலைகள் போன்றவற்றை அகலப்படுத்தி வலுப்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. புதிதாக அமைக்கப்படும் சாலைத் திட்டங்களில் (Green Field Road Projects) நில உரிமையாளர்கள் மேம்பட்ட பயனைப் பெற



2012 ஜனவரி 31]

நிலத்திரட்டு முறை (Land Pooling System) கடைபிடிக்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிட்டபடி, செயல்பாட்டின் அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு ஒப்பந்த முறை, சோதனை அடிப்படையில் கோயம்புத்தூர் வட்டத்தில் விரைவில் தொடங்கப்பட்டு படிப்படியாக மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

23. கல்வி பெறும் உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவது குறித்த விதிகளை வகுத்து அறிவிக்கை செய்துள்ள இந்த அரசு, அவற்றை செயல்படுத்தவும் உறுதி பூண்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற கூடுதல் கட்டமைப்பு வசதிகள் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் பணியிடப் பற்றாக்குறையைப் போக்கிட 33,681 ஆசிரியர் பணியிடங்களும், 16,549 பகுதிநேர ஆசிரியர் பணியிடங்களும், 5,000 ஆசிரியரல்லாத பணியிடங்களும் நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன. கற்றல் முறையை எளிதாக்கவும், மாணவர்களின் சுமையைக் குறைக்கவும், 2012—2013 ஆம் கல்வியாண்டு முதல் முப்பருவ முறையை எட்டாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கல்வித் தரத்தை உயர்த்த அரசு எடுத்து வரும் இம்முயற்சிகள், அனைவருக்கும் இடைநிலைக் கல்வியை உறுதி செய்வதுடன் பள்ளிப்படிப்பை நிறைவு செய்து வெளியேறும் மாணவ—மாணவியரின் கல்வித் தரத்தையும், திறனையும் உயர்த்த வழிசெய்யும் என நம்புகிறேன்.

24. அனைவருக்கும் உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வி கிடைக்க இந்த அரசு எண்ணற்ற முயற்சிகளை எடுத்து வருகிறது. குறுகிய காலத்தில், 11 கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 34 அரசுக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் (courses) தொடங்கப்பட்டுள்ளன. நிர்வாக நடைமுறைக்கு சாத்தியமற்ற வகையில் முந்தைய அரசால் பல்வேறு இடங்களில் தொடங்கப்பட்ட அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, நாட்டிலேயே மிகப் பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக, விலையில்லா மடிக்கணினி வழங்கும் மாபெரும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். பெரிதும்

[2012 ஜனவரி 31

பாராட்டப்படும் இச்சிறப்பான திட்டம் நம் மாநில மனித வளத்தின் தரத்தை மேலும் மேம்படுத்தும் என நம்புகிறேன். மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்விகளுக்கு, மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள பொது நுழைவுத் தேர்வுமுறை நமது மாணவர்களின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் அதை நாம் தொடர்ந்து எதிர்ப்போம்.

25. புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 1.34 கோடிக்கும் மேலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில், இவ்வாண்டு ஜனவரி திங்கள் 11 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கூடுதல் பயன்களை உள்ளடக்கிய இத்திட்டம், ஏழை மக்களுக்குத் தேவையான சிறப்பு சிகிச்சைகளைப் பெற பேருதவியாக இருக்கும். பேறுகாலத்தில் தாய் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்றவற்றை மேலும் குறைக்கும் நோக்குடன், விரிவான மகப்பேறு அவசர சிகிச்சைப் பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டதுடன், பச்சிளம் குழந்தைகளுக்கான 41 புதிய அவசர சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, ஏழைத் தாய்மார்களின் மகப்பேறு உதவித் தொகையை நாட்டிலேயே மிக உயரிய அளவாக 12,000/- ரூபாய் என இந்த அரசு உயர்த்தியுள்ளது. தொற்று நோய் அல்லாத பிற நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, நோய்வாய்ப்பட்டவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய விரிவானதொரு இயக்கத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வனைத்து நடவடிக்கைகளும் அனைவரும் மருத்துவ வசதியைப் பெற வேண்டும் என்ற இந்த அரசின் நோக்கம் எட்டப்படுவதை உறுதி செய்யும்.

26. பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது. 2011—2012 ஆம் ஆண்டில், 539.83 கோடி ரூபாய் செலவில், 3,000 புதிய பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், முதல்முறையாக, ‘என்ஜின்’, ‘அடிச்சட்டம்’ (chassis) ஆகியவை நல்ல நிலையில் உள்ள 1,432 பழைய பேருந்துகளின் மறுகட்டுமானத்திற்கு 97.58 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்புதிய முயற்சிகள் போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மேம்படுத்தி, பொது மக்களுக்கு சிறந்த சேவையை அளிக்க உதவும்



2012 ஜனவரி 31]

என நம்புகிறேன். சென்னையில் ஒருங்கிணைந்த பன்முறை நகர்ப் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தும் நோக்கத்தில், ‘மோனோ ரயில்’ திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் விரைவாக நடைபெற்று வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

27. அரசின் சேவைகளை, மக்களை மையப்படுத்தி சிறப்பாகச் செயல்படுத்திட, தனியார் பங்களிப்புடன் மாவட்டப் புதுமை நிதியையும் இணைத்து அனைத்து மாவட்டங்களிலும் பயன்படுத்தப்படும். இந்த அரசால் கொண்டு வரப்பட்ட விரைவு வழி பட்டா மாறுதல் திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக 50 விழுக்காடு பட்டா மாறுதல்கள் நடந்துள்ளன. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு கருவறை முதல் கல்லறை வரையிலான விரிவான சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது.

28. பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதை மாநிலம் தழுவிய மக்கள் இயக்கமாக மேற்கொள்ள ஐந்து கோடி ரூபாயையும், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு பரிசோதனை அடிப்படையில் தார் சாலைகளை அமைப்பதற்கு 50 கோடி ரூபாயையும் இந்த அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருந்தது. இம்முயற்சியின் விளைவாக, பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 146 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுத்து, நீடித்த பயன்தரும் இதுபோன்ற சாலைகளை பெருமளவில் அமைக்க விரிவானதொரு திட்டம் செயல்படுத்தப்படும்.

29. பல்வேறு வகையான சுற்றுலாத் தலங்களைக் காண விரும்பி வரும் பயணிகளைக் கவரத் தேவையான பற்பல வளங்களை தமிழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த சேவைகளை அளிக்க இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்த வகையில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியில்

ஒருங்கிணைந்த சுற்றுலா உள்கட்டமைப்புத் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. அரசு—தனியார் பங்களிப்புடன் தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான கொள்கை வரும் ஆண்டுகளில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

30. நகர்மயமான மாநிலங்களில் முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால், நகர்ப்புறக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான திட்டமிடுதலிலும் முதலீட்டிலும் கணிசமான முன்னேற்றம் தேவைப்படுகிறது. மக்கள் நகர்ப்புறங்களில் அதிகமாகக் குடிபெயர்வதாலும், தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள் தேவைக்கு மிகக் குறைவாக இருப்பதாலும் அதிக நெருக்கடிகள் ஏற்படுகின்றன. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்பு இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III போன்ற பல்வேறு திட்டங்களை ஒன்றிணைத்து செயல்படுத்துவதன்மூலமாக இத்தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. புறநகர்ப் பகுதிகள் இணைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே, ஏழு பிற மாநகராட்சிகள் மற்றும் எட்டு நகராட்சிகளின் எல்லைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவைப்படும் கூடுதல் நிதி ஆதாரத்தைப் பெறுவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கம் (Chennai Mega City Development Mission), ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம் (Integrated Urban Development Mission) ஆகியவற்றை இந்த அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது. சாலைகள், தெருக்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களை மேம்படுத்துவதுடன் ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை முறைகளைச் செயல்படுத்தவும் இந்த அரசு தொடர்ந்து கவனம் செலுத்தும். பெருந்திட்டம் (Master Plan) இல்லாத விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், சீரான மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் புதிதாக பெருந்திட்டம் தீட்டப்படும்.

31. கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளையும், உள்கட்டமைப்பையும் மேம்படுத்த குக்கிராம அளவிலான அணுகுமுறையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. இதற்கென, தமிழ்நாடு கிராமப்புறக் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (Tamil Nadu Village Habitation Improvement Scheme - THAI) நமது



மாநிலத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இத்திட்டம், ஐந்தாண்டுகளில் அனைத்து குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளிலுள்ள 25,335 குக்கிராமங்களுக்கு, சாலை, குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும் சுகாதார வளாகங்களைப் புதுப்பிக்கும் ஒரு பெருந்திட்டம் துவங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புற வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தவிர முதலமைச்சரின் பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழும் ஒவ்வொரு ஆண்டும் சூரிய மின்சக்தி வசதி கொண்ட 60,000 பசுமை வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. இத்திட்டங்களின் வாயிலாக அனைத்து கிராமப்புற ஏழைகளுக்கும் போதிய அடிப்படை வசதிகளும் பாதுகாப்பான வீட்டு வசதியும் வழங்க இயலும்.

32. பெண்கள், குழந்தைகள், முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்காக இந்த அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. முன் எப்போதும் இல்லாத முயற்சியாக ஏழைப் பெண்களின் திருமணத்திற்கான நிதியுதவியை உயர்த்தி, திருமாங்கல்யத்திற்குத் தங்கக்காசும் வழங்குவது; பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு புத்துயிரூட்டியது; நாட்டிலேயே உயர் அளவாக, சமூகப் பாதுகாப்பு உதவித் தொகையை இரட்டிப்பாக உயர்த்தியது; அனைத்து மாவட்டங்களிலும் ஆதரவற்றோர் மற்றும் முதியோருக்காக ஒருங்கிணைந்த இல்லங்களை ஏற்படுத்தி வருவது போன்ற செயல்கள் நலிவடைந்த பிரிவினர் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள பரிவுக்கும், கருணைக்கும் சான்றாக விளங்குகின்றன. முன் எப்போதும் இல்லாத வகையில், ஐந்து இலட்சம் புதிய பயனாளிகள் சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு, முறைகேட்டைத் தடுக்கும் வண்ணம், அவரவர் வங்கிக் கணக்கின் மூலமாகவே நேரடியாகப் பணப் பட்டுவாடா செய்யவும் வகைசெய்யப்பட்டுள்ளது. ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட மக்களுக்கு

[2012 ஜனவரி 31

முழுமையான ஒரு சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தை தமிழ்நாடு பெற்றிருப்பதை இத்தகைய முயற்சிகள் உறுதி செய்யும் என நான் நம்புகிறேன்.

33. சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் பழங்குடியினர் போன்றவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூக நீதியை நிலைநிறுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க முயற்சிகளால் 1994 ஆம் ஆண்டின் சட்டம் 45 இயற்றப்பட்டது; அதனை அரசமைப்புச் சட்டம் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கும் வகையில் நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலோடு கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்பு திருத்தச் சட்டம்; பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசு ஆணை ஆகிய அனைத்தும் அனைவர் மனதிலும் நீங்காமல் நிலைத்திருக்கும். விடுதிகளில் தங்கிப் பயிலும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான உணவு மானியம் இந்த அரசால் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கே உரிய வகையில் உறுதியான முடிவெடுத்துள்ளார்கள். ஏழைகள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோர் நலனில் இவ்வரசு தொடர்ந்து தனிக் கவனம் செலுத்தும்.

34. சட்டமன்றத் தேர்தலில் பெருவாரியான வெற்றியை அளித்ததன் மூலமாக தமிழக மக்கள் தமக்களித்துள்ள மாபெரும் பொறுப்பை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தொடர்ந்து காணப்பட்ட ஊழலுக்கும் திறமையின்மைக்கும் மாற்றாக, வெளிப்படையான, திறமையான நிருவாகத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த மக்களின் எண்ணம் உள்ளாட்சித் தேர்தல்களில் மீண்டும் வெளிப்பட்டுள்ளது. இக்குறுகிய காலத்திலேயே, மாண்புமிகு முதலமைச்சர் தனது செயல்பாடுகளினால், அவர் மீதும், அவரது அரசின் மீதும், தமிழக



2012 ஜனவரி 31]

மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மெய்ப்பித்துள்ளார். மோசமான நிதிநிலை, பொருளாதார மந்தநிலை, உதவிட மறுக்கும் மத்திய அரசு போன்ற பல்வேறு தடைகளையும் தாண்டி இவ்வரசு இம் மாநிலத்தையும், மக்களையும் உயர்த்தும் தனது குறிக்கோளை நோக்கி தொடர்ந்து பீடுநடைபோடும். இந்த வகையில், நமது மாநிலத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல நாம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு உங்கள் அனைவரது பேராதரவையும் தமிழக மக்களின் ஒத்துழைப்பையும் கோருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் எடுக்கப்படும் இம்முயற்சிகள் அனைத்தும் நிச்சயமாக பலனளிப்பதுடன், தமிழகம் வெளிப்படையான, திறமையான, வளம் மிக்கதொரு புதிய சகாப்தத்தை நிச்சயம் படைக்கும் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன்.

நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்!

*******